மே 08 – 14, 2005
May 08 - 14, 2005
16.00
24 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



# கருத்தைக் கருத்தால் வெல்லமுடியாத கயவர்களின் காடைத்தனம்

# அரசியல் வம்பு தும்பு



அம்பி

### என்ன நியாயம்?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் கட்சியின் தலைமைத்துவம் மீது கடுமையான அதிருப்தியில் இருக்கிறார். நீண்ட காலம் நிலவிய இந்த அதிருப்தி கடந்த மே தினத்தன்று வெடித்துள்ளது.

கண்டியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்களைக் கூட்டிச்சென்ற குறிப்பிட்ட எம்.பிக்கு கட்சியின் தலைமையிடமிருந்து உரிய மரியாதை கிடைக்கவில்லையாம். இந்த எம்.பியின் செயற்பாடு வளர்ச்சியடைந்தால் அது தனது தலைமையை பாதிக்கலாமென்று கட்சித் தலைமை கருதுகின்றமையே இதற்குப் பிரதான காரணமாகுமென தெரிகிறது.

மே தினமன்று கட்சியின் முக்கியஸ்தர்களை அழைத்த ஜூனியர் தொண்டமான், மலையகத்தின் தலைவராகமாறுவதற்கு யாரும் முயற்சிக்கக்கூடாது என்று கடிந்தாராம். ஆனாலும், குறிப்பிட்ட கண்டி எம்.பியோ, கொள்கையில்லாக் கட்சியிலும், கோட்பாடற்ற தலைவரின் கீழும் தனக்கு இருக்க முடியாதென்று கூறிவிட்டாராம். எல்லாம் சரி. அந்த கண்டி எம்.பிக்கு கிடைக்கவிருந்த பிரதியமைச்சர் பதவியை வழங்கவிடாமல் தடுத்ததில் என்ன நியாயம் இருக்கிறது?

### வேறென்ன செய்ய

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு குறித்து நோர்வே வழங்கும் அழுத்தங்களுக்கு இன்னமும் பலனில்லை.

விடுதலைப்புலிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயமொன்றை மேறகொண்டபோது, பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக அரசு முன்வைத்த யோசனைகளை அங்குள்ள பிரதிநிதிகளிடம் விளக்கியதற்கு அப்பால் குறிப்பிட்ட கட்டமைப்பு யோசனைகளின் பிரதிகளையும் கையளித்தனர்.

இரகசியமான இந்த யோசனைகளை ஏன் இப்படி கையளித்து பகிரங்கப்படுத்தினீர்கள் என்று நோர்வேக்காரர்கள் விடுதலைப் புலிகளிடம் கேட்டனராம். "நாங்கள் இதனை வெளிக்காட்டாவிட்டால் நாம் சில யோசனைகளை ஆதரிக்கின்றோம், பலதை எதிர்க்கிறோம் என்று கூறுகிறார்கள். எனவேதான், அரசு இதனை வழங்கியது அதனை ஏற்றுக் கொண்டோம் என்று வெளிப்படுத்த யோசனைகளை கையளித்தோம்" என்று கூறினாராம் புலிகளின் அரசியல் பொறுப்பாளர்.

### கண்டறிய முடியாதா?

"கொஞ்ச நேரம் கொஞ்ச நேரம் கொஞ்சிப் பேசக் கூடாதா, அந்த நேரம் அந்தி நேரம் அன்புத் தூறல் போடாதா" இது வெறும் பாட்டல்ல.

தற்போதெல்லாம் கைத்தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொண்டால் அடுத்தவரின் தொலைபேசி மணி அடிப்பதற்கு பதிலாக பாட்டொலி கேட்கும். இது டிஜிட்டல் முறை

கடந்த வாரம் கடத்திக் கொலை செய்யப்பட்ட பிரபல பத்திரிகையாளர் சிவராமின் தொலைபேசியில் கேட்கும் பாடல் இது. அவர் கடத்திச் சென்று கொலைசெய்யப்பட்டு அவரின் இறுதிக்கிரியைகள் நடக்கும் வரை இந்த தொலைபேசி பாடல் அழைப்புமணி ஒலித்துக் கொண்டிருந்தது.

கொலையாளிகள் வசம் தொலைபேசி இருப்பது இதில் உறுதியாகிறது. அப்படியானால் குறிப்பிட்ட தொலைபேசியை வைத்திருப்பவரை நவீன விஞ்ஞான வசதிகளைக் கொண்டு ஏன் பாதுகாப்புத் துறையினரால் கண்டுபிடிக்க முடியாது? இது தான் பலரின் கேள்வி. வேலியே பயிரை மேய்ந்தால் வேறென்ன செய்யமுடியும்?

### என்ன பயம்?

பத்திரிகையாளர் சிவராம் கொல்லப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ பொது மேடைகளில் சிவராமைப் பற்றி விமர்சித்திருந்தாராம்.

சிவராம் கொல்லப்பட்ட பின்னர் பலர் விமல் வீரவன்ஸவை சாடினார்கள். இதனையடுத்து மிரிஹான பொலிஸ் நிலையத்திறகுச் சென்ற விமல், தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்தார்.

இதுபற்றி பத்திரிகையாளரொருவர் விமலிடம் கேட்டபோது "சேச்சே. நான் முறைப்பாடெதுவும் செய்யவில்லையே" என்றாராம். இதைச் சொல்வதில் என்ன பயம்?

### வாக்காளர் பாவம்

மேதினக் கூட்டங்களை அனைத்து அரசியல் கட்சிகளும் வெகு விமரிசையாக நடத்தின. ஆனால், ஜாதிக்க ஹெல உறுமய மட்டும் மே தினக் கூட்டமொன்றை நடத்தவில்லை.

இதன் காரணமாக ஜாதிக்க ஹெல உறுமய கட்சிக்குள் கருதது முரண்பாடு ஏற்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தினர் ஜாதிக்க ஹெல உறுமயவுக்கு வாக்களிக்கவில்லையா? ஏன்று கேட்கினறனராம் பலர். நியாயந்தானே?

# சுனாமி நிவாரணமும் சங்கங்களின் மோசடியும்

சுனாமி ஆழிப்பேரலை அழிவை ஏற்படுத்தி நான்கு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் திருகோணமலையில் நிவாரணப் பணிகள் இன்னும் சுறுசுறுப்படையவில்லை. மாறாக கையில் கிடைக்கும் நிவாரணப் பொருட்களையும் பணத்தையும் சுருட்டிக் கொள்வதில் தனிப்படவர்களும் பல்வேறு அமைப்புகளும் முனைப்புடன் செயற்படுவதை மட்டும் அவதானிக்க முடிகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து திருகோணமலையில் நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டன. ஆனால் இந்தப் பணிகளினால் பாதிப்புற்றோர் பயனடைந்தனரா? இல்லை. மாறாக அகதிகள், அரசியல் வாதிகள், அலுவலர்கள் என முத்திரை குத்திக்கொண்ட பலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்கள் பைகளை மட்டும் நிரப்பிக் கொள்வதை பார்க்க முடிகிறது.

ஏற்கனவே துருப்பிடித்துப் போயிருந்த மீனவர் சங்கம், விளையாட்டுச் சங்கம், நலன் புரிச்சங்கம் போன்ற சங்கங்கள் சுனாமியின் பின்னர் தூசிதட்டப்பட்டு விளித்துக் கொண்டன. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என வாயளவில் கூறிக்கொண்டு தங்கள் மடியை மட்டும் அவை நிரப்பிக் கொண்டன, கொள்கின்றன. இத்தகைய சங்கங்களின் மோசடிகள் குறித்து பல்வேறு முறைப்பாடுகள் இப்போது எழுந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் புண்பட்ட நெஞ்சங்களில் வேல் பாய்ச்சியுள்ள செய்தி என்னவென்றால், அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட நிவாரணப் பொருட்கள் எல்லாம் அவர்களின் கைகளுக்கு எட்டாமல் மாயமாக மறைந்து போனமையே. இதனால் சில சங்கங்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம் என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளே வாய்விட்டுக் கூறுகின்றனர்.

திருமலையில் சில சங்கங்கள் தமது மனம்போன போக்கில் வாரிச் சுருட்டிக்கொண்டன. ஆனால், இவை இப்போது உத்தம புத்திரர்களாக தமது நடிப்பாற்றலை வெளிக்காட்டி நிற்கின்றன.

சுனாமிக்குப் பின்னர் அரசதரப்பு, பாதிக்கப்பட்டோர் குறித்த பதிவுகளையும் விபரங்களையும் பரிசீலிக்கத் தொடங்கியது. அரசசார்பற்ற நிறுவனங்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டன. நலன் விரும்பிகள் சமூக சேவையில் தம்மை அர்ப்பணித்தனர். இதனைக் கண்ட தன்னலவாதிகள் சிலர் விழித்துக் கொண்டனர். தூசி படிந்திருந்த சங்கங்களை தூசிதட்டி எழுப்பி அவற்றிற்கு புத்துயிர் கொடுத்தனர். தம்மை மக்கள் தொண்டர்களாக பம்மாத்துகாட்டினர். தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் பாதிக்கப்பட்டவர்களாகப் பதிவு செய்துகொண்டனர். அது மட்டுமா? ஐரோப்பிய நாடுகளில், ஏன் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருக்கும் தமது உறவினர்களின் பெயர்களையும் பதிந்து கொண்டனர். இந்த மோசடியை பூசி மெழுகுவதற்காக திருகோணமலையில் சுனாமியால் பாதிக்கப்படாதவர்களின் பெயர்களையும் பதியவேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பயன் ஏதும் கிடைக்காது பாதிக்கப்பட்டவர்களாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

திருமலைப் பகுதியில் ஒரு மீனவர் சங்கம் . அது அண்மையில், அரசசார்பற்ற நிறுவனமொன்று பதிக்கப்பட்டோருக்கு வழங்கிய சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை தனது அங்கத்தவர்களுக்கு பங்கிடுவதாகக் கூறிப் பெற்றுக்கொண்டது. ஆனால் சங்க அங்கத்தவர்களிடம் தலைக்கு இரு நூறு ரூபாய் பெற்றுக்கொண்டு தான் அப்பொருட்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது. சங்கத்தின் அலுவலகத்தை புனரமைப்பதற்கே இந்தப் பணம் பயன்படுத்தப்படும் என்று காரணம் கற்பிக்கிறது இந்தச் சங்கம். ஆனால் அதன் தலைவரும் செயலாளரும் இது தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான தகவல்களையே தருகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால் பல அங்கத்தவர்கள் பொருளாளரிடம் அல்லாது ஓர் இளைஞர் குழுவிடம் பணம் கட்டியுள்ளனர். அப்பணத்துக்கு என்ன நடந்தது என்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று கையைவிரிககிறார் சங்கப் பொருளாளர் இப்போது.

இந்த விடயம் குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் காதுகளில் விழுந்தபோது அது தலையிட்டு பாதிக்கப்பட்டோருக்கு பொருட்களை பெற்றுக் கொடுத்துள்ளது.

மேற்படி மீனவர் சங்கத்தின் இன்னொரு விளையாட்டு என்னவெனில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மக்கள் வங்கி மூலம் மாதம் ஐயாயிரம் ரூபா வீதம் பெற்றவர்களிடமிருந்து தலா ஐந்நூறு ரூபா வீதம் பெற்றுள்ளது தான். இவ்வாறு பெற்றுக்கொண்ட மொத்தம் 21 ஆயிரம் ரூபாவில் இப்போது ரூபா இரண்டாயிரம் மட்டும் மீதி உள்ளதாம்.

எஸ்.எஸ்.ஆர்

நிவாரணப் பொருட்கள் பங்கீட்டில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என பாதிப்படைந்த ஒருவர் நிர்வாகத்துடன் முரண்பட்டு இறுதியில் அது கைகலப்பில் முடிவடைந்தது மட்டுமன்றி இவ்விடயம் இப்போது பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளது. தவிர நிர்வாகமுறைகேடுபற்றி

(07ஆம் பக்கம் பார்க்க)

# வாசகர் இதயம் பேசுகிறது

திக்கெட்டும் ஒளிபரப்பும் சுடரே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் அரசியல் கட்டுரைகள், சிறுகதை, கவிதைப்புனல், தொடர்கதை என்பன என்னை மிகவும் கவர்ந்து உள்ளன. சுடரே உன் சேவை என்றுமே தொடர எனது வாழ்த்துக்கள்.

*புனிதா, யாழ்ப்பானம்.*

பல்சுவை அம்சங்களைத் தந்து வாரந்தோறும் இதழ் விரிக்கும் சுடர்ஒளியே!

சமீபத்தில் வெளியான பாலாவின் விடுதலையின் முதற்பகுதியை படித்தேன் அருமையிலும் அருமை. வாசகர்களாகிய எமக்கு தொடர்ந்து விடுதலையை முழுமையாக உன் இதழ் மூலம் வழங்க முன்வந்தமைக்கு எமது நன்றிகள். மேலும் புதிய விடயங்களை உள்ளடக்கி எமது தேடல்களுக்கு தீனி இடவேண்டும் என அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*அன்னரனி, திருகோணமலை.*

வாசகர் தேடல்களுக்கு மதிப்பளித்து தேசமெங்கும் சிறகடித்துப் பறந்து வரும் சிறப்பு மிகு சுடர் ஒளியே!

அரசியல் நிலவரங்களை, திரைமறைவு தில்லு முல்லுகளை, இலக்கியப்படைப்புக்களை, இதயத்தை தொடும் இன்பரசமான கவிதைகளை எல்லாம் அள்ளித் தந்து ஆனந்த மூட்டும் அற்புத விளக்கே! உனது ஒளி உலகனைத்தும் பரவட்டும்.

*பாலமுருகன், மட்டக்களப்பு.*

சுடர் விடும் சுடர்ஒளியே!

வாரம் தோறும் உன்வரவை எதிர்பார்த்துக்காத்துக் கிடக்கும் எண்ணற்ற வாசகர்களில் நானும் ஒருவன். நீ வந்தவுடன் தான் எனக்கு வாரமே ஆரம்பமானது போல் உள்ளது. அருட்தந்தை பாப்பரசர் குறித்த கட்டுரை பாப்பரசரின் ஒட்டு மொத்த வாழ்வையே எமக்குப் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியது. மேலும் உன் சேவை சிறக்க எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

*நவகரன், ஹட்டன்.*

சுடரே!

வாரந்தோறும் உன்வரவை எதிர்பார்த்து காத்துக் கிடப்பேன் நான் கடைமுன்றலில் நீ கண்ணில் பட்டவுடனேயே பரவசம் பொங்கும். ஓடிச்சென்று உடன் அதைவாங்கிப் படித்து விட்டுத்தான் ஏனையவை எல்லாம். உன்னுடைய ஆக்கங்கள் அத்தனையும் முத்துக்கள். வாசிக்கும் நெஞ்சங்களையோசிக்க மட்டுமல்ல நேசிக்கவும் வைக்கும் பத்திரிகை சுடர்ஒளி என்றால் அதுமிகையாகாது.

*கௌதமன், ஏறாவூர்.*

ஒளிபரப்பும் சுடர்ஒளியே!

உன்புனிதமான சேவை இனிதே தொடர என் வாழ்த்துக்கள்.

தமிழர் தன்மானப் பத்திரிகையாக தலைநிமிர் பத்திரிகையாக நீ புரியும் சேவை மகத்தானது உனது கீர்த்தியை கூறிமாளாது. அந்தளவு அளவிடற்கரியது. பலதரப்பட்டவற்றையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் நீ பல திக்கும் ஒளிவிட்டு பிரகாசிக்க உளமார வாழ்த்துகிறேன்.

*குமுதினி, கிளிநொச்சி.*

பூரண சந்திரனாய் சுடர்விடும் சுடர்ஒளியே! நீதாங்கி வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. அரசியல் கட்டுரைகள், சிறுகதை, தொடர்கதை, பித்தன்பதில்கள், கவிதைப்புனல், நோய்தீர்க்கும் உனது மருத்துவ பதில்கள் எல்லாமே மிக நன்றாக உள்ளன. உன் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

*லிங்கநாதன், நெல்லியடி.*

# கபட நாடகம் ஆடும் இனவாதக் கூட்டு

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசும் விடுதலைப்புலிகளும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான விடயத்தில் அரச பங்காளிகளான ஜே.வி.பிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான இழுபறி தொடர்ந்து கொண்டு இருப்பது அனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில் "எவர் எதிர்த்தாலும் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியே தீருவேன்" என பிலியந்தலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அதிரடியான அறிவிப்பு எந்தளவு தூரம் சாத்தியமாகும் என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் சர்வதேச சமூகத்தால் வழங்குவதென உறுதி அளிக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய் உதவி இன்னமும் வந்து சேரவில்லை நிதியை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான அரசு - புலிகள் இடையிலான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாமையே இதற்கு காரணமாக உள்ளது.

இத்தகைய நிலையில் எப்பாடுபட்டாவது பொதுக்கட்டமைப் பொன்றை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்தின் மத்தியில் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்று கிடைக்க வேண்டிய நிதி முழுவதையும் பெற்றுக்கொள்வதே அரசின் நோக்கமாக இருக்கிறது.

ஆனால், பொதுக்கட்டமைப்பு என்ற விடயத்தில் சிங்களப் பேரினவாதக் கட்சிகளும், பௌத்த அமைப்புகளும் பகிரங்கமாகவே தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

அதிலும் அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி, பொதுக்கட்டமைப்பில் அரசு கையொப்பமிட்டால் அடுத்த நிமிடமே தான் அரசிலிருந்து வெளியேறிவிடுவதாக மிரட்டிவருகிறது.

எனவே சிங்களப் பௌத்த மேலாண்மைவாதிகளான ஜே.வி.பியினரை எதிர்த்துக் கொண்டு இந்தப் பொதுக்கட்டமைப்பை முன்னெடுக்கும் துணிச்சல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், அதன் தலைவர் ஜனாதிபதிக்கும் இருக்கிறதா என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஜே.வி.பியை முழுமையாக ஒதுக்கித் தள்ளிவிட்டு ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவாரானால் அது பாராட்டப் படவேண்டிய ஒன்றே.

ஆனால், இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு ஒன்றை காண்பதற்கான சமாதான முயற்சிகளை ஜே.வி.பி. எப்படி எதிர்த்து வருகிறதோ அதேபோலவே அழிவுற்று, அவலமடைந்துள்ள மக்களுக்காக ஏற்படுத்த வேண்டிய பொதுக்கட்டமைப்பையும் தீவிரமாக எதிர்த்து வருகிறது.

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டு ஏற்படுத்தப்பட்ட போதே, இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வு காணும் விடயத்தில் இணக்கமின்றியே கூட்டமைத்துக் கொண்டனர்.

ஜே.வி.பி இனவாதக் கூச்சல்போட்டுக்கொண்டும் யுத்த முழக்கம் இட்டுக் கொண்டும் இருந்த காலத்திலேயே அவர்களுடன் கூட்டமைத்த ஜனாதிபதி, இப்போது அவர்கள் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகள் முதற்கொண்டு அனைத்தையும் எதிர்ப்பதாக ஊளையிடுவது வேடிக்கையான விடயமாகும்.

இருந்தும் தனது பதவிக்கால இறுதி எல்லையில் நிற்பதாலும், தானும் ஏதாவது செய்தது போல சர்வதேச சமூகத்திற்கு காட்டுவதற்குமே பொதுக்கட்டமைப்பு, இனப்பிரச்சினை தீர்வு என்பவற்றில் அக்கறையுள்ளவர் போல ஜனாதிபதி நாடகமாடுகிறார்.

இந்த நாடகத்தால் ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் ஆரம்பமான சிறு முரண்பாடு மேல் மாகாண சபையில் சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரை பதவி கவிழ்க்கும் அளவுக்கு முற்றியுள்ளது.

மாகாணசபையில் தங்களுக்குள் அதிகாரப்பகிர்வு விடயத்தில் எழுந்துள்ள சர்ச்சையை சமரசமாகத் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையிலுள்ள அரசு, ஜே.வி.பி.யை சமாளித்துக் கொண்டு சிறுபான்மையினரான தமிழர்களுக்கு பொதுக்கட்டமைப்பு போன்ற விடயத்தில் கடுகளவு நியாயத்தையாவது வழங்கக் கூடும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

பேரினவாதிகளின் ஆதரவின்றி அரசைத் தொடரமுடியாது என்ற கையாலாகத் தனத்தில் சிக்கி இருக்கும் இந்த அரசினால் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கும்.

அப்படி அவர்கள், எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பியினரை தூக்கி எறிந்துவிட்டு ஏதாவது உருப்படியாக செய்வதற்கு முன்வரமுடியுமா என்பது எல்லோர் மனதிலும் எழும் கேள்வியாக உள்ளது.

உண்மையில் நாட்டுமக்களுடைய நன்மையை விட - ஒட்டுமொத்த பாதிப்புக்கு உள்ளான மக்களின் அவலத்தை விட - ஆட்சிக்கதிரையே சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி இரண்டுக்கும் அவசியமாக உள்ளது.

எதற்கும் விலகிப்போவதாக மிரட்டுகின்ற ஜே.வி.பி., அரசை விட்டு விலகவும் இல்லை, விலகப்போவதும் இல்லை. ஏனெனில் அரச பங்காளிகள் என்ற அந்தஸ்து எப்போது அவர்களுக்கு இல்லாமற்போகிறதோ அன்றே அவர்களின் அமைச்சுப்பதவிகள் உட்பட அனைத்து சுகபோகங்களும் சென்றுவிடும். தாம் செல்லாக்காசாகிவிடுவோம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

சுதந்திரக்கட்சியும் இவர்களை தூக்கி எறியத் தயாராக இல்லை. இவர்களை கூட்டிலிருந்து வெளியேற்றிவிட்டால் நமது அரசு பெரும்பான்மையை இழந்து 'டம்மி'யாகிவிடும் என்பது இவர்களுக்கும் புரியும். எனவே இரு கட்சிகளும் ஒன்றை விட்டு ஒன்று பிரியப்போவதில்லை என்பது திண்ணம்.

ஆனால் இவர்கள் நாள்தோறும் ஆடும் கபடநாடகத்தின் மூலம் நாட்டு மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிக் காலம் கழித்துக் கொண்டு ஆட்சியில் இருக்க முடியும் என்பதே இவர்களுடைய எண்ணம்.

செந்தணல்

நாட்டு மக்கள் பேரலை அனர்த்தத்தில் சிக்கி உடமைகளை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து நலன்புரி நிலையங்களில் நாளாந்தம் சொல்லணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது அவர்களுடைய அவலத்தை தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்காது லண்டனில் தனது பிள்ளைகளுடன் கொஞ்சிக் குலாவி உல்லாசமாக சுற்றித் திரிந்து விட்டுவந்துள்ள ஜனாதிபதியும் தனது சுய லாபங்களுக்காக சுனாமி அகதிகளுக்கு சென்ற உணவுப்பொருட்களைக் கூட சூறையாடிய காடைத்தனமான ஜே.வி.பி.யும் இணைந்த இந்த அரசு மக்களுக்காக எந்த ஒன்றையும் உருப்பாடியாகச் செய்யப் போவதில்லை என்பதே யதார்த்தம்.

NATIONAL CHILD PROTECTION AUTHORITY
NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotection.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk
unicef

# எதிர்கால சந்ததியினருக்கான சிந்தனை


தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா

உங்கள் பழக்கவழக்கங்களை உங்களது குழந்தை பின்பற்றும். அதேபோன்று உங்களது பேரக்குழந்தைகள் மூலமும் உங்கள் பழக்கவழக்கங்களைக் காணும் நாளொன்று உருவாகலாம். அதனால்தான் நாம் நல்ல பழக்கவழக்கமுடையவர்களாக வாழ வேண்டும்.

சிறிய குழந்தைகளின் உள்ளத்தை விரைவில் நோகடிக்க முடியும். உள்ளத்தை நோகவைக்க உடல்ரீதியான சித்திரவதைகள் மட்டுமே அவசியமில்லை. ஆனாலும், வார்த்தைகளாலும், உணர்வுகளாலும் நோகடிப்பது உடல்ரீதியாக துன்புறுத்துவது போன்றே கடுமையானது. இவை நீண்ட காலங்கள் சென்ற பின்னரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. அதனால் சிறுவர்கள் முன்னிலையில் ஏசிக்கொள்ளுதல், அடித்துக்கொள்ளுதல், சாதி, இனம் குறித்து பேசுதல், திட்டுதல், சாபமிடுதல், அவர்களது ஆத்ம கௌரத்தை இல்லாதொழிக்கும் வகையில் செயற்படுதல் என்பன சிறுவர்கள் உள்ளத்தில் நீண்டகால தாக்கத்தையும், விளைவுகளையும் உண்டுபண்ணக்கூடியவை. மீண்டும் மீண்டும் இதுபோன்ற மனத்தா... கங்களுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எதிர்காலம் தன்னம்பிக்கையற்றதாகவும், தோல்வி, தா... மனப்பான்மை கொண்டதாகவும் இருப்பதுடன் அவர்கள் பெரியவர்களாக வளரும்போது ...கார மனமுடையவர்களாக காணப்படுவார்கள். மேலும் காரணமின்றி கத்தி சத்தமிடுதல், ...டாத வார்த்தைகள் பேசுதல், பயமுறுத்துதல், அடித்து துன்புறுத்துதல் என்பவற்றை பிரச்...களைத் தீர்க்கும் வழிகளாக பயன்படுத்துவர்.



- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா
குறிப்பு : குமுதுமாலி மத்துமகே

### பரிசுக்கான இவ்வாரக் கேள்வி

1. சிறுவர் உள்ளத்தில் தாக்கம் ஏற்படுத்தக் கூடியவை எவை?

* அனுப்பப்படும் சரியான விடைகளில் பத்து விடைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பரிசில்கள் வழங்கப்படும்.

* விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஊடகப்பிரிவு
தேசிய சிறுவர் பாதுகாப்பு
அதிகாரசபை
330, தலவத்துகொட வீதி,
மாதிவெல, பிடகோட்டே.

# கருத்துலகமும் வாழ்வியக்கமும்

நாம் வாழும் இந்த உலகத்தைப் பல உலகங்களாக வகைப்படுத்தலாம். எல்லையற்ற பிரபஞ்சமாக எங்கும் வியாபித்து நிற்கும் பேருலகம். ஒன்பது கிரகங்களில் ஒரு கிரகமாக, சூரியன் என்ற நட்சத்திரத்தைச் சுற்றி உலா வரும் பூவுலகம். மனித உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகம். மூளை நரம்பு மண்டலமாக மண்டை ஓட்டுக்குள் மறைந்திருந்து செயற்படும் மனவுலகம். இப்படியாகப் பல உலகங்களுக்குள் எமது வாழ்க்கை ஓடுகிறது. இந்த வகையில் கருத்துலகம் என்ற ஒரு உலகமும் உண்டு.

கருத்துலகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எப்படி இயங்குகிறது?

கருத்துலகம் என்றால் கருத்துக்களால் அமையப்பெற்ற உலகம். எண்ண உலகம். மனித சிந்தனைகள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் என்ற ரீதியில் கருத்துக் குவியல்களைக் கொண்ட உலகம். பலவகைப்பட்ட இந்தக் கருத்துருவங்களின் ஒட்டுமொத்தமான கட்டமைப்பையே இங்கு கருத்துலகமெனக் குறிப்பிடுகிறேன்.

கருத்துக்கள் என்றால் மனிதர்களின் மனக் குகைக்குள் வசிக்கும் அரூபமான நிழலுருவங்கள் அல்ல. அன்றி, அவை அனுபவத்திற்கு அகப்படாத பூடகமான மானசீகப் பொருட்களுமல்ல.

கருத்துக்களுக்கு இருப்புண்டு. திண்ணியமான பொருளிய வாழ்வுண்டு. கருத்துக்கள் மனித பண்பாட்டு உலகிலிருந்து பிறப்பெடுக்கின்றன. அவை மனிதர்களைப் பற்றிக்கொள்கின்றன. கருத்துக்களுக்கு அபார சக்தியுண்டு.

அவை மனிதர்களைப் பற்றிக்கொண்டு அவர்களது வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியுடையனவாக இயங்குகின்றன.

அது ஒரு பொது நூலகம். நகரப் புறத்தில் ஒரு அழகிய பூங்காவிற்கு அண்மையில், அமைதியான சூழலில் அமையப்பெற்றிருக்கிறது. அதனுள் ஆயிரமாயிரம் நூல்கள். நேர்த்தியாக, ஒழுங்கு வரிசையாக, அலுமாரிகளிலும், நிலையடுக்குகளிலும் அவை அடுக்கப்பட்டிருந்தன. இலக்கியம், தத்துவம், சட்டம், அரசியல், சமூகவியல், இறையியல் என்ற ரீதியில் பல துறை சார்ந்த பல்லாயிரம் புத்தகங்கள். ஒரு பிரமாண்டமான கருத்துலகத்தின் பொருளியத் தோற்றப்பாடாக அந்நூலகம் விளங்கியது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் மற்றொரு பரிமாணத்தை - பக்கத்தை - அந்த மனிதருள் புதைந்திருக்கும் இன்னொரு அதிசய ஜீவனை - வெளிப்படுத்துகிறது 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.

அந்த நூல்கள் அனைத்துமே உயிரற்ற சடப்பொருளாக, வெறும் அச்சிடப்பட்ட கடுதாசிப் பண்டங்களாகக் காட்சி தந்த போதும், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு அதிசயமான இறவாப் பொருள் ஒளிந்து கிடந்தது. ஒவ்வொரு நூலிலும் ஒரு படைப்பாளியின் ஆன்மா குடிகொண்டிருந்தது.

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

அந்தப் படைப்பாளி மரணித்து பல ஆண்டுகள் கழிந்திருக்கலாம். அல்லது பல நூற்றாண்டுகள் கழிந்திருக்கலாம். ஆயினும் அப்படைப்பாளியின் எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், கோட்பாடுகள், அவன் ஆய்வுசெய்து கண்ட உண்மைகள், அவனது கண்டுபிடிப்புகள், வாழ்வனுபவத்திலிருந்து அவன் பெற்ற தரிசனங்கள் - எல்லாமே எழுத்து வடிவத்தில் நூலாக, அவனது வாழ்வின் சாட்சியாக, காலத்தால் சாகாத அவனது சிருஷ்டியாக, ஒரு மனிதத்தின் பேருண்மையாக அங்கு இருப்புக் கொண்டுஇருந்தது.



தினமும் அந்த நூலகத்திற்குப் பல வாசகர்கள் வருவார்கள். அவரவருக்குப் பிடித்தமான துறைகளில், அவரவருக்குப் பிடித்தமான நூல்களைத் தெரிந்தெடுத்துப் படிப்பார்கள். வாசிப்பில், வாசகனுக்கும் அந்த நூலைப் படைத்த படைப்பாளிக்கும் மத்தியில் ஒரு விசித்திரமான உறவு நிகழ்கிறது. மானசீகமான ஒரு சந்திப்பு நிகழ்கிறது. அகவயமான ஒரு சங்கமம் நிகழ்கிறது. படைப்பாளியின் எழுத்துலகில், அவனது கருத்துலகில், அவனது அனுபவக் களத்தில் பிரவேசிக்கும் வாசகன் படைப்பாளியுடன் இணைந்து ஒரு தேடுதலை நடத்துகிறான்.



ஒரு விசாரணையை நடத்துகிறான். அந்தத் தேடுதலில், அந்த விசாரணையில், படைப்பாளியின் தரிசனத்தை வாசகன் தரிசித்துக் கொள்கிறான். அவனது பார்வை இவனைப் பற்றிக் கொள்கிறது. கருத்துக்கள் கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை நிகழ்கிறது.

அன்றொரு காலம், பல யுகங்களுக்கு முன்னர், இந்தப் பூமியில் ஒரு கருத்துப் பிறப்பு எடுத்தது. கருத்துக்களின் மையக் கருத்தாக அது புனிதம் பெற்றது. மனிதர்களை அது ஆழமாகப் பற்றிக் கொண்டது.

அந்தக் கருத்துக்கு மனிதன் பொருள் வடிவம் கொடுத்தான். மலைகளைப் பெயர்த்து, பாறைகளைத் தகர்த்து, கலை வடிவம் கொடுத்தான். ஆயிரமாயிரம் ஆலயங்கள் எழுந்தன.

அந்தக் கருத்துக்கு மனிதன் விளக்கங்களைக் கொடுத்தான். வியாக்கியானங்கள் அளித்தான். அர்த்தங்களைக் குவித்தான். வேதங்கள் தோன்றின. சித்தாந்தங்கள் பிறந்தன. கிரியைகள், சடங்குகள் தோன்றின. நிறுவனங்கள், நிர்வாக பீடங்கள் தோன்றின. கோடானு கோடி அடியார்கள் தோன்றினர். ஆராதனைகள் நடத்தினர்.

அந்த மையக் கருத்திலிருந்து இப்பூவுலகில் பல நாகரீகங்கள் தோன்றின. கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து, பௌத்த நாகரீகங்களாக மானிடம் பிளவுபட்டது. போர்கள் நிகழ்ந்தன. நாடுகளும் இனங்களும் மோதின. பூமியில் இரத்த ஆறுகள் ஓடின. அந்தக் கருத்து மனிதர்களை ஆழமாகப் பற்றிப் பிடித்து அவர்களை ஆட்டிப்படைத்தது.

கருத்துலகம் மனிதர்களை இயந்திரமாக இயக்குகின்றது. மனிதர்களின் நம்பிக்கைகளுக்கும் அவர்களது சமூக செயற்பாடுகளுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

சுதந்திர நாடுகள் மீது படையெடுப்பது, ஆக்கிரமிப்பது, மக்களின் ஆதரவுடைய ஆட்சிகளைக் கவிழ்ப்பது, ஆட்சி மாற்றங்களை அரங்கேற்றுவது, சர்வாதிகார ஆட்சிகளுக்கு முண்டுகொடுப்பது, பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பது, இனவாத அரசுகளுக்கு ஆயுதஉதவி வழங்குவது, மனித இனத்தை அழிக்கவல்ல அணுவாயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பது - இவ்விதமான அட்டூழியங்களை அமெரிக்க அரசு புரிந்து வர அவையெல்லாம் சுதந்திரத்தின் பெயரால் நியாயப்படுத்தி வருகின்றன அமெரிக்க கருத்துருவாக்க நிறுவனங்களான ஊடகங்கள்.

நாம் பிறந்த கணத்திலிருந்தே கருத்துலகம் எம்மை ஆட்கொண்டு விடுகிறது. நாம் விழிப்புணர்வு பெறுவதற்கு முன்னரே எமக்கு விலங்குகளை மாட்டிவிடுகிறது. விபரமறியாத பருவத்திலேயே எமது விதியை நிர்ணயித்து விடுகிறது.

நாம் பிறந்த கணத்திலிருந்து எமக்கொரு பெயர் என்றும், எமக்கொரு சாதி என்றும், எமக்கொரு மதம் என்றும், மரபு என்றும், சம்பிரதாயம் என்றும் கருத்துலகம் குத்திவிடும் சமூகக் குறிகள் சுடுகாடு வரை எம்மைப் பின்தொடர்கின்றன. நாம் வாழ்ந்த குடும்பம், நாம் படித்த பாடசாலை, நாம் வழிபட்ட கோவில், நாம் வாசித்த நூல்கள், நாம் பழகிய நண்பர்கள், நாம் வரித்துக் கொண்ட ஆசான்கள் என நாம் கொண்ட உறவுகளால் காலம் காலமாக எமது மூளையில் திணிக்கப்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், உலகப் பார்வைகளால் எமது மனமும் எமது சுயமும் தோற்றப்பாடுகொள்கின்றன. எம் மீது திணிக்கப்பட்டதும் நாமாகப் பற்றிக் கொண்டதுமான கருத்துக்கள் எமக்கு உள்ளே இருப்புக் கொண்டு எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் கருத்துக்களால் வனையப் பெற்ற சமூகப் பொம்மைகள்.

கோவிலில் அந்தச் சடங்கு நடக்கிறது.

## விடுதலை

குருவானவர் பூசை செய்கிறார். அப்பத்தையும் முந்திரிப் பழச்சாறுடைய கிண்ணத்தையும் உயர்த்திப் பிடித்தவாறு செபிக்கிறார். சிலுவையில் நிகழ்ந்த கடவுளின் மரணம் குறியீட்டுச் சடங்காக மேடையேறுகிறது. அவன் முழங்காலிட்டபடி தலைகுனிந்து, கைகூப்பியவாறு வணங்குகிறான். நம்பிக்கை என்ற கருத்தியக்கம் அவனை ஆட்கொண்டு இயக்கியது. அன்று காலை, ஒரு மணிநேரமாக அவனும் அவனுடன் சேர்ந்து மற்றவர்களுமாக அந்த மத பண்பாட்டுச் சடங்கில் பங்குகொண்டனர்.

ஒருவனது நடத்தை, அவனது செயற்பாடு, அவன் நாளாந்தம் நடத்தும் வழிபாடுகள், மற்றவர்களுடன் சேர்ந்து அரங்கேற்றும் சம்பிரதாயச் சடங்குகள், உறவு முறைகள் எல்லாமாக அவனது சமூகச் செயற்பாடுகள் அனைத்தையுமே கருத்துலகம் நிர்ணயித்து விடுகிறது.

மனிதர்கள் தம்மை அடையாளம் காணவும், சமூகப் பிறவிகளாக தம்மை உருவாக்கிக் கொள்ளவும், மற்றவர்களுடன் உறவுகொண்டு பண்பாட்டு வாழ்வில் பங்கு கொள்ளவும் கருத்துலகம் வழிசெய்து கொடுக்கிறது. இந்த வகையில் தனிமனித வாழ்விற்கும், சமூக சீவியத்திற்கும் கருத்துலகம் ஆதாரமாக விளங்குகின்றது.

கருத்துக்கள் சமூக உலகம் சார்ந்தவை. கருத்துலகமானது சமூக உலகத்தின் ஒரு துணை உலகமாக, சமூகக் கட்டமைப்பின் ஓர் அமைப்பாக, மனித வாழ்வியக்கத்தை ஊடுருவி நிற்கிறது.

கருத்துலகத்தை சமூக உலகமே படைக்கிறது. சமூக நிறுவனங்களே கருத்துலகை உருவாக்கம் செய்கின்றன.

குடும்பம், பாடசாலை, பல்கலைக்கழகம், கோவில், கட்சி, ஊடகம் என்ற ரீதியில் கருத்து உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. குடும்பம் மொழியைக் கற்றுக் கொடுக்கிறது. பேசும் ஆற்றலைப் பெற்றுக்கொடுக்கிறது. எழுத்தறிவைப் பெற்றுக்கொடுக்கிறது பாடசாலை. பல்வேறு கலைகளையும் புலமைகளையும் பயிற்றுவித்து அறிவாற்றலை வளர்த்துவிடுகிறது பல்கலைக்கழகம். அடுத்த உலகம் பற்றியும் அழியாத ஆன்மா பற்றியும், எல்லாம் வல்ல இறைசக்தி பற்றியும் போதனை செய்கிறது மதம். கருத்துப் பரப்புரை செய்கிறது கட்சி. தகவல்களைத் தந்து கருத்துக்களை விதைக்கிறது ஊடகம். பேசும் மொழியாக, எழுத்தாக, பாடங்களாக, போதனைகளாக, பிரசங்கமாக, பிரசாரமாக, செய்தியாக, தகவலாக பல்வேறு வழிகளில் பல்வேறு வடிவங்களாக பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக கருத்துற்பத்தியும் கருத்துத் திணிப்பும் நிகழ்கின்றன. நாம் பிறந்த கணத்திலிருந்தே எமது மனதின் நினைவுப் பசுமையில் கோடானு கோடி கருத்துருவங்கள் விதைக்கப்படுகின்றன. நாம் விசாரணை செய்யாது விழுங்கிக் கொள்ளும் கருத்துக்களிலிருந்தும் நாம் விரும்பிப் பற்றிக்கொள்ளும் எண்ணங்களிலிருந்தும் அவற்றின் தன்மைகளிலிருந்தும் எமது சுயம் வளர்கிறது; எமது ஆளுமை வனையப் பெறுகிறது; எமது சிந்தனையும் செயற்பாடும் சீவியமும் அமைந்து விடுகிறது.

கருத்துக்களைப் படைத்து, அந்தக் கருத்துக்களை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தை கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூகக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் கருத்துற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இன்றைய நவயுகத்தில் ஊடகங்களே பிரதான கருத்துற்பத்தி நிறுவனங்களாகக் கொள்ளப்படுகின்றன. மனிதர்கள் மீது கருத்தாதிக்கம் செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்குக் கருத்துத் திணிப்பு அவசியம் என்பதால் உலகத்திலுள்ள பல அரசுகளும் அதிகாரவர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களாக ஊடகங்களைத் தமது அதிகாரக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்றன. கருத்துக்களை மக்கள் மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்களின்

கருத்து விலங்கிட்டு மனித மனங்களைச் சிறைகொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கின்றார்கள். மனிதர்களை விழித்தெழச் செய்யாது அவர்களை அறியாமை உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்தக் கருத்துப் போதையையே பாவித்துவருகின்றனர். அடிமை கொண்ட மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வைக் கொன்றுவிட கருத்தாதிக்கமானது ஒரு கனரக ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம்



## தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2005





ஆலய முகப்புத் தோற்றம்

## குருக்களின் ஆசிச்செய்தி

ஸ்ரீ பொன்னம்பலவாணசுவாமி திருவருள்கைகூடி, கடந்த பத்தாம் திகதி அன்று ஆலயம் புதுப்பிக்கப்பட்டு வர்ண வேலைகள், கொட்டகை வேலைகள், தேர் வர்ணவேலைப் பணிகள் ஆகியவைகள் பூர்த்தி செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று 26ஆம் திகதி செவ்வாய் முதல் கெடியேற்ற விழா நடைபெற்றுவருகின்றது.

பஞ்சகுண்ட மகாயாகத்தில் இலட்சார்ச்சனையும், ஹோமமும் நடைபெற்று தினமும் பகல் மகேஸ்வரபூஜையும், மாலையில் சுவாமி ஒவ்வொரு காட்சி அலங்காரத்துடன் எழுந்தருளி அடியார்களுக்குஅருள் பாலிப்பது அளப்பரிய சிறப்பாகும்.

இப்பணிகள், சிறப்புற உதவிய அடியார்கள்,தொண்டர்கள், நிதிநல்கிய தர்மசீலர்கள், உபயகாரர்கள், அனைவருக்கும் நன்றிகூறி அனைவர்க்கும் ஸ்ரீ சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பாலவாணசுவாமியின் திருவருள் கிடைக்கப் பிரர்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

சுபம்

இறைபணியிலுள்ள
முத்தமிழ் குருமணி
நா. சர்வேஸ்வரக்குருக்கள்.

## "வரலாற்றுச் சிறப்புடைய கதிரமலை"

முதல் தமிழ் இராச்சியமான மருதப்புரவீக வல்லியின் கணவனாகிய உக்கிர சிங்க மன்னனால் அரசாட்சி செய்யப்பட்ட கதிரமலைப்பதியில் வீற்றிருந்து அருள் பாலிப்பவர் ஸ்ரீ சுவர்ணாம்பிகை தேவி சமேத பொன்னம்பலவாண சுவாமியாகும்.

தலவிருட்சமாக வில்வம், நெல்லி ஆகியவையும் வாணலிங்க வடிவமாக லிங்கமும், நாகரு வடிவமைப்பில் ஆலயதிரிதளவிமானமும், பஞ்சதள ராஜகோபுரமும், தேர்வடிவமைப்பில் நவக்கிரக ஆலயமும், எண்கோண வடிவமைப்பில் அஷ்டலக்ஷ்மியும், சித்திரவேலைப்பாடுடைய தேர் அழகும் ஒருங்கு சேர அமைந்தது கதிரமலைச்சிவன் தேவஸ்தானமாகும்.

இவ்வாலயத் திருப்பணிகள் நடைபெற்று இப்போது மகோற்சவம் நடைபெறும்வேளையில் ஆலய அறங்காவலர்கள், அடியார்கள், தொண்டர் சபையினர், உபயகாரர்கள், ஆலய குருமார்கள் எல்லோரது பெருமுயற்சியாலும் சிறப்புற்றுள்ள இக்கோயிலின் அருட்சிறப்பு மிக உயர்வுடையதாகும். கதிரமலையார் அடி தொழுது வாழ்வோமாக.

கு.செல்வஸ்தான்
அதிபர்,
சுன்னாகம்.

( ஆம் பக்கம் பார்க்க)



சுவாமி வீதியுலா வரும் காட்சி.

புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட நாயன்மார்களின் ஐம்பொன்னினாலான சிலைகள்



மலராக்கம் :- த.தினேஸ், சுன்னாகம்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-


உள்ளூர் பழத்திலிருந்து நெல்லிரசம், ஜாம் வகைகள், சோஸ் வகைகள், கோடியல் வகைகள் ஆகியவற்றைப் பெற்றிட
ஐசுபி பழத் தொழிற்சாலை
சுன்னாகம்

ரிலக்ஸன் வெதுப்பகம்

துவாரகன் காட்வெயர்
சகலவிதமான கட்டடப் பொருட்கள், கல், மணல், சீமேந்து, கூரைத்தகடுகள், கம்பிவகைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

உள்நாட்டு, வெளிநாட்டு
டிலெக்ஸ்
சுன்னாகம்

கணனி அச்சு வேலைகள் மற்றும்
இறப்பர் முத்திரை 24 மணித்தியாலத்தில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
ஆய்வுக்கட்டுரைகள் [மகசீன்] சிறந்த முறையில் கட்டிக்கொடுக்கப்படும்
(அந்தோனியார் கோவிலுக்கு அருகில்)
சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

INTERNET BROWSING CENTER
Kumaran's Group
No 145, K.K.S Road
Chunnakam
Telephone No: 0773174454

K.R.S
RASAM RICE MILL
Power House Road, Chunnakam
Tel: 021 4591958

பாண், பனிஸ், கேக் வகைகள், பிஸ்கட் வகைகள் ஆகியவற்றைச் சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிப்பவர்கள்
பாபு வெதுப்பகம்
சுன்னாகம்.

கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
ஜெயகிருஷ்ணா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
இல.20, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

பாடசாலை உபகரணங்கள், பத்திரிகைகள், Kit கட்கள் போன்றவற்றைச் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றிட
சுன்னாகத்தில் புகழ்பெற்ற புத்தக வியாபாரிகள்
ஸ்ரீ கரன் புக் சென்றர்
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.

ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
பாடசாலை மாணவர் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை சகல பாடப்புத்தகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

ரஞ்சனாஸ்
சுன்னாகம்
பைன் (Fine) செலக்சன்
சுன்னாகம்

சகலவிதமான பலசரக்குப் பொருட்கள், உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசித் தொடர்புகளைப் பெற்றிட
காமதேனு களஞ்சியம்
ஸ்ரேசன் றோட் சுன்னாகம்

"Your Success is our Ambition"
Computer Classes, Sales, Printing
Scanning, Cd Writing, Repairing
and Maintenance
VISUAL TECH
Station Road, Chunnakam.
Tel: 0777 - 187943

EUT
காலத்திற்கேற்ப கலைத்துவமான உருக்குத் தளபாடங்களின் உற்பத்தியாளரும் விநியோகத்தர்களும்
Equip Unit Trust
தலைமை அலுவலகம், தொழிற்சாலை
சுன்னாகம்.
: 0777 - 168128
முகவர்கள்:-
வாழ்வகம் 102, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
இசை வாணி, தளபாட விற்பனை நிலையம்,
முல்லைவசச்சாலை, புதுக்குடியிருப்பு.

# பித்தன் பதில்கள்

*வி.சாமினி — தெஹிவளை*

**கேள்வி: பித்தா! இம்முறை புதுவருடக் கொண்டாட்டம் எப்படி... என்ன பலகாரம் செய்தீர்... வீட்டில்...?**

பதில்: பலகாரம் எதுவும் செய்யவில்லை. சுனாமியை முன்னிட்டு இம்முறை புதுவருடம் கொண்டாடப் போவதில்லை என்று உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கெல்லாம் ஒரு அறிக்கை வெளியிட்டேன். நல்ல பலன் கிடைத்தது. நான் புதுவருடம் கொண்டாடவில்லை என்ற அனுதாபத்தில் சுற்றம் சூழ எல்



லோரும் நிறைய பலகாரங்களை கொண்டு வந்து தந்தார்கள்... வழமையாக எங்கள் வீட்டில் பலகாரம் செய்து கொண்டாடுவதை விட இம்முறை ஊரார் வீட்டுப் பலகாரம் எல்லாம் சேர்ந்து... புதுவருடம் ஓஹோ....

*கெ.கௌசல்யன் — புத்தளம்*

**கேள்வி: பித்தா! எனது காதலியை நான் அளவுக்கதிகமாக நேசிக்கிறேன். ஆனால், அதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை.... எனக்கு ஒரு ஐடியா தாருமேன் பிளீஸ்?**

பதில்: வார்த்தைகளால் வர்ணிக்க முடியாவிட்டால் என்ன கைகளால் வர்ணித்து காட்டவேண்டியதுதானே!

*த.வடிவேலழகர் — வவுனியா*

**கேள்வி: பித்தன் ஐயா! நமது நாட்டின் அரச அலுவலகங்களின் நிர்வாகம் — செயற்பாடுகள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

பதில்: எனது நண்பர் ஒருவர் சொன்ன கதை இது. தங்கள் அலுவலகத்தில் இட நெருக்கடி ஏற்பட்டதால் புதிய கட்டடம் ஒன்றுக்கு மேலதிகாரிக்கு விண்ணப்பித்தார்களாம், புதிய கட்டடத்துக்கு இப்போ நிதி இல்லை, எனவே அந்த அலுவலகத்தில் குவிந்து போயிருக்கும் பழைய தேவை இல்லாத ஆவணங்களை அப்புறப்படுத்தவிட்டு இட நெருக்கடியை சமாளியுங்கள்' என்று பதில் வந்ததாம்.

உடனே, பழைய—பாவனைக்கு தேவை இல்லாத பைல்கட்டுக்கள் சில இடத்தை அடைத்துக் கொண்டிருப்பதாகவும்.. எனவே அந்த பைல்களை எரித்துவிட அனுமதி தரும்படியும் மேலதிகாரிக்கு எழுதிப் போட்டார்களாம்.

அவரிடமிருந்து பல மாதங்களாக பதிலில்லை. எனவே, இதுபற்றி கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதி சில நாட்களின் பின்பு அவர்களுக்கு பதில் வந்ததாம். 'இடநெருக்கடியை சமாளிப்பதற்காக பழைய பைல்களை எரித்துவிட அனுமதி அளிக்கிறேன். ஆனால், எரிக்கப்பட உள்ள பைல்கள் எல்லாவற்றிலும் இவ்விரண்டு போட்டோ பிரதிகள் எடுத்து வைத்துவிட்டு அவைகளை எரித்துவிடவும்.'

இந்த உதாரணத்தை தெரிவிப்பது நாங்கள்... நமது அரச நிர்வாகம் பற்றி தீர்மானிப்பது நீங்கள்.

*த.வரதன் — துன்னாலை*

கேள்வி: பித்தா! இளவசரர் சார்ள்ஸ் திருமணம் முடித்து அவருக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவரது தற்போதைய மனைவி கமீலாவுக்கும் திருமணம் முடித்து பிள்ளைகள் இருக்கிறார்கள். இனிமேல் சார்ள்ஸ்—கமீலாவுக்கும் பிள்ளைகள் பிறந்தால் எல்லோரும் சமாதானமாக இருப்பார்களா? சண்டையிடுவார்களா?

பதில்: நம் ஊரிலே தான் உன்ரை பிள்ளையும் என்ரை பிள்ளையும் எங்கடை பிள்ளையோட சண்டை பிடிக்குது என்று புலம்பும் நிலை. ஆனால், மேல் நாடுகளிலே — அதுவும் வெள்ளைதோல்களிடம் — இது வெல்லாம் சின்ன விடயங்கள்.

*அ.அஜந்தன் — முள்ளிவாய்க்கால்*

**கேள்வி: பித்தா! நானும் நீரும் முற்பிறப்பில் ஒன்றாய் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் போது எமது வகுப்பில் படித்த பெண் ஒருவரை மாறிமாறி காதலித்தோம். கடைசியில் அவள் இருவருக்கும் அல்வா குடுத்தது ஞாபகம் இருக்கிறதா?**



பதில்: எந்தப் பிறப்பில்? எந்தப் பாடசாலையில்? எந்த வகுப்பில்? எந்தப் பெண்? சரியாக நினைவு வர மாட்டேன் என்கிறதே! ஏனென்றால் ஏகப்பட்ட பிறப்பிலே — ஏகப்பட்ட பாடசாலைகளில் — ஏகப்பட்ட வ்குப்புகளில் — ஏகப்பட்ட பெண்களை காதலித்திருக்கிறேன். கடைசியில் அவர்களெல்லாம் எனக்கு ஏகப்பட்ட அல்வாக்களைத் தந்துவிட்டு போயிருக்கிறார்கள். இதில் இது எது என்று தெரியவில்லையே!

*வ.கேதீஸ்வரன் — யோகபுரம்*

**கேள்வி: பித்தா... எனது கண்டிப்பான கேள்வி இது. நீர் ஏன் எடுத்ததுக்கெல்லாம் பெண்களை குறை கூறுகிறீர்?**

பதில்: நான் எங்கே குறைகூறினேன்? (இப்போது மனைவி எனது பக்கத்தில் நிற்கிறார்)

*ப.சந்திரன் — யாழ்ப்பாணம்*

**கேள்வி: பித்தா நான் கொழும்பில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றுகிறேன். எனது தொந்தி குறைவதாக**



**இல்லை. ஒரு வழி சொல்லுமேன்?**

பதில்: ஆமா! தினமும் காலை 'வாக்' போறதை விட்டிட்டு ஆட்டோவிலேயே எப்போதும் திரிந்தீர் என்றால் தொந்தி எப்படிக் குறையும்.

*தே.வைதேகி — மன்னார்*

**கேள்வி: பித்தா! எனது ஊர் நடிகரான ஜெய் ஆகாஷின் படங்கள் அடுத்து அடுத்து வெளிவருகின்றனவே! எப்படி உச்சத்துக்கு செல்வாரா?**

பதில்: செல்வார் போல்தான் தெரிகிறது. ராமகிருஷ்ணா பரவாயில்லை, குருதேவா... ஓகே... இப்போ செவ்வேல் ரீலீஸாகி இருக்கிறது. இனிமேல் அமுதே வர இருக்கிறது.... இன்னும் பல படங்களில் புக் ஆகி இருக்கிறார். ஆனால், சினிமா உலகுக்கேயுள்ள மாயவலைகளில் வீழ்ந்து காணாமல் போய்விடுவார் போல் இருக்கிறது. ஏனென்றால் அவரும் — குருதேவா நாயகியான பிரணதியும் சேர்ந்து அடிக்கும் கூத்தைப் பார்த்து சினிமா உலகே சிரிப்பாய் சிரிக்கிறதாம். இப்படியே போனால் எதிர்காலம் "0" தான்.

*வே.தணிகை — மல்லாவி*

**கேள்வி: பித்தா! இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததை பெரிய கொண்டாட்டமாக் கொண்டாடுகிறார்களே.. இதனால் தமிழர்களாகிய எமக்கு என்ன கிடைத்தது?**

பதில்: ஒரு நாள் லீவு கிடைக்கிறதே! இது போதாதா.....

*து.குமார் — கட்டிபுரம்*

**கேள்வி: பித்தா! உமக்கு எத்தனை கேள்விகள் எழுதி அனுப்பிவிட்டேன். ஆனால் எதற்கும் பதில் தர மாட்டேன் என்கிறீர். ஆனால், சிலரின் கேள்விகளுக்கு அடிக்கடி பதில் தருகின்றீர். தயவு செய்து இந்தக் கேள்விக்காவது பதில் தாருங்கள். நீங்கள் பதில் தந்தால் சாமிக்கு மொட்டை போடுவதாக நேர்த்தி வைத்திருக்கிறேன்.**

பதில்: யோவ்... உருப்படியான — ஒழுங்கான கேள்வி கேட்டால் நான் ஏனய்யா பதில் தராமல் இருக்கப் போகிறேன். நாதாரித்தனமான கேள்விகளைக் கேட்டுவிட்டு... அதற்குப் பதில் தரவில்லை என்று குறை சொல்லுகிறீர். உம்முடைய கேள்விகளின் லட்சணத்தில்... சாமிக்கு மொட்டை போடப் போறகிறீரோ...! ஏனய்யா... உமக்கு தலையை மொட்டை அடிப்பதை விட்டு விட்டு சாமிக்கு மொட்டை போட வெளிக்கிடுகிறீர்... தூ.....

*ச.தயான் — வெள்ளவத்தை*

**கேள்வி: பித்தா! உம்மிடம் ஒரு ரகசியம் கேட்க வேண்டும். அண்மையில் நடந்த சார்ள்ஸ் — கமீலா திருமணப் படம் பார்த்தீரா? அதில் நின்ற கமிலாவின் முதல் தார பிள்ளைகளின் முகத்தில் சாடை மாடையாக சார்ள்ஸின் சாயல் அடிக்கிறதே...! ஏற்கனவே கமிலாவை 30 ஆண்டுகளுக்கு மேல் காதலித்த சார்ள்ஸ் ஏதாவது கசமுசா பண்ணி இருப்பரோ?**

பதில்: ஆஹா... கிளம்பிட்டாங்கய்யா கிளம்பிட்டாங்க... யோவ் அது பெரிய இடத்து சமாச்சாரமய்யா. ஆயிரம் இருக்கும். நீர் 'கம்' என்று இருமய்யா....

*அ.தாக்ஷாயின் — அல்வாய்*

**கேள்வி: வெளிநாட்டுகளிலே உள்ள நமது உறவுகளால் நமது கலாசாரம் பாதிக்கப்படுகிறதா?**

பதில்: எல்லோரினாலும் இல்லை. ஒரு சிலரால். அண்மையில் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குச் சிகிச்சைக்காக வந்த இரண்டு பெரிசுகள் அங்குள்ள கதிரையில் அமர்ந்திருந்து பேசிய உடையாடல் இது..



*பெரிசு நம்பர் 1:* "எப்படி மகன் வெளிநாட்டிலே சுகமாக இருக்கிறானோ?"

*பெரிசு நம்பர் 2:* "ஓ... நல்லா சுகமா இருக்கிறான்"

*பெரிசு நம்பர் 1:* "ஊர்ப்பக்கம் வாறதில்லையோ...?"

*பெரிசு நம்பர் 2:* "ஏன் வாறேல்லை; ஒவ்வொரு வருஷமும் வாறவன்."

*பெரிசு நம்பர் 1:* "வரேக்கை மனைவியையும் கூட்டிக்கொண்டு வாரவனோ?"

*பெரிசு நம்பர் 2:* "ஓ.... ஒவ்வொரு முறையும் வரேக்கை மனைவி இல்லாமல் தனிய வரமாட்டான். இதுவரைக்கும் 3 — 4 பேரை கூட்டிக்கெண்டு வந்துவிட்டான்."

*செ.வதனோஜன், தாளையடி.*

**கேள்வி: பித்தா! உமது பதில்களைப் பார்க்கும்போது, முன்பு யாழ்ப்பாணத்தில் வெளிவந்த சஞ்சீவி பத்திரிகையில் பதில் தந்த வித்துவானின் பதில்களை வாசிப்பதுபோல் இருக்கிறது.**

பதில்: குருவின் சாயலில் சிஷ்யன் எழுதலாம். ஆனால், குருவைவிட திறமையாக எழுத முடியுமோ? வித்துவான் — கடல்... நான் — குளம்...

# கள்ளக் காதலில் ஈடுபட்ட 29 வயதுப் பெண் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டார்!

ஆப்கானிஸ்தானில் கள்ளக்காதலில் ஈடுபட்ட 29 வயதுப் பெண் நீதிமன்றத் தீர்ப்புப்படி கல்லால் அடித்துக் கொல்லப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் படக்ஷான் மாநிலத்தில் அர்கோ மாவட்டத்தைச் சேர்ந்தவள் அமினா. 29 வயதான இவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. அவள் கள்ளக் காதலில் ஈடுபட்டாள். இது வெளியே தெரியவந்ததும், மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அவளைக் கல்லால் அடித்துக் கொல்லும்படி மாவட்ட நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. அவளது கள்ளக்காதலனுக்கு 100 கசையடி கொடுக்கும்படியும் நீமன்றம் கூறியது.

நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக, அதிகாரிகள் அமினாவின் தாய் வீட்டுக்குச் சென்றனர். அங்கு தங்கி இருந்த அமினாவை வீட்டை விட்டு வெளியே இழுத்து வந்தனர். அவளது கணவனை அழைத்து அவளைக் கல்லால் அடித்துக் கொல்லும்படி கூறினர்.

அதன் பிறகு, அவரும், அவள் சாகும் வரை கல்லால் அடித்தார். கள்ளக்காதலனுக்கு 100 சவுக்கடி கொடுக்கப்பட்டது. அதன் பிறகு அவன் விடுவிக்கப்பட்டான்.

இஸ்லாமிய சட்டத்தின்படி ஆட்சி நடைபெறும் இஸ்லாமிய நாடுகளில் கள்ளக்காதல் தடை செய்யப்பட்ட ஒன்று ஆகும். இந்தக் குற்றத்துக்கு சவுக்கடி முதல் கல்லால் அடித்துக் கொல்வது வரையான தண்டனை கொடுக்கப்படுகிறது.

தாலிபான் ஆட்சி காலத்தில் இஸ்லாமிய சட்டம் நடைமுறையில் இருந்ததால், இது போன்ற கடுமையான தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இதே மாநிலத்தில் இப்படி கள்ள உறவில் ஈடுபட்ட பல பெண்களுக்கு இதே போல தண்டனைகள் கொடுக்கப்பட்டு உள்ளன.

தாலிபான் ஆட்சி அகற்றப்பட்டு, கர்சாய் ஜனாதிபதியான பிறகு இப்படி கடுமையான தண்டனை கொடுக்கப்படுவது இதுவே முதல் தடவை ஆகும்.

# நாய்களைப் பாதுகாக்க சட்டம்

மிருகங்களை நேசிக்கும் நாடு என்று சொல்லிக் கொள்ளும் இத்தாலியில் உள்ள டுரின் நகரில் புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது. அதன்படி, நாயை நாள் ஒன்றுக்கு 3 முறை வெளியே நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்லாவிட்டால், நாய் வளர்ப்பவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

நாய்களின் முடி மீது சாயம் பூசுவது, அழகுக்காக நாயின் வாலை அறுப்பது, அங்கங்களை சீர்குலைப்பது போன்றவற்றுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

வளர்ப்பு மிருகங்களை கைவிட்டாலோ அவற்றை சித்திரவதை செய்தாலோ 5 லட்சம் ரூபாய் அபராதமும், ஒரு ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று ஏற்கனவே இத்தாலியில் சட்டம் உள்ளது.

இப்படி எல்லாம் சட்டம் இருந்த போதிலும் இத்தாலியில் ஆண்டு தோறும் 1 லட்சம் நாய்களும், 2 லட்சம் பூனைகளும் கைவிடப்படுகின்றன என்று மிருகங்களின் உரிமைக்காக பாடுபடுபவர்கள் கூறுகின்றனர்.


## 'சுடர் ஒளி' வரி விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ. 147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (2,50,000 Col. Cms) | | |

# கருத்தைக் கருத்தால் வெல்ல முடியாத கயவர்களின் காடைத்தனம்



தமிழ் மண்ணையும் தமிழ்மக்களையும் ஆழமாக நேசித்த ஓர் உன்னதமான மனிதரை தமிழர் தேசம் இழந்துவிட்டது. தமிழ்தேசிய விடிவுக்காகவும், தமிழர்களின் விடுதலைக்காகவும் ஓங்கி ஒலித்த ஒரு உரிமைக்குரல் ஓய்ந்துவிட்டது. கருத்தை கருத்தால் வெல்லமுடியாத கோழைத்தனமானவர்களின் காடைத்தனத்துக்கு அப்பாவித் தமிழ்ப் பத்திரிகையாளனின் உயிர் பறிக்கப்பட்டுவிட்டது.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட தமிழினத்தின் தலைசிறந்த ஊடகவியலாளரும், உலகறிந்த தமிழ்ப் பத்திரிகையாளரும், தமிழ்நெட் ஆசிரியர் குழு உறுப்பினருமான தராக்கி எனப்படும் தருமரத்தினம் சிவராமையே இங்கு குறிப்பிடுகிறோம்.

சிவராம் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவருடைய இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்றன. இதில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

ஈழப்போராட்ட வரலாறு குறித்த சகல விடயங்களையும் அறிந்த அகராதியாக செயற்பட்டுவந்த இவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நன்கு புலமை பெற்றவர். ஆங்கிலப்பத்திரிகைகளிலும், தமிழ்ப் பத்திரிகைகளிலும் இராணுவ ஆய்வுக்கட்டுரைகளையும், அரசியல் விமர்சனங்களையும் எழுதி வந்தார்.

இவருடைய எழுத்துக்கள் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பபை பெற்றதுடன் இவருடைய எதிர்வுகூறல்கள் இராணுவ அரசியல் வட்டாரங்களையே கலக்கி வந்தன.

கட்டுரைகள் மட்டுமின்றி செய்திகளையும் உடனுக்குடன் பெற்று வழங்குவதிலும் சிவராம் திறமையாகச் செயற்பட்டார். தமிழ்நெற் ஆங்கில இணையத்தளத்தில் உடனுக்குடன் சம்பவங்கள் குறித்த செய்திகளை வழங்குவதில் பெரும்பங்கு வகித்தார்.

கடந்த ஜூலை மாதம் கொழும்பு புறநகர் பகுதியான கொட்டாவவில் கருணா குழுவைச் சேர்ந்த எட்டுப் பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை தமிழ்நெற் இணையத்தளத்தில் பார்வையிட்ட பின்னர்தான் பொலிஸாரே சம்பவ இடத்துக்குச் சென்றனர் என்றால், செய்திகளை சுடச்சுட வழங்கும் இவரின் தனித்துவத் தன்மையை எவரும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தச் சம்பவம் எவ்வாறு தமிழ் நெற்றுக்கு முதலில் தெரியவந்தது என்பது குறித்து சிவராமை விசாரணை செய்ய வேண்டும் என சில இனவாத அமைப்புகள் அப்போது கூச்சலிட்டன.

கடந்த வருடம் பத்திரிகையாளர் நடேசன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் இவரும் இலக்கு வைக்கப்படலாம் என்ற கருத்து பரவலாக நிலவியது. அப்போது சுவிஸில் இருந்த இவர் இந்த அச்சுறுத்தல்களுக்கு சிறிதும் அஞ்சவில்லை. தாயகம் திரும்பி ஊடகப் பணியைத் தொடர்ந்தார்.

"ஒரு நடேசனையோ அல்லது சிவராமையோ மண்டையில் போடுவதால் கொலையாளிகள் தமது இலக்கை அடைந்துவிட முடியாது" என்று நடேசன் படுகொலை செய்யப்பட்டபோது எழுதி இருந்தார் சிவராம்.

1959.08.11 ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்த இந்த வலிமைமிக்க செய்தியாளன் இளைஞனாக இருந்தபோது புளொட் அமைப்புடன் இணைந்து செயற்பட்டபோதும் பின்னர் அதிலிருந்து விலகி ஊடகத்துறையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

பலதடவைகள் அவரது வீடு பொலிஸாரினாலும், குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினராலும் முற்றுகையிடப்பட்டு தீவிரசோதனைக்கு உள்ளாகிஇருந்தது. அண்மைக்காலமாக அவருக்கு மிரட்டல்களும், கொலை அச்சுறுத்தல்களும் அதிகமானபோதும் தாயகத்திலிருந்து பணியாற்றவே அவர் விரும்பினார். எவரும் எதிர்பாராத வகையில் வெளிப்படையாகவே நடமாடினார். அதுவே அவருடைய உயிர் பறிக்கப்படவும் காரணமாக அமைந்துவிட்டது.

வழமைபோல் சம்பவதினமான வியாழனன்று (28.04.2005) வீட்டிலிருந்து புறப்பட்டார். நண்பர்களைச் சந்தித்து விட்டு படம் பார்த்துவிட்டு தாமதமாகவே வீடு வருவதாக மனைவியிடம் கூறிவிட்டுச் சென்றவர், சந்தர்ப்ப சூழ்நிலையால் தனது பத்திரிகை நண்பர்கள் சிலருடன் பம்பலப்பிட்டி உணவு விடுதியில் ஒன்று கூடினார்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த உணவுவிடுதி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிவராமின் வருகைக்காக உணவு விடுதிக்கு வெளியே நால்வர் நீண்டநேரமாக காத்திருந்தனர்.

இரவு ஏழுமணியளவில் உணவு விடுதிக்குள் சிவராம் நண்பர்களுடன் உள் நுழைந்தமையால் எட்டுமணிக்குள் வெளியே வந்துவிடலாம் எனக் கொலையாளிகள் கருதியிருப்பர். எனினும் இரவு 10.30 மணியளவிலேயே சிவராம் வெளியே வந்தார்.

இதனால் கொலையாளிகள் சிவராமின் வருகைக்காக நீண்டநேரம் காத்திருக்க நேரிட்டது. இவர்களில் இருவர் தமக்கிடையில் சிங்களத்திலும், இருவர் தமிழிலும் உரையாடிக்கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. தொலைபேசி மூலம் அவர்கள் அடிக்கடி உரையாடிக் கொண்டிருந்தனர்.

இந்த நால்வரது நடவடிக்கைகளும் அங்கு நின்ற ஆட்டோகாரர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி இருந்தது. மிக நீண்ட நேரமாக எவரதோ வருகைக்காக இவர்கள் காத்திருக்கிறார்கள் என்பதை ஊகிக்க முடிந்தது.

ஆனால், இரவு வேளையில் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நீண்ட நேரம் காத்திருப்பவர்கள் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்படும் நிலையில் இவர்களை ஏன் பொலிஸார் கண்டுகொள்ளவில்லை? அல்லது கண்டும் காணாதது போல் இருந்துவிட்டனரா? அல்லது கொலையாளிகள் இவர்களுக்கு வேண்டப்பட்டவர்களா? என பல கேள்விகள் எழுகின்றன.



இரவு 10.30 மணியளவில் உணவு விடுதியில் இருந்து வெளியே சிவராமும், அவரது மூன்று நண்பர்களும் வந்ததும் காத்திருந்த நால்வரில் ஒருவர் வாகனத்தை உடனடியாக அனுப்புமாறு தமிழில் கையடக்கத் தொலைபேசியில் தகவல் அனுப்பினார்.

இவ்வேளையில் சிவராமுடன் வந்தவர்களில் இருவர் ஆட்டோவில் பொரளைப் பக்கம் சென்றுவிட சிவராமும், அவரது நண்பர் குசல் பெரேராவும் கல்கிசைப் பக்கமாகச் செல்லும் பஸ்ஸுக்காக பஸ்தரிப்பிடம் நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தனர்.

சிவராமின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வரவே குசல்பெரேராவை விட்டுச் சற்று விலகி அழைப்புக்கு பதிலளிக்கச் சென்றார் சிவராம்.

சிவராமின் கவனத்தை திசை திருப்பவும் அவருடன் அருகாமையில் வந்த நண்பரை சற்று விலகச் செய்வதற்கும் கொலையாளிகளே திட்டமிட்டு அழைப்பை ஏற்படுத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

சிவராம் சுற்றுப்புறச் சூழலை கவனியாது தொலைபேசி உரையாடலில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த போது அவரின் அருகில் வெள்சாம்பல் நிற இன்ரகூலர் வாகனம் ஒன்று வந்து நின்றது.

சிவராம் எதிர்பார்ப்பதற்கிடையில் வாகனத்திலிருந்த குதித்த நால்வர் சிவராமை தூக்கி வாகனத்துக்குள் போட்டனர். இயல்பாகவே பலம்கொண்டவரான சிவராம் அவர்களுடன் கடுமையாக போராடியபோதிலும் அது பயனளிக்காமல் போய்விட்டது.

இவை எல்லாமே சிலநிமிட நேரங்களில் நடந்து முடிந்துவிட்டன. இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த குசல் பெரேரா நிலைமையை உணர்ந்து சத்தமிட்டுக் கொண்டு அந்த வாகனத்தை நோக்கி ஓடினார். ஆனால் வாகனத்துக்கு வெளியே நின்றவர்களில் இருவர் இவரை நோக்கி வரவே அச்சம் காரணமாக அங்கு வந்த பஸ்ஸில் ஏறிவிட்டார்.

10.30 மணியளவில் கடத்தப்பட்ட சிவராம் நள்ளிரவு ஒரு மணிக்குப் பின்னர் நாடாளுமன்றத்துக்கு பின்புறமாகவுள்ள வீதியோரத்தின் புதர் ஒன்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிவராம் கடத்தப்பட்டு சில நிமிட நேரத்திலேயே பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு கொழும்பு நகரின் அனைத்து பொலிஸ் நிலையங்களும் உஷார்ப்படுத்தப்பட்டன. அப்படியிருந்தும் அதியுயர் பாதுகாப்பு வலயப்பிரதேசத்தில் சடலம் கண்டெடுக்கப்பட்டமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

பொலிஸ்நிலையத்துக்கு முன்னால் வைத்துக் கடத்தப்பட்டு அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் சடலம் போடப்பட்டுள்ளமையை பார்க்கும்போது இக்கொலையை புரிந்தவர்கள் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் எதுவும் அற்றவர்கள் என்பது தெரியவருகிறது. அரசபுலனாய்வுப் பிரிவினரும், தமிழ்த் தேச விரோதக் கும்பலுமே இப்படுகொலைக்கு காரணமென புலிகள் குற்றம்சாட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

"ஒரு நடேசனையோ அல்லது சிவராமையோ மண்டையில் போடுவதால் கொலையாளிகள் தமது இலக்கை அடைந்துவிட முடியாது"

தனது இறுதி மூச்சுவரை இன விடுதலைக்காகவும், தமிழ்த்தேசிய எழுச்சிக்காகவும் உழைத்தமைக்காக புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் அமரர் சிவராமுக்கு 'மாமனிதர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் நடேசனை இழந்து ஒரு வருடத்துக்குள் மற்றொரு ஊடகவியலாளரை தமிழ்ச்சமூகம் இழந்துவிட்டது.

அன்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் தொடங்கிய தமிழ் ஊடகவியலாளர் படுகொலைப் பட்டியல் நீண்டு சென்றுகொண்டே செல்கிறது. மட்டக்களப்பில் நடேசனும், கொழும்பில் சிவராமும் இதற்கு இரையாகியுள்ளனர்.

இப்படுகொலைகளானது தமிழ் ஊடகவியலாளர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு, நேரடியாகவே விடுக்கப்படும் ஓர் அச்சுறுத்தல். ஊடகவியலாளர்களை குறிவைத்து தொடரும் இப்படுகொலைகளானது ஊடகத்துறைக்கு விடுக்கப்பட்டு வரும் ஒரு எச்சரிக்கை.

இந்தப்படுகொலைகளால், நிராயுதபாணியாக பணியாற்றும் ஓர் ஊடகவியலாளன் நாட்டில் சுதந்திரமாக நடமாடக் கூட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இது வேதனைக்குரிய, வெட்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இதைத் தடுத்து நிறுத்தி நாட்டில் சட்டம், ஒழுங்கை காப்பாற்ற வேண்டிய அரசும், அரச படைகளும் கொலையாளிகளுடன் தொடர்புபட்டு நிற்பது போலவே தெரிகிறது. அன்று நிமலராஜன், நடேசன் கொலை செய்யப்பட்ட போது அதற்காக ஒருவரைக் கூட கைது செய்யவோ, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவோ தயாரில்லாத அரசு இன்று சிவராம் படுகொலையிலும் அதையே செய்யப்போகிறது.

இது தொடர்பான விசாரணைகளும் சில நாட்களில் இருந்த இடம் தெரியாமல் சென்றுவிடும். இதுதான் இலங்கை அரசின் வழமையாக உள்ளது.

காலத்துக்குக் காலம் தமிழ்த்தேசியத்துக்கு வலுச்சேர்த்த தமிழினப் புத்திஜீவிகளையும், சிந்தனைவாதிகளையும் கொன்றொழிப்பது பேரினவாதத்தின் கொள்கைகளில் ஒன்றாக இருக்கிறது. இதற்காக தனது கைக்கூலிகளாக செயற்படும் தமிழ் விரோதக் கும்பல்களையே கருவியாகப் பயன்படுத்தி வருகின்றது.

ஆட்சியாளர்கள் வீசியெறியும் சில எலும்புத்துண்டுகளுக்கு, ஆசைப்பட்டு தம் இனத்தின் மானத்தையே விற்றுப்பிழைப்பு நடத்தும் ஈனப்பிறவிகள், இரத்தவெறியர்கள், பிணந்தின்னிகள் எவ்வித சிந்தனையும் இன்றி இப்படியான உயரிய இனப்பற்றாளர்களை கொன்று வருவது வழமையாகிவிட்டது.

ஆனால் உயரிய இலட்சியத்துக்காக பேனா தூக்கிய பத்திரிகையாளனை கொன்றுவிடுவதன் மூலம் கொலையாளிகள் ஒருபோதும் தமது இலக்கை அடைந்துவிட முடியாது. வாள்முனையைவிட வலிமைகொண்டது பேனா முனை. போராளி ஒவ்வொருவனும் மண்ணில் வீழ்த்தப்படும் போது அவனுடைய இலட்சியக்கனவுகளை நிறைவேற்றுவதற்காக, அவனது மகத்தான பேனா முனைப் புரட்சியை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக பல மடங்கு ஆக்ரோஷத்துடன் எழுவதற்கு ஆயிரமாயிரம் பேர் தயாராக இருக்கிறார்கள்.

அதைவிட தன் இனவிடுதலைக்காக இறுதிமூச்சுவரை செயற்பட்ட பேனா முனைப் போராளியும் வீழ்த்தப்படும் போது விடுதலையை வென்றெடுக்க ஆயுதம்தாக்கிய வீரர்கள் ஒவ்வொருவரினதும் உணர்வுகள் பொங்கி வெடிக்கின்றன.

அதன் விளைவுகள் என்னவாகும் என்பது கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் அனைவருக்கும் நன்கு புரியும்.

எனவே இப்படியான கோழைத்தனமான தாக்குதலைநடத்துபவர்கள் எந்தக் காலத்திலும் எதனையும் சாதிக்க முடியாது.

யுத்த காலத்தில் மட்டுமல்ல, சமாதான காலத்திலும் தமிழ்ப் புத்திஜீவிகளை மறைமுகமாக கொன்றொழிப்பதிலேயே அரசு தொடர்ந்து கவனம் செலுத்தினால் அரசுடன் தமிழர் தரப்பு சமாதானம் பேசுவது அர்த்தமற்றதொன்றாகவே காணப்படும்.

-அனல் வேந்தன்.-

சுடர் ஒளி

மே 08 – 14, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## மாமனிதர் சிவராம்

''உன்னத இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை. எமது தேசத்தின் வரலாற்றிலே அவர்களுக்கு என்றும் அழியாத இடம் உண்டு.''

படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் தருமரத்தினம் சிவராமுக்கு, தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் 'மாமனிதர்' என்ற விருதை வழங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதியான குமார் பொன்னம்பலத்துக்குப் பின்பு இந்த அதி உயர் விருதைப் பெற்றிருக்கிறார் சிவராம்.

கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ்நிலையத்துக்கு முன்னால் வைத்து சிவராம் கடத்தப்பட்டார். அவரது உடல் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதிக்குப் பின்புறமாக 500 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது. அவரின் கருத்துகளுக்கு பேனா முனையால் பதில் அளிக்க முடியாதவர்கள் மிகவும் கோழைத்தனமாக துப்பாக்கியால் பதில் அளித்திருக்கிறார்கள்.

சிவராமின் படுகொலை ஊடகத் துறைக்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல் என்பதில் சந்தேகம் இல்லை. இது இலங்கையில் பலவீனமடைந்து வரும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு விழுந்த மற்றும் ஓர் அடியாகும்.

2000ஆம் ஆண்டில் மயில்வாகனம் நிமலராஜன் யாழ்ப்பாணத்தில் வைத்தும், 2004ஆம் ஆண்டில் ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் வைத்தும் கொலை செய்யப்பட்டனர். தற்பொழுது 'மாமனிதர்' சிவராம் கொழும்பில் வைத்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஆள், அணி, அம்பு என்று தனக்குப் பின்னால் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பையோ, பாதுகாப்பையோ வைத்துக்கொண்டு தலைநகரில் இருந்து இயங்கியவர் அல்லர் சிவராம்.

தன்னை வெளிப்படுத்தி – தனது முகத்தை வெளிப்படுத்தி – தமிழினஉரிமைகள் தொடர்பாக தனது மனதில் தோன்றிய தனித்துவமான கருத்துக்களை வெளிப்படுத்தி – பகிரங்கமாக – பயமின்றி – சுயாதீனமாக -- இயங்கிய ஊடகப் போராளி இவர்.

சிவராம் தனது எழுத்துக்களால் தமிழரின் தேசிய பிரச்சினையை உலக அரங்கிலே மிகவும் நேர்த்தியான முறையில் தெளிவாக எடுத்துக் கூறிவந்தார்.

சிங்கள அரசு மேற்கொண்டு வருகின்ற அப்பட்டமான பொய்ப்பரப்புரைகளை சர்வதேச சமூகத்துக்கும் இராஜதந்திர சமூகத்துக்கும் மிகவும் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தி வந்தார்.

சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே அது தமிழர் தேசத்துக்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளை எதிர்த்து நின்றார்.

ஆயுதப் போராளிகள் சாதிப்பதுபோல இந்த எழுது கோல் போராளியின் கருத்துத் தாக்குதல்களும் சிங்களப் பேரினவாதிகளுக்கு ஆழமான பாதிப்புக்களை ஏற்படுத்தின. அதனால் தான் அரச பயங்கரவாதம் அவருக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

கடந்த காலங்களில் சிவராம் பல அச்சுறுத்தல்களை எதிர் நோக்கிவந்தார். கடந்த ஆண்டு அவரது வீட்டில் தேடுதல் நடத்தி இருந்தனர். மட்டக்களப்பில் இவர் தாக்குதலுக்கும் உள்ளாகி இருந்தார். அப்படி இருந்தும் அவர் பயந்து விடவில்லை. வெளிநாடு சென்று தஞ்சம் பெறவும் முயற்சிக்கவில்லை. பேரினவாதத்துக்குப் பயந்துவிடாமல் தமிழ்த் தேசியத்துக்காக குரல் எழுப்பி வந்தார்.

சிவராமின் மறைவு தமிழ்த் தேசியத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

# சிவராம் படுகொலை பின்னணி என்ன?

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாத ஒரு பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது. துப்பாக்கிக்குப் பலியான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன் வரிசையில் இப்போது தருமரத்தினம் சிவராமும் சேர்க்கப்பட்டுள்ளார்.



இலங்கையைப் பொறுத்தவரை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒரு அநாதையான நிலையில் தான் இருக்கின்றனர். சிங்கள அரசாங்கங்களின் எந்த ஆட்சியும் தமிழ் ஊடகச் சமூகத்தினை பாதுகாக்க எந்தவித உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென்பதை இறுதியாக சிவராமின் படுகொலை பறைசாற்றியிருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை சிங்கள ஊடகவியலாளர்களுக்கு இருக்கும் கௌரவம், அரசுகள் அளிக்கும் மரியாதை என்பன தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இல்லை என்பதுதான் உண்மை. இந்தவிடயத்தில் நாம் இனவாதம் பேசவில்லை. ஆனால், இதுதான் யதார்த்தம்.

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார். அந்தக் கொலைக்குப் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதும் காலப்போக்கில் அறியப்பட்டது. ஆனால், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? மட்டக்களப்பில் பத்திரிகையாளர் நடேசன் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனை உடனடியாக கண்டித்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப் போவதாக தாரைதம்பட்டம் அடித்த அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தது? இனி சிவராமின் படுகொலையும் பத்தோடு பதினொன்றாகவே இருக்கப்போகின்றது.

உண்மையில் சிங்கள தேசத்தில் சிங்களப் பத்திரிகையாளரொருவருக்கு இவ்வாறான ஒருநிலை ஏற்பட்டிருந்தால் சிங்கள தேசமே திரண்டெழுந்து இதனை தேவையான அளவு பிரசாரப்படுத்தியிருக்கும். ஆனால், தமிழனாய் இலங்கையில் பிறந்த காரணத்தினால் சொந்த பந்தங்களை விட்டு பாசஜீவன்கள் துடிதுடிக்க உலகை விட்டுச்செல்ல வேண்டிய பரிதாப நிலை தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சிங்கள ஊடகங்களைப் பொறுத்தவரை அவை சிங்கள மேலாண்மை வாதத்தை ஊக்குவிக்கும் கருவிகளாக இருக்கின்றன. திரும்பும் பக்கமெல்லாம் சிங்களத் தேசியத்தை ஊக்குவிக்கும் ஊடகங்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களும் ஓரணியில் இருக்கின்றனர். இதற்கான களநிலை மற்றும் வசதிகள் அவர்களுக்கு உள்ளன. ஆனால், தமிழ் ஊடகவியலாளர்கள் இதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு நிலையில் இருக்கின்றனர்.

ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்தப் போனதால்தான் நிமலராஜன், நடேசன், சிவராம் ஆகியோர் கொலைசெய்யப்பட்டனர். சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான் இவை அரங்கேறின. சந்திரிகாவின் அரசாங்கத்தை விமர்சித்தும் அந்த அரசின் பாதுகாப்புப் படையை சாடியும் வந்த தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இறுதியில் துப்பாக்கிக் குண்டுகள்தான் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த கொலைகளின் பின்னணியில் இருப்போர் யார் என்பதை நம் அனைவராலும் ஊகிக்க முடியும். அரச புலனாய்வு பாதுகாப்புப் படை மற்றும் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் கூலிப்படைகள்தான் இதன் பின்னணியில் உள்ளன என்பதுபகிரங்கமான ஒன்று.

இந்த நிலைமை இருப்பதால்தான் குற்றவாளிகள் இன்னாரென்று தெரிந்தும் அவர்கள் தொடர்பில் எதுவித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலையில் காவல்துறை இருக்கின்றது.

சிவராம் கடத்திக் கொலைசெய்யப்பட்ட மறுநாள் பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு பேட்டியளித்த பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இந்தக் கடத்தல் குறித்துக் கேள்விப்பட்டதும் வீதித்தடைகளை பல இடங்களில் ஏற்படுத்தியதாகக் கூறியிருந்தார்.

பொலிஸ்மா அதிபரின் கூற்றைப் பார்த்தால் வீதித்தடைகள், சோதனைச் சாவடிகள் கூட தேவையற்றவை போல்தான் இருக்கின்றன. சிவராம் படுகொலை விசாரணைகள் குறித்து அறிவதற்காக பொலிஸ்மா அதிபருடன் உரையாடும் ஊடகவியலாளர்களிடமே, விசாரணைகளுக்கு ஒத்துழைத்து தகவல்களை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் கோருவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.



சிவராமின் படுகொலைக்குப் பின்னால் அரச பாதுகாப்புத்துறையினரின் கைகள் உள்ளன என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. சிவராம் கடத்தப்பட்ட விதத்தை இதில் முதலாவதாகக் குறிப்பிடலாம். பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இரண்டுபேர் பலாத்காரமாக சிவராமை வாகனத்தில் ஏற்றியிருக்கிறார்களென்பது சாதாரண விடயமல்ல.

அதேசமயம் இதற்குப் பின்னர் கொலை செய்யப்பட்ட சிவராமின் சடலம் பாதுகாப்பு வலயமாகக் கருதப்படும் மாதிவெல பகுதியில் போடப்பட்டமைதான் இங்கு முக்கிய அம்சமாகும். நாடாளுமன்றக் கட்டடப்பகுதி அமைந்துள்ள இடத்தை அண்மித்த பகுதிகளுக்கு இரவு நேரம் செல்வது என்பது கடினமான விடயம். அந்தப் பகுதிகளில் பொலிஸ் மற்றும் இராணுவ சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. இந்த நிலையில் அரச பாதுகாப்புத் துறையின் கை இந்த விடயத்தில் மேலோங்கி இருக்கின்றமை அப்பட்டமாகத் தெரிகிறது.

சிவராமின் கொலையில் அரச பாதுகாப்புத்துறையின் பின்புலம் இருப்பதை மறைப்பதற்காக அரசாங்கம் முடிந்தவரை முயற்சிகளை எடுத்துவருகிறது. சிவராம் கொலைக்கு சர்வதேச ரீதியில் ஊடக அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ள சூழ்நிலையில் இந்தக் கொலைக்கு பல வியாக்கியானங்களையும் பாதுகாப்புத்துறை வெளியிட்டு வருகிறது.

இலங்கைப் பாதுகாப்புத்துறை சில குற்றச்செயல்கள் குறித்து விசாரணை நடத்தும்போது நவீன விஞ்ஞான ரீதியான தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றது. மரபணு பரிசோதனை உட்பட பல நவீன ஆய்வுகளை விசாரணையின்போது மேற்கொள்ளும் இலங்கை பாதுகாப்புத் துறை சிவராமின் கொலைவிடயத்தில் அவ்வாறான நுட்பங்களை கையாள முயற்சிக்காதது ஏன்?

**சிவன்**

சிவராம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு அவரின் இறுதிக்கிரியை நடக்கும் வரை அவர் பாவித்த கைத்தொலைபேசி இயக்க நிலையில்தான் இருந்தது. கைத்தொலைபேசி இயங்கும் நிலையில் இருக்குமாயின் அது எங்கே, எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை நவீன தொழில்நுட்பவசதிகளை கொண்டு கண்டுபிடித்துவிடலாம். ஆனால், இதுவரை அந்தக் கோணத்தில் சிந்திக்காத நிலையில் பாதுகாப்புத்துறை இருக்கிறது. இல்லையெனில், இது தெரிந்தும் தெரியாததுபோல் பாதுகாப்புத்துறை இருக்கிறதா?

சிவராமைப் பொறுத்தவரை அவர் உயிரோடு இருக்கையில் தமிழ்த் தேசியத்துக்காக எழுப்பிய குரல், மேற்கொண்ட கொள்கைப்பரப்புக்கள் ஆகியவற்றை தமிழீழ வரலாற்றில் சிவராமின் கொலை தமிழ்த் தேசியத்துக்கு பெரும் பிரசாரத் தைதேடித் தந்திருக்கிறது. உயிரோடு இருக்கும் போது தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திய சிவராம் இப்போது உயிரோடு இல்லாத நிலையில் இதன் தாற்பரியத்தை இப்போது நன்கு உணரக் கூடியதாக இருக்கின்றது.

தமிழ் ஊடகவியலாளர்கள் கூண்டோடு அழிக்கப்படுவதற்குக் காரணமானவர்களை அரச பாதுகாப்புத்துறை விட்டுவைக்கலாம்? ஆனால், வேதனையில் வெம்பும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சாபம் அவர்களை விட்டுவிடுமா? காலம் இதற்கு பதில் சொல்லும்.

# லல்லுவுக்கு எதிராக பி.ஜே.பி போர்க்கொடி; சங்கடத்தில் காங்கிரஸ்

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் ரயில்வே அமைச்சரான லல்லு பிரசாத் யாதவ் தான் மத்திய அரசிலேயே பி.ஜே.பிக்கு வெறுப்பைத்தரும் மிக முக்கிய நபர்.




பீகாரில் அரசு அமைப்பதில் லல்லுவுக்கும் பி.ஜே.பிக்கும் இடையேயான போட்டியில் தொடங்கி இந்தப் பகை லல்லு சோனியாவை ஆதரிப்பதில் முடிவடைந்தது. டில்லியில் ஆட்சி மாறி பி.ஜே.பியிடமிருந்து காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்ற முக்கிய காரணகர்த்தா லல்லுதான்.

லல்லுவின் கட்சிக்கு லோக்சபாவில் 21 எம்.பிக்கள் உள்ளனர். காங்கிரஸுக்கு அடுத்து அதிக எம்.பிக்கள் உள்ள கட்சி ஆளும் கூட்டணியில் லல்லுவின் கட்சிதான். சோனியா காந்தி வெளிநாட்டவர் என்ற பி.ஜே.பியின் பிரசாரத்தை முறியடிக்க பெரும் பாடுபட்டவர் லல்லு. இதனால் சோனியாவைப் பொறுத்தவரை லல்லுவேறு எவரையும் விட மிகமுக்கிய நண்பராவார்.

அத்தகைய லல்லு முக்கிய சிக்கலொன்றில் இவ்வாரம் மாட்டிக் கொண்டுள்ளார். கடந்த ஆண்டு பீகாரில் வெள்ள நிவாரணம் வழங்கியதில் ஊழல் செய்ததாக லல்லுமீது நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்ததை அடுத்து அவர் மத்திய அரசிலிருந்து பதவி விலக வேண்டுமென பி.ஜே.பி. பெரும் போராட்டம் தொடங்கியுள்ளது.

கடந்த சில நாட்களாக நாடாளுமன்றத்தையும் பி.ஜே.பி. பகிஷ்கரித்துவருகிறது.

ஏற்கனவே பீகார் முதல்வராக இருந்தபோது மாட்டுத் தீவன ஊழலில் சிக்கியதால் லல்லு அப்பதவியைத் துறந்து தனது மனைவியை சாதுரியமாக அதே பதவியில் அமர்த்திக்கொண்டார்.

அண்மைய பீகார் சட்டசபைத் தேர்தலில் லல்லு கட்சி பீகாரின் ஆட்சியை இழந்துபோனது. எனவே அவரது மனைவி இப்போது முதல்வர் பதவியில் இல்லை என்பதால் பழைய முறையிலேயே லல்லு ரயில்வே அமைச்சர் பதவியிலிருந்து விலகி மனைவியை அமர்த்தலாம். எனினும் மனைவி மீதும் ஊழல் வழக்கு பதிவு செய்யப்படும் சாத்தியமுள்ளது.


பிரதமர் மன்மோகன் இதனால் பெரும் சங்கடத்தில் சிக்கி உள்ளார். லல்லுவை விலகச் சொல்லவும் முடியாது; விலக்காவிட்டால் பி.ஜே.பி இலேசில் விடுவதாகவும் இல்லை.

கடந்த மாதம் தான் குஜராத்தில் ஒரு ரயில் விபத்துக்கு பொறுப்பேற்று பதவி விலகவேண்டுமென லல்லுவை பி.ஜே.பி வற்புறுத்தி வந்த நிலையில் இப்போது அவர் மீது வழக்கும் வந்துவிட்டது. காங்கிரஸைவிட லல்லுவை வீழ்த்துவதே பி.ஜே.பிக்கு மிக முக்கியம். ஏனெனில் காங்கிரஸ் பதவிக்கு வர லல்லுவின் பங்களிப்பு எவ்வளவு இருந்தது என்பது பி.ஜே.பிக்குத் தெரியும்.

கடந்த ஆண்டு பதவியேற்ற மன்மோகன் அரசில் ஜார்கண்ட் முக்திமோர்ச்சா தலைவர் ஷிபு சோரன், லல்லு கட்சியை சார்ந்த மற்றும் சில அமைச்சர்கள் என மத்திய அரசில் குற்றப்பின்னணி உடைய பலர் அமைச்சுப் பதவியிலுள்ளனர். இவர்களை குறிவைத்து பி.ஜே.பி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்திய அரசியல் வரலாற்றிலேயே இல்லாதளவு குற்றவாளிகள் இந்த மத்திய அரசில் தான் உள்ளனர் என்பது பி.ஜே.பியின் குற்றச்சாட்டு.

இதற்கிடையில் தமிழகத்தில் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் பி.ஜே.பி தனித்துப் போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க வலுவான அணியாக ஒரு புறமும் அ.தி.மு.க வன்முறையை கையிலெடுத்துக் கொண்டு மறுபுறமும் நிற்க பி.ஜே.பியால் தனித்து எதையாவது சாதிக்க முடியுமா என்பதே கேள்வி

பி.ஜே.பியின் வரலாற்றில் 1996க்குப் பின்பு ஒரு தேர்தலில் தமிழகத்தில் அக்கட்சி


லல்லு பிரசாத்

தனித்துப்போட்டியிடுவது இதுவே முதல் முறை. 1996இல் பத்மநாபுரம் என்ற ஒரேயொரு சட்டசபை தொகுதியை தான் பி.ஜே.பி வெல்லமுடிந்தது. இம்முறை எத்தனை தொகுதிகளை வெல்ல முடியும் என்பது சுவாரஸ்யமாக எதிர்பார்க்கப்படும் விடயம்

—எஸ்.சுரேந்திரஜித்—



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் பூதவுடல் கல்கிஸையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்படிருந்த சமயம் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன அஞ்சலி செலுத்துகிறார்.

## கின்னஸ் சாதனைக்காக வண்ணக் கோலங்கள்

சென்னை அம்பத்தூர் கள்ளிக் குப்பத்தில் ஆனந்தம் முதியோர் இல்லத்தின் சார்பில் கின்னஸ் சாதனைக்காக 100 பெண்களால் ரங்கோலி மற்றும் புள்ளிக் கோலம் தீட்டப் பட்டது.




ரங்கோலி:– 9 ஆயிரத்து 200 சதுர அடி பரப்பில் காஞ்சீபுரம் பட்டுச்சேலையைப் போல் தீட்டப்பட்ட ரங்கோலி வண்ணக்கோலத்தில் ஜரிகைக்கரை வேலைப்பாடுகளில் உள்ளதைப் போன்று 74 பெரிய யானைகள், 52 கோபுரங்கள், சிவலிங்கத்துடன் கூடிய மிகப்பெரியதேர் ஆகியன நீலம் மற்றும் அரக்கு உள்ளிட்ட வண்ணங்களில் தீட்டப்பட்டன. நாகபுரியில் 4700 சதுர அடிப்பரப்பில் வந்தனா ஜோஷி என்பவர் வரைந்த ரங்கோலி கோலமே உலக சாதனையாக இதுவரை இருந்தது.

விளக்குக்கோலம்:–

ரங்கோலியின் இடதுபுறம் 12ஆயிரத்து 800 அடி பரப்பில் 64, 721 புள்ளிகள். சுமார் 16 கிலோமீட்டர் நீளமுள்ள கோடுகள். இது 6400 வட்டங்களுடன் 1600 விளக்குகள் கொண்டதாக தீட்டப்பட்டுள்ள பிரமாண்டமான கோலம். ஈரோட்டை சேர்ந்த குழுவினர் 11ஆயிரத்து 236 சதுர அடி பரப்பில் தீட்டிய கோலமே இதுவரை உலக சாதனையாக இருந்தது.


**கட்டடம் வாடகைக்கு**

மனோகராச் சந்திக்கு அருகில் பதினெட்டு அறைகளும் நான்கு விசாலமான மண்டபங்களும், நான்கு குளியலறைகள் வசதியும் சிறிய ரக வாகனத் தரிப்பிடமும் கொண்ட சகல வசதிகளும் உடைய தொடர்மாடிக் கட்டடத்தொகுதி வாடகைக்கு உண்டு. இரு பிரிவுகளாகவும் வழங்கப்படும். பாரிய வாகனத் தரிப்பிடமும் அருகில் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

உரிமையாளர் க.பாலயோகன்,
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7085, 0777 162428,
021 222 8039.



**நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த**
**"ஒரு ரோஜாவின் காதலி"**
**"முள்ளில்லா ரோஜாக்கள்"**
**வந்துவிட்டன**
**ஏக விநியோகஸ்தர்கள்**
**சகல பூபாலசிங்கம் புத்தகசாலைகளும்**



"ஒரு ரோஜாவின் காதலி"
நான்கு குறு நாவல்கள்
மூன்று சிறுகதைகள் அடங்கியது
"முள்ளில்லா ரோஜாக்கள்"
இரண்டு குறு நாவல்கள்
இருபது சிறுகதைகள்

கனடாவின் "செந்தாமரை" பத்திரிகையின் முது எழுத்தாளரும், மறுமலர்ச்சி எழுத்தாளனுமாகிய இரா.தணியின் இரண்டு கதைத் தொகுப்புகள், முன்னூறு பக்கங்களைக் கொண்ட இப்புத்தகங்களின் ஏக விநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தாராகும். இலங்கையின் எப்பாகத்திலும் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். வாசியுங்கள் இன்புறுங்கள். இரா.தணியின் வேறு கதைத் தொகுப்புகள் படிப்படியாக வெளிவரும்.

அன்புள்ள
இரா.தணி.



**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் நிறைவான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

மே 20 – 25 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

மே 07 - 08 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

மே 10 -15
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# தமிழர் தாயகத்தில் மேதினம்



உலகத் தொழிலாளர்களின் எழுச்சிநாளான மேதினம் இம்முறை தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் கோலாகலமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

இணைந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களான கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற எழுச்சிப் பேரணிகளும், வாகன ஊர்திகளும் இறுதியில் இடம் பெற்ற மேதின உரைகளும் தாழ்ந்த தமிழினத்தின் விடுதலை உணர்வுக்கு உரமூட்டுபவையாக அமைந்திருந்தன.

ஸ்ரீலாங்கா அரசாங்கத்தின்




அடக்குமுறைக்குள்ளாகி அல்லல்படும் தமிழ் மக்கள், இன, மத, வர்க்க வேறுபாடின்றி ஆயிரமாயிரமாகத் திரண்டு வந்து பேரணிகளிலும், கூட்டங்களிலும் கலந்து கொண்டு தமது இதயங்களில் பொங்கிவழியும் விடுதலை உணர்வை வீராவேசத்துடன் வெளிப்படுத்தினர்.

அவர்கள் கொண்டு சென்ற சுலோக அட்டைகளும் எழுப்பிய கோஷங்களும் தமிழர் தாயகத்தை வென்றெடுப்பதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துபவையாக அமைந்திருந்தன. கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற மேதின எழுச்சியை உங்கள் பார்வைக்காக இங்கு தருகிறோம்.

## கிளிநொச்சி

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலிருந்து 01.05.2005 பிற்பகல் 2.50 மணியளவில் ஆரம்பமாகிய மேதினப் பேரணியில் மாணவர்களின் அணியிசையைத் தொடர்ந்து தேசியத் தலைவர் பிரபாகரனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி நகர்ந்து வர அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்து கொண்ட மேதின ஊர்திகளுடன் பல்லாயிரக்கணக்கான மக்களும் பேரணியாக பிரதான வீதிவழியாக நகர்ந்து கிளிநொச்சி மத்திய மைதானத்தை வந்தடைந்தனர்.

அரங்க நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட மேதின ஏற்பாட்டு குழு தலைவர் வி.கே.திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்றன. முதன்மை சுடர் ஏற்றலைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றிவைத்தார். மேதின பிரகடனம் அரங்கில் வாசிக்கப்பட்டது. அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உலகத் தொழிலாளர்கள் காலாகாலமாக நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வந்தார்கள். அனைத்து தொழிலாளர்களும் ஒன்றுபட்டு உரிமைக்குரல் கொடுத்ததன் விளைவாக தொழிலாளர்களின் உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இன்றைய மேதினம், இப்போது ஒன்றுபட்ட தொழிலாளர் தினமாக மலர்ந்திருக்கிறது.

தமிழர் தாயகத்தை வென்றெடுப்பதற்காக தமிழர்களாகிய நாம் பல்வேறு வடிவங்களில் போராடினோம். எமது போராட்டப் படிகளில் நாம் முன்னோக்கிச் சென்ற போது சர்வதேசத்தின் பார்வை எம் பக்கம் திரும்பியது. சமாதானத்துக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆனால் கடந்த மூன்று வருடகாலமாக இப் பாதையில் நாம் சாதித்தவை எவையும் இல்லை.

எமது தேசத்தில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்காக நாம் விட்டுக் கொடுப்புக்களைச் செய்துள்ளோம். பல பெறுமதி மிக்க உயிர்களை இழந்திருக்கிறோம். இருந்தும் திறந்த மனதுடன் சமாதானத்தின்பால் எமக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்திவருகிறோம்.

ஸ்ரீலங்கா அரசு இதுவரை ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கையினையும் முன்னெடுக்கவில்லை. இந்த அரசாங்கம் தனது கையாலாகாத்தனத்தின் உச்சக்கட்டமாக தமிழர் போராட்டத்தின் நியாயப்பாட்டையும், அதன் உண்மைத் தோற்றத்தையும், அது வெல்லப்பட வேண்டிய காலத்தின் கட்டாயத்தையும் தனது எழுத்து மூலம் வெளிக்காட்டிய பத்திரிகையாளர் டி.சிவராம் அவர்களை படுகொலை செய்துள்ளது. சமாதானத்தின் பால் எமக்கிருந்த சிறிய நம்பிக்கையையும் இப் பாதகச் செயல் தகர்த்தெறிந்துவிட்டது.

எனவே காலம் கடத்தாது போராட நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். தமிழர் தாயகத்தை மீட்பதற்கான உறுதிப்பாட்டுடன் ஒன்றுபட்ட



தமிழினமாக இங்கு நாம் அணிதிரண்டுள்ளோம். தமிழ் தேசிய தலைவர் அவர்களின் கரத்தை பலப்படுத்துவோம் என இன்றைய நாளில் உறுதிபூண்டுள்ளோம். தமிழர்தாயகத்தை மீட்டெடுப்பதற்கான நாளாக இன்றைய நாளை நாம் பிரகடனப்படுத்துகிறோம்.

இவ்வாறு அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரங்கின் மே நாள் உரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் ஒன்றிய தலைவர் சு.மனோகரன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

## யாழ்ப்பாணம்

மேதின பேரணியில் பங்கு கொண்ட 50 ஊர்திகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ தேசியத் தலைவரின் வழியில் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி யாழ். குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற மேதின நிகழ்வுகள் பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளன.

மாவட்ட பொது அமைப்புகளும், தொழிலாளர் அமைப்புகளும் ஒன்றிணைந்து மேற்கொண்ட ஏற்பாட்டில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களின் உருவப்படத்தினை தாங்கிய ஊர்தி ஆரம்பத்தில் நகர்ந்துவர ஆரம்பமான மேதின பவனி அரசடி வீதியூடாக கந்தர்மடம் சந்தியைச் சென்றடைந்து பின்னர் பலாலிவீதியூடாக திருநெல்வேலி சென்று அங்கிருந்து முன்நோக்கி நகர்ந்து யாழ். மருத்துவபீட மைதானத்தை அடைந்தது.




இந்தப் பேரணிகளை யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அமைப்புகள் வடிவமைத்து பேரணியில் பங்கேற்க வைத்ததுடன் இப்பகுதிகளிலிருந்து பெருந்திரளான தொழிலாளர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோரையும் பங்குகொள்ள வைத்தன. அவர்கள் தமது எழுச்சிக் கோஷங்களையும் வெளிப்படுத்தினர்.

பின்னர் யாழ். மாவட்ட தமிழ் தேசிய தொழிற்சங்க கூட்டமைப்புத் தலைவர் தலைமையில் விழாக்கள் நடைபெற்றன.

நிகழ்வுகளில் சுடர்களை சுஜன், உமேஷ் ஆகிய மாவீரர்களின் தாயார் திருமதி பரமேஸ்வரி, ச[illegible] மாணவர் பேரவை இணை[illegible]ளர் கண்ணன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் [illegible]ரி, வணபிதா இராஜ்குமார், சந்[illegible]சேகரக்குருக்கள், யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறை விரிவுரையாளர் இளம்பிறை, தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன், சூ.சிறில், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் ஆகியோர் ஏற்றினர்.

தமிழ்த் தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் இ.கண்ணன் ஏற்றினார். மேதின கொடியினை கிராமிய உழைப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த தங்கராஜா ஏற்றினார். தொடர்ந்து பொங்குதமிழாளர் செ.விந்தன் தலைமையில் அரங்க செயற்பாட்டுக் குழுவின் அரங்காற்றுகை நடைபெற்றது. அதன் பின்னர் மே நாள் பிரகடனம் சிறப்புரை, முதன்மை உரை ஆகியன இடம்பெற்றன.

## திருகோணமலை

திருகோணமலையில் இடம்பெற்ற மேதின ஊர்வலத்தில் பதினேழு ஊர்திகள் பவனிசென்றன. அவை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், அதனால் அல்லல்படும் அகதிகள் ஆகியோரின் பல்வேறு பிரச்சினைகளை படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன.

தம்பலகாமம், சல்லி, சாம்பல்தீவு, நித்தியபுரி, அலஸ்தோட்டம், பாலத்தோட்டம், திருக்கடலூர் உட்பட மேலும் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இந்த ஊர்வலத்திலும் பின்னர் நடைபெற்ற கூட்டத்திலும் பங்கு கொண்டனர்.

இறுதியாக திருகோணமலை முற்றவெளியில் வி.விக்னேஸ்வரன் தலைமையில் மேதின பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜசிங்கம் திருகோணமலை மாணவர் அணி தலைவர் புரட்சி உட்பட பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

## மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட மேதின எழுச்சி நிகழ்வு மகிழடித்தீவு பொது விளையாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

அந்த மேதின எழுச்சி விழாவுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலாபுறத்திலிருந்தும் பல்வேறு பேரணிகள் புறப்பட்டு மகிழடித்தீவை வந்தடைந்தன.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி விளையாட்டரங்கிலிருந்து புறப்பட்டு பட்டிருப்புப் பாலம் ஊடாக மகிழடித்தீவை நோக்கி ஒரு பேரணி வந்து கொண்டிருந்தபோது பொலிஸார் தேசியத் தலைவரின் படத்தை தாங்கிய ஊர்தியை செல்லவிடாது தடுத்தனர். பின்னர் கண்காணிப்புக் குழுவினரின் தலையீட்டால் இப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டு ஊர்திகள் அனைத்தும் மகிழடித் தீவை சென்றடைந்தன.

-மூர்த்தி-

இந்த எழுச்சி ஊர்வலத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மாநகரசபை மற்றும் மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள் போன்றவை பங்குபற்றிச் சிறப்பித்தன.

இறுதியில் மகிழடித்தீவில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட மாபெரும் மேதினக் கூட்டம் இடம்பெற்றது.

31 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைந்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

அந்தப் பெண்ணை மேடையேற்றி அறிமுகப்படுத்திய அறிவுமதி நன்றி கூறிய போது அரங்கே கைதட்டி அப்பெண்ணுக்குப் பாராட்டுத் தெரிவித்தது.

பின்னர் வரிசையாக ஈரோடு, சத்திய மங்கலம், கோபி, கோவை, பொள்ளாச்சி, திண்டுக்கல் எல்லாம் கடந்து ஜூலை 17 அன்று இரவு மதுரையை அடைந்தனர்.

மதுரைக் கூட்டத்தில் செல்வலட்சுமியும், சுபா சுந்தரமும் கலந்து கொண்டனர். வழக்கறிஞர் சந்திரசேகரும் கலந்து கொண்டார். வாணவேடிக்கையுடன் வரவேற்பு, பெருந்திரளான மக்கள் எனக் கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று பேசியவர்களில் வழக்கறிஞர் சந்திரசேகரின் பேச்சு மிக சிறப்பாக அமைந்தது. பூந்தமல்லியில் வழக்கு நடந்து கொண்டிருந்தபோது வழக்கறிஞர்கள் என்ற முறையில் அவர்கள் சந்தித்த பிரச்சினைகளைச் சுவையாக எடுத்துரைத்தார்.

"வழக்குத் தொடர்பான சட்டப்புத்தகங்களை ஆய்ந்து பலவற்றைக் குறித்துக் கொண்டு கடுமையாக எங்களைத் தயார் செய்து கொண்டு செல்வோம். ஆனால் வாயிலிலேயே எங்களை நிறுத்தி சோதனை என்ற பெயரில் தேவையில்லாமல் நாங்கள் கொண்டு வந்திருப்பவற்றையெல்லாம் குடைந்து, தனிப்பட்ட முறையில் எங்களையும் சோதித்து, கேள்விகள் கேட்டு, நாங்கள் பதட்டமாகிக் கத்தும் வரையில் விடமாட்டார்கள். இப்படி இவர்கள் செய்யும் கலாட்டாவினால் தயார் செய்து கொண்டு வந்ததெல்லாம் மறந்து போய் ஒருவித எரிச்சலோடுதான் நீதிபதி முன் சென்று நிற்போம். ஒரு கட்டத்தில் இது இவர்கள் வேண்டுமென்றே செய்யும் சதியெனப் புரிந்து அந்த வலையில் விழுந்து விடாமலிருக்க எவ்வளவோ பொறுமை காத்தாலும் அதை மீறி அவர்கள் நடந்து கொள்வார்கள்".

'ஒரு வழக்கறிஞருக்கே இந்த நிலை என்றால் சாதாரணமாக காணச்செல்லும் மக்களை, என்ன பாடுபடுத்துவார்கள் என யோசித்துப் பாருங்கள்'.

கேட்டுக் கொண்டிருந்த அற்புதத்திற்கு பழைய நினைவுகள் வந்தன.

எத்தனை முறை சிறைக் காவலர்களுக்கும் அவருக்கும் பிரச்சினைகள் வந்திருக்கின்றன.

சோதனை முடிந்து உள்ளே செல்வதற்குள் போதும் போதும் என்றாகி விடும். சில நேரங்களில் அதை எடுத்துச் செல்லக்கூடாது, இதை எடுத்துச் செல்லக்கூடாது என்று வேறு பிரச்சினை செய்வார்கள். ஆனால் அற்புதம் அத்தனை எளிதில் விட்டுவிடமாட்டார். சண்டை போட்டு கொண்டு வந்தவற்றை உள்ளே எடுத்துச் சென்றுவிடுவார். இது போதாதென்று வேண்டுமென்றே சில சமயம் பிரச்சினை கொடுப்பதும் உண்டு.

ஒருமுறை அன்பு, அருள், குழந்தைகள் அனைவரையும் அற்புதம் அழைத்துக்கொண்டு சென்றிருந்தார். அறிவைப் பார்த்துத் திரும்பியபோது சோதனை அறையிலிருந்த பெண் காவலர் மீண்டும் சோதனையிட வேண்டும் எனக் கூறினார். அற்புதத்திற்குக் கோபம் வந்துவிட்டது. சாதாரணமாக உள்ளே செல்லும்போதுதான் சோதனையிடுவார்கள். வழக்கமில்லாத விதத்தில் திரும்பும்போது சோதனையிட வேண்டும் எனக் கூறியதுதான் கோபத்தை உண்டு பண்ணியது. சோதனைக்கு உட்பட மறுத்தார். வாக்குவாதம் வளர்ந்தது. அந்தப் பெண் காவலர் ஒரு கட்டத்தில் விரல் நீட்டி "இங்க பாரு நான் சொல்றதத்தான் நீ கேட்கணும்" என்று மரியாதையின்றி பேச அற்புதம் வெகுண்டுவிட்டார்.

"கைய கிய்ய நீட்டி மரியாதையில்லாம பேசுன கைய முறிச்சுப்புடுவேன் முறிச்சு... சீருடையில இருக்கியேன்னு பாக்கிறேன். ஆமா" – என்று கத்த... சத்தம் கேட்டு வந்த துணை கண்காணிப்பாளர் மாணிக்கவேலு சமாதானப்படுத்தி அந்தப் பெண் காவலரைத் திட்டி அனுப்பினார். இப்படிப் பல சம்பவங்கள்.

சந்திரசேகர் பேச்சில் அவை அனைத்தும் நினைவிற்கு வந்தன. பூந்தமல்லி தீர்ப்பு அன்று நடந்தவை ஆகிறவற்றை சந்திரசேகர் எடுத்துக் கூறினார்.

'காலையில தீர்ப்புச் சொல்ல வந்த நீதிபதி நான் நல்ல நேரம் பார்த்துத் தான்சொல்லுவேன்னு சொல்லிட்டு ராகு காலம், எமகண்டம் எல்லாம் போன பிறகுதான் சொன்னாரு. ஒரு வழியாக மாலை 5 மணிக்கு நளினிக்குதூக்குன்னு அவர் சொன்ன உடனேயே திக்குன்னு ஆயிருச்சு. சிறீநளினி ஏ – 1 அதனாலயா இருக்கும்னு நினைச்சிட்டு இருந்தோம். அடுத்து ஏ – 2 சாந்தன் தூக்கு, ஏ – 3, முருகன் தூக்குன்னு வரிசையா சொன்னப்பக்கூட தைரியமாகத்தான் இருந்தோம் ஏ – 4 சங்கர். அந்த பையன் தான் இந்த வழக்குல ஒரு குற்றச்சாட்டுக்கூட நிருபிக்கப்படாதவன். அவனுக்கும் தூக்குன்னு சொன்ன உடனதான் இது திட்டமிட்ட சதின்னு புரிஞ்சு, சரி இனிமே 26 பேருக்கும் தூக்கு தான்னு முடிவு பண்ணிட்டோம்.

அதே மாதிரி கடைசியா ஏ – 26 ரங்கநாத்துக்கும் தூக்குன்னு சொன்ன உடன நீதிமன்றத்திலேயே எந்திரிச்சு சத்தமா, ஐயையோ அவரு நமக்கும் தூக்குக் கொடுத்திடப் போறாரு. சீக்கிரமா வாங்கப்பா போலாம்னு சொல்லிட்டு வெளிய வந்திட்டேன்."

அவர் சொல்லி முடித்தவுடன் கூட்டமே சிரித்து கைதட்டியது. மதுரைக் கூட்டம் முடிந்து மறுநாள் விருதுநகர், இராசபாளையம், சங்கரன்கோவில் வழியாக நெல்லையை அடைந்தனர். நெல்லையிலும் ஒரு நெகிழ்ச்சியான சம்பவம்.

துப்புரவுப் பணியிலிருக்கும் வயதான பெண் ஒருவர் தனது அன்றைய கூலியான பத்து ருபாவை அப்படியே நிதியாக அளித்தார். அதைக் கண்ட மற்றொருவர், அன்றைய கூட்ட மேடையை அமைத்தவர், அவரும் தன் கூலியைக் கொடுத்தார்.




இப்படி அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கும் சாதாரண மக்கள்தானே, தங்கள் கடின உழைப்பில் சம்பாதித்ததை நிதியாக அளித்து இத்தனை உயிர்களை மீட்டிருக்கிறார்கள்... நினைக்கும்போதே நன்றியால் மனது விம்மியது.

கூட்டம் முடிந்து நெல்லையிலிருந்து பாபநாசம் என்ற கிராமத்தை நோக்கிச் சென்றனர். பாபநாசம் நெடுமாறனின் தாயின் ஊர். அங்கே அவருக்குச் சொந்தமாக ஒரு வீடு இருக்கிறது. அங்கு மறுநாள் தங்கி ஓய்வெடுப்பதாக முடிவு.

இரவு நடுநிசி தாண்டித்தான் அங்கு போய்ச் சேர்ந்ததால் இருட்டில் எதுவும் சரியாகத் தெரியவில்லை. உறங்கி எழுந்து காலையில் அந்தச் சூழலைப் பார்த்தவுடன் அனைவரும் அசந்து போய்விட்டனர்.

வீட்டின் பின்புறம் படி இறங்கினால் சலசலத்து செல்லும் தாமரபரணி ஆறு. நிமிர்ந்து பார்த்தால், நூறு அடி தூரத்தில்.... மலைத்தொடர். அதற்குப் பின்னால் சற்றுத் தொலைவில் தெரியும் பொதிகை. அதில் இருந்து தவழ்ந்து வந்து மென்மையாக வீசும் பொதிகைத் தென்றல்.

பெரிய மாமரம், அதோடு வேறு பல மரங்களும், செடிகளுமாய் அழகான தோட்டம். தோட்டத்தில் ஓடும் சிறிய வாய்க்கால். ஆற்றை நோக்கியபடி இரண்டு சிறிய மேடைகள்.

இவற்றிற்கு நடுவே இருந்தது அந்த வீடு.

பச்சைப்பசுமையான சூழலும், ஆற்றின் சல சல ஓசையும், குடும்பம் குடும்பமாக வந்து குளித்து விட்டுச் செல்லும் மக்களும்.... அற்புதத்தின் மனதில் ஆனந்தம் பொங்கியது.

ஆற்றிற்கு சென்று பல் தேய்த்து விட்டு, அப்படியே அந்த பாறைகளின் மீது அமர்ந்து, கால்களை மட்டும் நீரில் நனைத்தபடியே அந்தச் சூழலில் அமிழ்ந்துவிட்டார்.

கால்களை தழுவிச் செல்லும் நீரில் அவ்வப்போது வந்து கிச்சு கிச்சு மூட்டுவது போல கடித்துச் செல்லும் மீன்கள்.

மீனை சமைத்து சாப்பிட்டு மட்டுமே பழகியவருக்கு, அவை இப்படி துள்ளித் திரிந்து நீந்தி விளையாடுவதைக் காண்பது ஒரு வித்தியாசமான அனுபவம் தான்.

'அறிவு வெளிய வந்த உடன கண்டிப்பா அவனோட இங்க வந்து கொஞ்ச நாள் இருந்துட்டு போகணும்' – இப்பவே முடிவு செய்து கொண்டார்.

மலைப் பாதையில் செல்லும் வாகனங்களின் சத்தம் மிகத் தெளிவாகக் கேட்டது. 'அந்த மலை மேல ஏறிப் பார்க்கலாமா..... அங்கெல்லாம் போறோமோ என்னமோ?... இப்படி எல்லாரையும் கூட்டிட்டு அங்க போறது சாத்தியப்படுமான்னு தெரியலையே... மலையில என்ன இருக்குதுன்னும் தெரியலை... ஆமா... இந்த ஆத்துல தான் குளிக்கணும் போல இருக்கே... ஆசையாத் தான் இருக்கு... ஆனா நீச்சல் தெரியாதே... பார்ப்போம்... இத்தன பேரு இருக்காங்க இல்ல... ஒருத்தர ஒருத்தர் பிடிச்சுக்கிட்டு குளிச்சு முடிக்க வேண்டியதுதான்.'

"அம்மா" – யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினார்.

"வாங்கம்மா.... அருவிக்குப் போய் குளிக்கலாம்னு ஐயா கிளம்பச் சொன்னாங்க.... வாங்க..."

எழுந்தபடியே கேட்டார் – "அருவியா.....? அது எங்கப்பா இருக்குது?"

"மலை மேல போகணுமாம்மா"

"அப்படியா?" – உற்சாகமாகிவிட்டார். "அப்ப மலைக்கு மேலயும் போகப் போறோம்."

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# ஒரே பிரசவத்தில் வாடகைத் தாய்க்கு ஐந்து குழந்தைகள்

அரிசோனா மாநில பீனிக்ஸ் நகரில் உள்ள பானர் குட் சமாரிட்டன் ஆஸ்பத்திரியில், தெரசா ஆண்டர்சன் என்ற பெண்ணுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவம் நடந்தது. அப்போது அவர் வயிற்றில் இருந்து 5 குழந்தைகள் எடுக்கப்பட்டன.

லூயிசா கான்சலேஸ் – என்ரிக் மொரினோ தம்பதிகளுக்கு நீண்ட காலமாக குழந்தைகள் இல்லை. அதனால் வாடகைத் தாய் மூலம் குழந்தைகள் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்தனர். இதற்காக 25 வயது தெரசாவை அவர்கள் தேர்வு செய்தனர்.

தெரசாவின் கர்ப்பப் பையில் 5 கரு முட்டைகள் செலுத்தப்பட்டன. 5 கரு முட்டைகளும் வளர்ந்து குழந்தைகளாகும் என்று டாக்டர்கள் எதிர்பார்க்கவில்லை.

5 குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளன. அவற்றுக்கு என்ரிக், ஜோர்ஜி, கேபிரியல், ஜாலியர், விக்டர் என பெயர் சூட்டப்பட்டது.

இந்த குழந்தைகள் 7 அவுன்ஸ் முதல் 3 இறாத்தல் வரை எடை உள்ளன. ஜாலியர் மட்டும் இருதய நோயுடன் பிறந்து உள்ளது. பிறகு அதற்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்.

குழந்தை பிறப்பதற்கு வாடகையாக 7 லட்சம் ருபாய் தெரசாவுக்கு கொடுக்க வேண்டும் என்று பேசப்பட்டது. இந்த வாடகைத் தொகையை தெரசா தள்ளுபடி செய்து விட்டார்.

"5 குழந்தைகளையும் வளர்ப்பதற்கு அந்தத் தம்பதிகளுக்கு நிறையச் செலவு ஆகும். அதனால் எனக்குத் தரவேண்டிய தொகையை குழந்தைகளை வளர்ப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளட்டும்" என்று தெரசா பெருந்தன்மையுடன் கூறி இருக்கிறார்.

கரு: பாணபத்திரன் **நாட்டுக்கோர் நல்லதம்பி** உரு: சாமி



## எனக்கும் ஸ்ரீக்கும் தொடர்பா?

நீங்களும் ஸ்ரீகாந்தும் நெருக்கமாக... என்று ஆரம்பித்தாலே கண்களில் ஜலம் கொட்டாத குறையாகக் கையெடுத்துக் கும்பிடுகிறார் 'சேச்சி' கோபிகா. புதுசாக் கல்யாணம் ஆன புருஷன் பெண்டாட்டி இடையே ஒரு நெருக்கம் இருக்குமே, அது வேணும் என்று கேட்டார் கனாக் கண்டேன் படத்தின் இயக்குனர் கே.வி. ஆனந்த். அப்படியெல்லாம் கட்டிப்புடிச்சு புரள முடியாது என்பதால், வேறு மாதிரி எடுக்கலாமே என்றேன். அவரும் சரி, பாட்டு சீனில் பார்த்துக் கொள்ளுவோம் என்று சொல்லிவிட்டார்.

பாடல் காட்சிதானே... கொஞ்சம் அப்படி இப்படி இருக்கலாம் என்றுதான் கொஞ்சம் 'பிறீயாக நடித்தேன். அதற்காக எனக்கும் ஸ்ரீகாந்துக்கும் அது இது என்று கிளப்பிவிட்டால் எப்படி? செல்லமாக கோபிக்கிறார் கோபிகா.

கனாக் கண்டேன் ரிலீஸ் ஆகிற வரைக்கும் உங்க மாதிரி ஆளுங்களைப் பார்த்தால் எஸ்கேப் ஆக வேண்டியது தான். கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னையே குழப்பிடுறீங்களே என்று கோபிகா ஒளிவது தனி அழகு.

இத்தனைக்கும் பாடல் காட்சிகள் எடுக்கிற அந்த சமயத்தில் அப்பா, அம்மா அருகிலேயே இருந்தார்களாம். அவங்களுக்கு இது ஓவர்னு தெரிஞ்சிருந்தா அனுமதிச்சிருப்பாங்களா? நம்மையே திருப்பி கேட்கிறார் கோபிகா.

'ஆட்டோக்கிராப்' படத்தில் இவருக்கு பெரிதாக முக்கியமான காட்சி எதுவும் கிடைக்கவில்லை என்றாலும் அப் படம் தனது நடிப்புத் திறமையால் தான் வெற்றிபெற்றது என்று தனக்கு வேண்டப்பட்ட சிலரிடம் கூறிவருகிறாராம்.

அத்தோடு நின்று விடாது தனது சம்பள வியடத்திலும் அப் படத்தின் பெயரைக்கூறியே அதிக சம்பளத்தையும் கறந்து வருகிறார்.



சிவகுமார் தனது இரு மைந்தர்களான சூர்யா மற்றும் கார்த்தியுடன்



'சின்னா'
-கிரண்-

## கிரணின் புது ஆட்டம்

கிரைண்டர் சைஸில் இருந்த கிரண் 'கிண்'ணென்று மெலிந்து இப்போது ஜோதிகா, சினேகா போன்ற ஸ்லிம்மான நடிகைகளைத் தோற்கடிக்கும் அளவிற்கு இளைத்துள்ளார்.' உரலளவாக இருந்த உடம்பை உடுக்கை அளவிற்கு மாற்றி மீண்டும் ரவுண்டு கட்ட வந்திருக்கிறது இந்தப் பஞ்சாப் கிளி.

''இப்பதான் 'சிக்'குனு நல்லாயிருக்கு'' சிரிக்கும் கன்னங்களில் அதிஷ்டக்குழி. தடுக்கி விழாமல் இருந்தால் நீங்கள் நிச்சயம் ராம்'தான்.

கிரணை மீண்டும் தமிழுக்கு அழைத்து வந்தவர் சுந்தர் சி. 'வின்னர்'படத்தின் வெற்றிக்கு காரணமான கவர்ச்சி கன்னியல்லவா என்று 'சின்னா'வில் ஒரு பாடலுக்கு ஆட அழைத்து வந்தவர், கிரணின் ஆட்டமும் புது ஊட்டமும் பார்த்து சில காட்சிகளில் நடிக்கவும் வைத்திருக்கிறார்.

கிரணின் ஒரே வருத்தம், திருமணம். உடல் இளைத்து மீண்டு(ம்) வருவதற்குள் ''கிரண் இனி நடிக்கமாட்டார். திருமணம் செய்து செட்டிலாகப் போகிறார்'' என்று வதந்தி கிளம்பியதில் இவருக்கு ரொம்பவே வருத்தம். ''எனக்கு இன்னும் திருமண வயசு வரலை. நான் சினிமாவில் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு.''

ஆனால், பார்க்க வேண்டியதை ரசிகர்கள் ஏற்கனவே பார்த்திட்டாங்களே மேடம்.

## சூர்யா - ஜோதிகா காதல் திருமணம் முடிவில்லையாம்

நடிகர் சூர்யாவும், நடிகை ஜோதிகாவும் காதலித்து வருவதாகவும், இருவரும் ஜுலையில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் கிசுகிசுக்கப்பட்டு வருகிறது. இது பற்றிக் கேட்டபோது, சூர்யா மறுப்புத் தெரிவித்தார். ஜோதிகா தரப்பில் எதுவும் கூறப்படவில்லை.

இந்நிலையில் சந்திரமுகி திரைப்படம் மலேசியாவில் வெளியிடப்பட்டதையொட்டி நடிகர் பிரபுவுடன் ஜோதிகா கோலாலம்பூர் சென்றிருந்தார். அங்கு அந்நாட்டு பத்திரிகையாளர்களுக்கு ஜோதிகா பேட்டியளித்தார்.

திருமணம் பற்றிக் கேட்டபோது, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு திருமணம் பற்றிய பேச்சே கிடையாது என்று ஜோதிகா கூறினார். தற்போது யாரையாவது மனதில் நினைத்துள்ளீர்களா? என்ற கேள்விக்கு, ஜோதிகா பதிலளிக்க மறுத்துவிட்டார்.

அந்தப் பேட்டியில் ஜோதிகா மேலும் கூறியதாவது:

நான் திரையுலகில் நுழைந்ததே ஒரு விபத்துத்தான். 8 ஆண்டுகளுக்கு முன்பு என் அக்காள் நக்மாவுடன் படப்பிடிப்பு தளத்துக்கு சென்று கொண்டிருந்தேன். என்னைப் பார்த்த டைரக்டர்கள் நடிக்க விருப்பமா என்று கேட்டனர். நான் ஆமாம் என்றேன். டெஸ்ட் எடுத்தனர். அதில் தேர்ச்சி பெற்றதால் நடிக்க வந்தேன். நான் அப்போது மும்பையில் உள்ள பல்கலைக்கழகத்தில் சைக்காலஜி இரண்டாம் ஆண்டு படித்து வந்தேன். நடிக்க வந்ததால் படிப்பை பாதியில் கைவிடவேண்டியதாயிற்று.

நான் வட இந்தியாவில் இருந்து வந்தவள் என்பதால் ஆரம்பத்தில் நின்று பிடிப்பது கடினமாக இருந்தது. ஆனால், எனது தன்னம்பிக்கையால் போராடி முன்னுக்கு வந்தேன். ரஜினிகாந்த், கமலஹாசன் போன்றவர்கள் எப்படியெல்லாம் நடிக்க வேண்டும் என்று எனக்கு கற்றுக் கொடுத்தனர். அவர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

நான் நடிப்பை முறையாகக் கற்கவில்லை. படப்பிடிப்புத் தளங்களில் தான் நடிப்பை கற்றுக்கொண்டேன் என்றார் அவர்.





## கமல் சாருடன் என்னை ஒப்பிட வேண்டாம் - சூர்யா

கமல் சாருடன் என்னை ஒப்பிடாதீர்கள், கமல் பண்ணியதில் ஐந்து சதவீதம் கூட நான் இன்னும் பண்ணவில்லை.

எனக்கு ஒவ்வொரு படமும் நல்ல படங்களாக அமைந்தன. அதனால் இலகுவாக மக்கள் மனதில் எனக்கென்று ஓர் இடம் கிடைத்தது. மாயாவியில் காமெடி சிறப்பாக பண்ணி இருப்பதாக பாராட்டுறாங்க. கமலுக்குப் பிறகு நான் தான் படத்துக்குப் படம் வித்தியாசமான கேரக்டர்களில் நடிப்பதாக ஒருபோதும் நினைத்ததே இல்லை.

கமல் பெரிய நடிகர். எத்தனையோ வெற்றிப் படங்களை கொடுத்திருக்கிறார். அவர் அனுபவம், வரலாறு, திறமை ரொம்பப் பெரியது. அவருடன் என்னை ஒப்பிடவே முடியாது. நான் இப்பதான் நடிக்க வந்து இருக்கேன். கமல் பண்ணியதியல் ஐந்து சதவீதம் கூட நான் இதுவரை பண்ணவில்லை.

இருபத்தைந்து வயதாக இருக்கும் போதே 'பதினாறு வயதினிலே' படத்தில் நடித்திட்டாரு கமல் சார்.

எனக்கு இப்போதே இருபத்தொன்பது வயது ஆகியிருக்கு. கமல் அளவுக்கு வரணும்னா ரொம்ப காலம் ஆகும் என்றார் சூர்யா.



'ஜித்தன்'
-ரமேஷ், பூஜா-

## பிரசாந்தின் புதிய படத்தில் ரீமாசென் -நமிதா நாயகிகள்

வித்தியாசமான கேரக்டர்களில் விருப்பமுள்ளவர் பிரஷாந்த். 'அடைக்கலம்' படத்தில் இவருக்கு ஜோடி கிடையாது. அதற்கு வட்டியும் முதலுமாக இரண்டு ஹீரோயின்களுடன் ஒரு படம் செய்கிறார்.

பல வருடங்களுக்கு முன் ஆங்கிலத்தில் 'டாக்சி டிரைவர்' என்ற படம் வெளியாகி பல விருதுகளை வாங்கியது. இப்போது அதே பெயரில் ஆனால், வேறு கதையில் தமிழில் ஒரு படம் தயாராகிறது. பிரஷாந்தை வைத்து தொடர்ச்சியாக ஐந்து படங்கள் தயாரித்த சி.ஐ.டி.வி. நிறுவனம் இந்தப் படத்தை தயாரிக்கிறது.

பிரஷாந்த்துக்கு இதில் ரீமாசென், நமிதா என இரண்டு நாயகிகள். படத்தை இயக்குகிறவர் இயக்குநர் கௌதமிடம் இணை இயக்குநராக இருந்த மார்கன்.

துபாய் பாபு என்ற கலக்கும் கதாபத்திரம் விவேக்குக்கு வில்லனாக நடிப்பவர் ஆனந்த் தியேட்டர் கருணாகரன். 'அக்னி நட்சத்திரம்' படத்தில் வில்லனாக வருவாரே அவரது மகன்.

இவர்களைத் தவிர மனோஜ் கே. ஜெயன், விஜயகுமார், ராஜேஷ், ஆனந்த் ராஜ், கலாபவன் மணி எனக் குட்டிப் பட்டாளம் ஒன்றும் நடிக்கிறது.

படத்திற்கு இசை பதினேழு வயது ஜீ.வி.பிரசாத். இவர் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் சகோதரி மகன். இன்னும் விளக்கமாக கூற வேண்டுமென்றால் 'ஜென்டில் மேன்' படத்தில் வருமே 'சிக்கு புக்கு ரயில்' பாடல். அதில் மழலைக் குரலில் பாடியவர் தான் இந்த ஜீ.வி.பிரசாத்.



## அஸின் கல்வியில் சீரியஸ்

-அஸின்-

எந்த புராண படத்தைப் பார்த்தோ தெரியவில்லை, கே.பி.சுந்தராம்பாள் ஸ்டைலில் அழியாத செல்வம் கல்விதான் என்று அட்வைஸ்சொல்கிறார்அஸின். இந்த அட்வைஸின் பின்னர் அழுத்தமான காரணம் ஒன்று இருக்கிறது. நடித்துக் கொண்டே படித்துக் கொண்டும் இருக்கிறார் இவர்.

படப்பிடிப்பில் புத்தகத்தை தலைகீழாகவைத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்யும் நட்சத்திரங்களுக்கு மத்தியில் நிஜமாகவே வாய்விட்டு மனப்பாடம் செய்யும் அஸினின் சின்சியாரிடியே தனி அழகு!

கேரளாவில் சேச்சி பெரும் பணக்காரியாம். சம்பளம் என்பது ஒரு பிரதான விஷயம். அதுக்காகத்தான் அந்த விஷயத்தில் நான் கறாராக இருக்கிறேன் என்கிறார் அஸினின் அப்பா. இதைக் கேள்விப்பட்டதில் இருந்து இதுவரை சொந்தப்படம் எடுக்கச் சொல்லி துன்புறுத்திக் கொண்டிருக்கிறது ஒரு கும்பல். அவர்கள் வணக்கம் சொன்னால்கூடபதில்வணக்கம் சொல்லாமல் தப்பித்து ஓடிக்கொண்டிருக்கிறார் அஸினின் அப்பா.

சம்பளத்தை உன் ஜாக்கெட் மணியா வச்சுக்கோ என்று அப்பா சொல்லிவிட்டாராம். சரி என்ன செய்கிறார் மேற்படி 'மணி'யை? பங்குச் சந்தையில் முதலீடுகிறார்.

## தேசிய பொக்கிஷம் விக்ரம்

தேசிய விருது வாங்கியபோதே தேசிய சொத்து ஆகிவிட்டார் விக்ரம். இப்போது அடிமட்ட இந்தியப் பிரஜைகளின் மனங்களிலும் இடம்பிடிக்கப்போகிறார் விக்ரம். எப்படி என்று கேட்கிறீர்களா?

மும்மையில் சக்கை போடு போட்ட படம் 'சாமி'. இந்திப்படங்கள் ஐம்பது நாளுக்கு உன்னைப்பிடி என்னைப்பிடி என மாய்ந்து கொண்டிருக்க, நூறு நாள்களை கடந்து 'சாமி'. அப்போதே இதைக் குறிப்பிட்டு சல்மான் கானும், விவேக்ஒபராயும் பேசியுள்ளனர்.

இப்போது தேசிய விருதும் கிடைத்த நிலையில், விக்ரமை எப்படியும் பாலிவுட்டுக்கு கொத்திக் கொண்டு போகத் தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் காத்திருக்கிறார்கள்.

ஓடு மீன் ஓடி, உறுமீன் வரும் வரை காத்திருந்து காரியத்தை சாதிக்கிறார் பிரபல தயாரிப்பாளர் வினோத் சோப்ரா. இவர் தயாரிக்கும் படத்தில் 90 சதவீதம் விக்ரம் நடிக்கலாம். இவருடன் இணைந்து நடிக்க இருப்பது எவர்க்ரீன் சூப்பர் ஸ்டார் அமிதாப்.

இந்தியாவில் மூன்று மிகப்பெரிய சினிமா இன்டஸ்ட்ரி இந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு. இதில் தமிழ் சினிமாவை ஏற்கனவே விக்ரம் வெற்றிகொண்டு விட்டார். 'அந்நியன்', 'அப்ரஜித்டு' என்ற பெயரில் தெலுங்கில் வெளியாகிறது. இப்போதே ஆந்திரா 'அப்ரஜித்டு' ஃபீவரில் சூடேறிக்கிடக்கிறது. படம் வெளியானால் அங்கும் விக்ரமின் கொடி பறக்கப்போவது உறுதி.

எஞ்சியிருப்பது பாலிவுட். அதற்கு அச்சாரம் போட வினோத் சோப்ராவே வந்துவிட்டார். சீயான், புகுந்து விளையாடுங்கள். ஆனால், தமிழ் ரசிகர்களை மறந்திடாதீர்கள்.



## தப்பியது சூப்பர் ஸ்டார் பட்டம்

அண்ணன் எப்போ சாவான்? திண்ணை எப்போ காலியாகும் என்ற நினைப்போடு உலாவிவந்த பல ஹீரோக்களுக்கு ரஜினியின் வரவு வயிற்றில் அசிட் வார்த்திருக்கிறது.

தளபாடக்கடையில் போய் சூப்பர் ஸ்டார் நாற்காலிக்கு ஓடர் கொடுக்கிற அளவிற்கு சுற்றிக் கொண்டிருந்த பல நட்சத்திரங்கள் கப்சிப் ஆகிவிட்டார்கள். சினிமாவில் வெற்றி தோல்விகள் சகஜம் தான். பாபாவும் அப்படி ஒரு பிரச்சினையைச் சந்தித்த படம் தான். அதற்காக ரஜினியின் சினிமா வாழ்க்கை இனி அவ்வளவுதான் என்று நினைக்க வேண்டுமா என்ன? பாபாவின் தோல்விக்கு பிறகு சில ஹீரோக்கள் மாற்றி மாற்றி கொடுத்த பேட்டிகளை திரும்ப எடுத்து படித்தால் சிரிப்புத்தான் வருகிறது.

முன்னணி ஹீரோவான விஜய் படத்தையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு கலெக்ஷனில் முன்னணியில் நிற்கிறது சந்திரமுகி. இனி வரும் கதைகளை ரஜினி ஆழ்ந்த அலசல்களுக்குப் பின் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் சூப்பர் ஸ்டார் நாற்காலியை கொஞ்ச வருடங்களுக்கு யாரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்றே தோன்றுகிறது.

## சிம்புவை நச்சரிக்கும் சந்தியா

ரீமாசென்னின் வாய்ப்பைப் பிடிக்க 'காதல்' சந்தியா மல்லுக் கட்டிக் கொண்டிருக்கிறார் சிம்புவிடம்.

தேனப்பன் தயாரிப்பில் சிம்பு நடிக்கும் 'வல்லவன்' படத்தில் மூன்று நாயகிகள். சிம்புவின் தோழியாக சந்தியாவும், காதலியாக நயன்தாராவும், எதிரியாக ரீமாசென்னும் நடிக்கிறார்கள்.

இதில் நெக்கட்டிவ் கேரக்டரில் ரீமாவுக்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டாம். நடிப்பதற்கு அந்தக் கேரக்டரை நமக்குத் தந்தால் இன்னும் நன்றாக இருக்குமே என சிம்புவை நெருக்கிக் கொண்டிருக்கிறார் சந்தியா.

சந்தியாவின் ராகத்திற்கு சிம்பு செவிசாய்ப்பாரா? படம் தொடங்கியபின்னர்தான் உண்மை நிலை தெரியும்.

## சினி பிட்ஸ்

ரோகன், சுபாபுன்ஷா நடிக்கும் 'திருடிய இதயத்தை' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடவுள்ளார் நடிகர் கார்த்திக்.

பாலா இயக்கத்தில் அஜித் நடிப்பதாக உள்ள படத்திற்கு 'நானே கடவுள்' எனப் பெயர் சூட்டப்பட்டு பின் 'நான் கடவுள்' என மாற்றப்பட்டுள்ளதாம்.

அந்நியன் படம் ரிலீஸ் ஆனதன் பின் 'ரோபோ' படத்தை ஆரம்பிக்க உள்ளார் இயக்குனர் ஷங்கர்.

'வேட்டையாடு விளையாடு' படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் கமல். அதில் ஒருவன் திருடன் மற்றவன் பொலிஸ்.

தன் இடுப்பில் தங்க தாயத்துக் கட்டியிருக்கிறார் நயன்தாரா. எல்லாம் பில்லி சூன்ய பாதுகாப்புக்குத் தான்.

தொடர் தோல்விகளை சந்தித்தாலும் சம்பள விஷயத்தில் கறாராக இருக்கிறார் தனுஷ். மார்க்கெட் உச்சத்தில் இருந்தபோது வாங்கிய சம்பளத்தையே இப்போது கேட்கிறாராம்.

ரவிகிருஷ்ணா நடிக்க அவரது அண்ணன் ஜோதிகிருஷ்ணா இயக்கும் படத்திற்கு 'கள்ளன்' என பெயரிடப்பட்டிருக்கிறது.

'அ...ஆ....' எனப் பெயர் மாற்றப்பட்ட 'பெஸ்ட்ஃப்ரண்ட்' படத்தில் பத்திரிகையாளராக நடிக்கிறார் எஸ்.ஜே.சூர்யா.

''அம்மா அப்பா செல்லம்'' படத்தை இயக்கிய சூர்யன் அடுத்து 'இதயத்தின் ஓசை' என்கிற படத்தை இயக்குகிறார்.

தமிழ் திரைப்பட உலகு ஒன்று கூடி உருவாக்கியிருக்கும் தமிழ்த்திரை சேனல் வரும் 16 ஆம் திகதியிலிருந்து ஒத்திகை விடுகிறது. 22 ஆம் திகதியிலிருந்து முழுமையான ஒளிபரப்பு ஆரம்பமாகுமாம்.

டென்னிஸ் வீராங்கனை சானியாவை சினிமாவின் நடிக்கவைக்க நடிகர் சிம்பு எடுத்து முயற்சிகள் தோல்வியடைந்தாலும் அவர் பெயரைச் யாரும் உச்சரித்தாலே குஷியாகிவிடுகிறாராம்.

பீக்காம் படத்தில் விஞ்ஞானியாக நாசரும், உதவி விஞ்ஞானியாக சொர்ணமால்யாவும் நடிக்கின்றனர்



'மோனலிஸா' --சதா--

## 'நானும் என் சந்தியாவும்'

சொந்தச் சோகத்தை வெற்றியாக மாற்றியவர் பூபதி பாண்டியன். இவரது 'தேவதையை கண்டேன்' ஏறக்குறைய உண்மைக்கதை. தனுஷின் சரிந்து கொண்டிருந்த மார்க்கெட்டுக்கு தற்காலிக தடைக்கல் போட்ட படமாக இது அமைந்துள்ளது. மீண்டும் தனுஷ் மேலேறுவதோ அல்லது சறுக்கி கீழே விழுவதோ தனுஷின் கையில்தான் உள்ளது.

'தேவதையைக் கண்டேன்' படத்தைத் தொடர்ந்து அடுத்த படவேலைகளில் மும்முரமாகிவிட்டார் பூபதிபாண்டியன். ஆர்.விஜயகுமார், எம்.பிரசாந்த் ஆகிய தயாரிப்பாளர்கள் படத்துக்கு 'நானும் என் சந்தியாவும்' எனப் பெயர் வைத்துள்ளார் பூபதி பாண்டியன்.

சந்தியா என்றால் நடிகை சந்தியாவா? என நீங்கள் கேட்கும் கேள்வி எமக்குப் புரிகிறது.

ஆம். அவரேதான். இந்தப் படத்தின் ஹீரோயின் 'காதல்' படத்தின் நாயகி சந்தியாதான். இவருக்கேற்ற கதாநயகனைத்தேடி வருகிறார்கள். இதற்கான தேடுதல் வேட்டையை ஆரம்பித்துவிட்டார் பூபதிபாண்டியன். மேலும், சுமன்ஷெட்டி, கருணாஸ், சந்திரமோகன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

ப்ரியன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவாவின் பின்னணி இசைக்கு வைரமுத்து பாடல்களை எழுதுகிறார்.

'நானும் என் சந்தியாவும்' ஜூன் மாதம் தொடங்குகிறது. அதற்குப் பின் ஒரே தடவையாக படத்தை முடிக்க திட்டமிட்டிருக்கிறார் பூபதி பாண்டியன்.

## கதாநாயகனாக அறிமுகமாகிறார் சூர்யாவின் தம்பி கார்த்தி

டீம் ஒர்க் புரொடக்ஷன் ஹவுஸ் பேனரில் இயக்குனர் அமீர் தயாரித்து, இயக்கி வெளிவந்து தற்பொழுது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் படம் 'ராம்'.

'ராம்' படத்தைத் தொடர்ந்து அமீர் மூன்றாவதாக இயக்க உள்ள படம் 'பருத்தி வீரன்'. இந்தப் படத்தை ஸ்டுடியோ கிரீன் பேனரில் கே.இ.ஞானவேல் தயாரிக்கிறார்.

தயாரிப்பாளருக்கும் இது முதல் படம். நடிகர் சிவகுமாரின் இரண்டாவது மகன் கார்த்தி இதில் கதாநாயகனாக அறிமுகமாகிறார். கார்த்தியின் அண்ணன் சூர்யா ஏற்கனவே முன்னணி நடிகராக வலம் வந்துகொண்டிருக்கிறார்.

நடிப்புவேண்டாம் என்று இயக்குனர் மணிரத்தினத்திடம் உதவி இயக்குனராக பணிபுரிந்து கொண்டிருந்தவரைக் கூப்பிட்டு 'பருத்தி வீரன்' படத்தில் கதாநாயகனாக அறிமுகம் செய்கிறார் அமீர். கார்த்தியின் ஜோடியாக நடிக்க புதுமுக நடிகை ஒருவரை அறிமுகப்படுத்துகிற திட்டத்தில், அதற்கான தேடுதல் வேட்டை நடத்திக் கொண்டு இருக்கிறார் இயக்குனர் அமீர்.

யுவன்ஷங்கர்ராஜா இசையமைக்க, ராம்ஜி ஒளிப்பதிவு செய்ய, கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் அமீர்.

'மௌனம் பேசியதே', 'ராம்' ஆகிய இரு வெற்றிப் படங்களைத் தொடர்ந்து மூன்றாவதாகவும் இந்தக் கூட்டணி தொடர்கிறது. மதுரை மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் படப்பிடிப்பு நடைபெறஉள்ளது.



'பருத்தி வீரன்'
-கார்த்தி-

# கவிதைப் பூங்கா

## மீண்டெழுவோம்

அடித்தாலும் தாய்மடிதேடும்
பிள்ளைகள் போல்தான்
இப்போதும் எமது உணர்வு
கடல்தாயே! உன்னை
'அன்னை' – என்று
விளிக்க
என் உணர்வுகள்
மறுக்கின்றன.
எப்படியம்மா
உனக்குள்ளேயும்
இந்தக் கோரப்பசி?
பெற்றோரை, உற்றாரை
கணவன், மனைவியை
உடன் பிறப்புக்களை
பிஞ்சுக்குழந்தைகளை
கோரப்பசிகொண்டு
நீ கொன்றழித்தாலும்
கடல் தாயுனது
அலைத்தாலாட்டில்
இமை மூடிய எங்களுடைய
இமைகள்
இப்போது மூட மறுக்கின்றன.
அலைகடல் ஓசை
கேட்டுக் கேட்டே
பழக்கப்பட்டுவிட்ட
எங்களது செவிகளும்
உன் அலை ஓசை கேட்கும்
ஆவலில்தான்.
இருந்தும், எமது இதயத்திற்கு
நீ தந்துவிட்டுப்போன
காயத்தின் பச்சை
சாயத்தினால்
உன்னருகில் வரவே–
பயமாகவுள்ளது – எமக்கு
கடல்தாயே!
நீயே எமை வாழவைத்து
எம்முறவுகளின் உயிர்களை
பறித்துச் சென்றுவிட்டாய்
உன் உப்புக்காற்றை
மட்டுமே
சுவாசித்துச் சுவாசித்து
உரமேறிய
நெஞ்சுரம் கொண்டவர்கள்
நாங்கள்
உனக்கே தெரியும்.
போராட்டம் என்பது
எமக்குப் புதியவையல்ல
''நீ தந்துவிட்ட
துயரங்களுக்குள்ளேயே
முடங்கிக்கிடப்போம்'' –
என்று மட்டும்
நீ நினைத்துவிடாதே
மீள எழுவோம்.
மீண்டெழுவோம்.
இது உறுதி!

**கல்லடி றொபட்,**
**களுத்துறைச் சிறை.**

## மறக்க நினைத்தும் முடியவில்லை

*என் இதய வானில்*
*உயிராகக் கலந்துவிட்ட*
*அவளின் நினைவு*
*நிழல்களாக மட்டும் என் மனதில்.*

*கனவில் கூட*
*நினைத்துப் பார்க்காத*
*பிரிவு என்னும் தவிப்பு*
*நிரந்தரமாக என்னைச் சூழ்ந்து*
*கொண்டது.*

*என் இனியவளே*
*ஏன் என்னை அணு அணுவாகச்*
*சிதைக்கின்றாய் – வேண்டாம்*
*என்னை நீயே கொன்றுவிடு!*

*நான் உனக்கு*
*நீ எனக்கு மட்டும்தான்*
*என்ற வார்த்தை – நிலையில்லா*
*வெறும் கானல் நீராகியதேன்.*

*அவளிற்காக நான்*
*சேர்த்து வைத்திருந்த*
*உயிர் சலனமற்று*
*இயங்கிக் கொண்டு இருக்கிறது.*

*அன்றொரு நாள்*
*உன் வரவுக்காய்*
*காத்திருப்பதையே*
*சந்தோஷம் என்ற விழிகள்*
*இமைமூட மறுக்கின்றன*
*தனிமையில் இன்று.*

*வீணையின் நரம்புகள்*
*பாதியில் அறுபட்டதால்*
*பாவம் என் ஏழை மனம்*
*அவளைவிட்டு விலகியிருக்க*
*முடியாமல் தவிக்கிறது.*

***ஜீ.பி.அன்ரனி,***
***யாழ்ப்பாணம்.***

## என்னடி பதில்?

பார்க்கும் பலமுகங்களில்
பதியும் சில முகங்கள் – அதில்
என் அகத்தினில்
உன் முகத்தினை அறிந்தேன்.
இது நட்பா? காதலா?
சிரிக்கும் சில்வண்டு கூட
சிலவேளை மௌனிக்கிறது.
ஆகாய நிலாக்கூட
அமவாசைக்கு
கைகொடுக்கிறது.
ஆனாலும் – உன்
நினைவலைகள்
தடம்புரளத் தத்தளிக்கின்றன.
உனது மௌனம் கூட
ஒருவித சம்மதத்தையே – எனக்கு
கற்றுத் தருகிறது.
சுனாமியின் வேகத்தை
மிஞ்சுகிறது
உன் பார்வை வேகம்.
உன்னை நினைப்பதற்குத்
தெரியும்
மறப்பதற்குத் தெரியவில்லை.
மறக்கிறேன்.... மறக்கிறேன்..
உன்னையல்ல என்னையே!

**க.சசிகரன்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

## தோழியின் வேதனை தீரவில்லை

உன்னுடன் நான்
சேர்ந்திருந்த போது
சோகம் ஏதும்
தோன்ற வில்லை.
பிரிந்து நீ
போன போது
பிளந்து போனது
என் இதயம்.
காணும் இடமெங்கும்
கண்கள் உன்னைத்
தேடுகின்றன.
வேதனை தளராது
நெஞ்சம் அழுகிறது
நானும் நீயும்
சேர்ந்திருந்த காலத்தில்
சேர்த்து வைத்த
உன் நினைவுகளை
மீள ஒருமுறை
மீட்டிப் பார்த்தேன்
வேதனை தீரவில்லை

**ஆ.சதர்சிகா,**
**தருமபுரம்.**

## எதை நான் எழுதுவது

*உறக்கமற்ற விழிகள்*
*உன் கவிதை பார்த்து*
*எதை நான் எழுதுவது?*
*வார்த்தை தேடி*
*வாழுகின்றேன் இங்கே*
*உனக்குள் நான்*
*உயிராய் மாறி*
*நீ எழுதியவரிகள்*
*சுட்டு எரிக்கின்றன என்னை.*
*என் இதயம் பற்றி*
*உன் சுவாசவரிகள்*
*புரிகிறது என்னைப் பற்றி*
*ஆனால் –*
*எதை நான் கூறுவது?*
*உன் புன்னகை பற்றி*
*பார்த்த பார்வையில் – என்*
*இதயக்கடல் பற்றி*
*ஒரே வினாடியிலே*
*இளநெஞ்சம் முற்றி*
*உயிரே எரிகிறது.*
*''நீ'' போல்*
*எதை நான் எழுதுவது?*

***பி.அனந்தி,***
***நெடுங்கேணி.***

## இனியொன்றும் இல்லை

*மண்ணில்லையென்றாலோ*
*மண்ணிற்காய் மடிகின்ற*
*மனிதர்களில்லை!*
*கண்ணில்லையென்றாலோ*
*காதலர் ஒருபோதும் கருவாவதில்லை!*
*விண்ணில்லையென்றாலோ*
*விண்மீன்கள் வாழ்ந்திட*
*வீடேதுமில்லை!*
*பெண்ணில்லையென்றாலோ*
*பூலோக வாழ்க்கையில்*
*பூரிப்பேயில்லை!*
*நிலவில்லையென்றாலோ*
*புது அல்லி பூமியில் மலர்வதேயில்லை!*
*உழவில்லையென்றாலோ*
*உலகத்தை உயிர்ப்பிக்கும்*
*உணர்வுள்ளோரில்லை!*
*மணமில்லையென்றாலோ*
*மலருக்கு மண்மீதில்*
*மரியாதையில்லை!*
*பணமில்லையென்றாலோ*
*பந்தங்கள் பாசங்கள்*
*பரிவேதுமில்லை!*
*காதில்லையென்றாலோ*
*கனிமொழி கேட்டதில்*
*கருத்தொன்றுமில்லை!*
*தீதில்லையென்றாலோ*
*கொடியோர்கள் ஒருபோதும்*
*கொழுப்பதேயில்லை!*
*எழில் இல்லையென்றாலோ*
*பாரிலே இருக்கின்றோர்*
*பார்ப்பதேயில்லை!*
*தொழில் இல்லையென்றாலோ*
*மகாத்மாவாயிருந்தாலும்*
*மதிப்பேதுமில்லை!*
*அழிவில்லையென்றாலோ*
*அநியாயம் செய்வோர்க்கு*
*அழிவேதுமில்லை!*
*தெளிவில்லையென்றாலோ*
*பார்க்கின்ற பார்வையில்*
*பயனேதுமில்லை!*
*தீயில்லையென்றாலோ*
*தினந்தோறும் தீயினால்*
*தீய்வோர்களில்லை!*
*நீயில்லையென்றாலோ*
*நிம்மதி என்வாழ்வில் நிலைபெறு*
*இல்லை!*
*எல்லையில்லையென்றாலோ*
*என்றென்றும் எம்வாழ்வில்*
*எதிர்பார்ப்புமில்லை!*
*இல்லை இல்லையென்றாலோ*
*இருக்கின்ற எம்வாழ்வில்*
*இனியொன்றும் இல்லை!*

***பராசசிங்கம் காயத்திரி***
***கிளி/.அக்கராயன் ம.வி.***

## பெண் மனமே இப்படியா?

மலர்விட்டு மலர் தாவும்
வண்டைப் போல...
மனம்விட்டு மனம் தாவிய
இரக்கமற்ற பெண்ணே...
காதலித்தாய் என்னை
சில நாளாய்...
புரிந்திருந்தாய் என்னோடு
பல நாளாய்...
இன்னொருத்தனை ஆட்டவன்ன
ஈரமற்று
என்னை
பிரித்துப் பார்த்து ரசிக்கிறாய்
நெடு நாளாய் – அடியே
உன் ஞாபக வெட்கையில்
மயங்கி வதங்கி கிடப்பேன்
என்று மட்டும்
கனவிலும் நீ....
நினைத்து விடாதே
பெண்களின் பிட்டுக்கெல்லாம்
ஆண்கள் ஒன்றும்
சம்பல் கிடையாது.

***எஸ்.பி.லக்குணா***

## கனவிலும் உன்முகம் வேண்டும்தாயே

விழிகளை மூடிடும் பொழுதினில் என் எண்ணம்
விடியாதோ இரவுகள் உன் மடியினில் என்றெண்ணும் – நல்
கனவுகள் தேடி வந்து கண்களில் கூடாதோ என்று
நினைவுகள் தேடி நின்று நித்தமும் எதிர்பார்க்கும்.

என் தலையினை உன் விரல்
கோதிடும் போதினில் -- பொன்மடியினில்
புரள்வது தெரியாமல் – நான்
புரண்டு புரண்டு தூங்க வேண்டும்,
அப்பொழுதினில் மட்டும் உந்தன்
பொன் முகம் கனவில் வேண்டும் தாயே!

**செ.கோபி,**
**ஆனந்தபுரம் கிழக்கு.**

## பதில்

மறக்க முடியவில்லை –
உன் நினைவு
தொடர முடியவில்லை –
உன் உறவு
அறிய முடியவில்லை –
உன் மனதை
மூடி மறைக்கிறாய் அன்பை
விரைவில் அனுப்பி விடு
உன் பதிலை

***யோ.நிக்ஸன்,***
***மல்லாவி.***

## தூக்கமில்லா இரவுகளில்

கவிதைகள் சொல்லிடத்
தேவையில்லை
உன் மொழி எனக்கு
கவியல்லவோ
காலையை வெறுத்துக் கொண்டு
மாலையை வரவேற்கிறேன்
என் காதுகளையே நேசிக்கிறேன்
உன் வார்த்தைகளை
சுவாசிக்கிறேன்
நீ விடும் மூச்சு
செவிப்பறையோடு
என் உள்ளத்தை தொடும்போது
எனை நானே மறக்கிறேன்
கனவுகளில் மிதக்கிறேன் – அங்கே
உன் முகத்தை தேடுகிறேன்
தெரியவில்லை உன்முகம் ஆனால்
உன் வார்த்தைகள் மட்டும்
எனக்குக் கேட்டுக்கொண்டே
இருக்கின்றன
என் தூக்கம் இல்லா இரவுகளை
ஆட்சி செய்யும் இனியவன் நீ
காலமெல்லாம் என்னோடு பேசிடு
நான் கவலை மறந்து
வாழ்ந்திருப்பேன்.

***எ.கவிதா,***
***யாழ்.பல்கலைக்கழகம்.***

## கைக்குட்டை

என் அவலக்கண்ணீரை
அரவணைக்கும்
கையடக்கத் தோழி

## தாய்

இதயக் கருவறையில்
உன்னை சுமந்ததால்
இன்று
கல்லறையிலும்
உன்னை சுமக்கிறேன்
இன்னும் ஒருதாயாக!

## கண்ணீர்

கரைந்த இரவுகளில்
தலையணையில்
கவிதையெழுதியது
என் கண்ணீர் மட்டுமே

## நிலா

நீயும் அவனைப்போல்தான்
கனவாய் இரவில் வந்து
கானலாய் காலையில்
மறைந்து விடுகிறாய்

## குழந்தை

கள்ளம் கபடமற்ற
கடவுளின் சந்நிதி

## மறதி

மனதில் எழுதியதை
இலாவகமாக அழிக்க
இறைவன் அளித்த கொடை

**இளையசகி, நல்லூர்**

மாலைத் தென்றல் முகத்தில் அறைந்தது. தமிழினி ஆச்சரியமாய் தன் அண்ணனைப் பார்த்தாள். சஜீவன் முகத்தில் தொன்கணக்கில் மகிழ்ச்சி. ஏனிந்த மகிழ்வும் பரபரப்பும்?

ஒரு பொருளாதாரவளம்மிக்க குடும்பத்தில், மிக அழகானதொரு பெண்ணை, எழிலும் இளமையுமான பெண்ணை அவள் அண்ணனுக்கு திருமணம் பேசி வந்திருக்கிறார்கள் பல லட்சங்களுடன்.

இந்த உலகில் தன்னைப் போல அதிர்ஷ்டசாலி எவருமே இல்லை எனும் பாவனையில் அண்ணன் நடந்துகொண்டான்.

பூவுலகின் சௌந்தர்யங்கள் அனைத்தும் தன்மீது சொரியப்படுவதான நினைப்பு. உயர... உயர எங்கோ பறக்கப்போகும் நினைப்பு. அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

ஒரு சில லட்சங்களுக்கும் அழகுக்குமாக ஆலாப்பறக்கும் தன் அண்ணனை நினைக்க தமிழினிக்கு வேதனையாக இருந்தது. தமிழினியும் சஜீவனும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள். ஆனால் சிந்தனையிலும், கருத்தியல்களிலும், ரசனைகளிலும் முற்றிலும் மாறுபட்டவர்கள்.

கீழைத்தேச கலாசாரத்தை, தமிழர் பண்பாட்டை, கர்நாடக இசையை, கிராமிய வாழ்க்கையை, அன்பின் அடிப்படையிலான மனித உறவுகளை விரும்பும் தமிழினியும், மேலைத்தேய கலாசாரத்தை ஆங்கில நாகரீகத்தை, நகரவாழ்வை, பொருளாதாரத்தின் அடிப்படையிலான மனித உறவுகளை விரும்பும் சஜீவனும் எப்போதுமே எதிரும் புதிருமாகத்தான் இருந்து வந்திருக்கிறார்கள்.

அன்பு, உண்மை, நேர்மை, தாழ்மை, எளிமை எனும் அடிப்படை இயல்புகளை உள்ளடக்கிய தமிழினி தன் கொள்கைகளில் உறுதியாகவும் வழிமுறைகளில் தெளிவாகவும் இருந்தாள். பெண் என்பவள் – சுய ஆற்றல் ஆளுமையோடு சமூகத்தில் உயர்ந்து நிற்கிறாளே தவிர தந்தையின் வங்கிக்கணக்கிலோ அல்லது அடிப்படை அழகு அந்தஸ்திலோ சமூகத்தில் உயர்ந்து நிற்பதில்லை எனும் கருத்தினைக் கொண்டவள் தமிழினி என்றென்றுமாய்.

பெண் என்றால் எழில், இளமை, பணம் இவற்றின் வடிவமைப்பு எனக்கருதும் சஜீவனுக்கும் தமிழினிக்கும் நித்திரைக்குச் செல்லும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் மோதலும் சண்டையும் இருந்து கொண்டே இருக்கும்.

''அண்ணா நீங்கள் செய்யிறது துளிகூட நியாயமில்லாதது, துரோகம். ஐந்து வருடங்களாக ஜானு உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள். சில லட்சங்களுக்காகவும் அழகுக்காகவும் ஜானுவை மறந்து கரோலினை செய்யிறது மகாபாவம் – துரோகம்''

''பொத்தடி வாயை – உன்ர வேலையை நீ பார்த்துக்கொண்டு போ. என்ர வழியில நீ குறுக்கிடாதை. எனக்குத் தெரியும் என்ர வாழ்க்கையை தீர்மானிக்க''

தமிழினி விடவில்லை... வாதாடினாள்.

தான் அறிந்தவகையில் ஓர் பெண்ணுக்கு அநீதி இழைக்கப்படுவதாய் உணர்ந்த தமிழினி ஜானுவுக்காக வாதாடினாள்.

அன்புகாட்டி நேசத்தை வளர்த்து நம்பிக்கையை விதைத்து ஜானுவின் எதிர்காலம் முழுவதிலுமே அவனில் தங்கி இருக்கும்படியாய் நடந்து கொண்ட சஜீவன் திடீரென சில லட்சங்களுக்காக அடிபணிந்து போவதை தமிழினியால் தாங்க முடியவில்லை.

தமிழினி – அடிப்படையில் அவளொரு பெண் – பின்னர் தான் அவள் சஜீவனின் சகோதரி.

ஜானுவோடு அண்ணன் சுற்றாத இடமே இல்லை. கலந்து கொள்ளாத விழாக்களில்லை. இந்த காதல் விவகாரம் தெரியாத நண்பர்களோ உறவினர்களோ எவருமில்லை. அப்படியான அண்ணன் ஏன் இப்படி மாறிப்போனான்? ஏன்? எதற்காக?

தமிழினிக்கு விடைதெரியவில்லை.

ஐந்து வருட காதல் வாழ்வு அலுத்துப் போனதா? ஜானுவை விட கரோலின் எழிலாய்த் தெரிகிறாளா அவனுக்கு? அல்லது கரோலினின் பணமும் வசதிகளும் அவனை அவள் வசப்படுத்தியதா?

முற்போக்கு வாதி என்று பல்கலைக் கழகத்திலும் தொழில் இடத்திலும் பிரதேசத்திலும் பெயர்பெற்ற அண்ணன்.... கல்லூரி மேடைகளிலும், பட்டிமன்றங்களிலும் தொண்டை கிழியக் கத்தும் அண்ணன்.... ஐந்து வருடக்காதல் வாழ்வை தன் தாயாரின் முன் வெளியிடத்துணியாமல் ''அம்மா நீங்கள் யாரைச் சொன்னாலும் நான் செய்யத்தயார்'' என்றபோது தமிழினி உறைந்து போனாள். அம்மாவின் முந்தானைக்குள் ஒளிந்துகொண்டு நிற்கும் தன் அண்ணன் ஓர் ஆணே தானா? என்ற சந்தேகம் வந்தது. ஜானுவும் நானும் கரோலினும் நண்பிகள் எனும் உண்மை சஜீவனுக்கு தெரியாதிருக்குமோ? தெரிந்திருந்தால் ஒருவேளை இத்தகைய முடிவு எடுத்திருக்க மாட்டானோ?

தமிழினி குழம்பினாள்.

கரோலினை தன் தேவதையாய், உலகமாக பொக்கிஷமாய் அண்ணன் கற்பனை பண்ணத் தொடங்கி இருப்பதை அவளால் உணர முடிந்தது. அந்த சுகானுபவத்திலே அண்ணன் வாழத்தொடங்கியிருப்பதை பார்க்க சிரிப்பதா அழுவதா எனத் தெரியவில்லை.

எங்கோ... வெகு தொலைவுக்கு போகப் போகிறாளா?

இனி ஜானுவின் நட்பு, உறவு அந்நியமாகிவிடுமா? ஜானுவை தன் அன்பான அண்ணி என்று எண்ணி வாழ்ந்த தமிழினி அழுதாள். சஜீவனை சபித்தாள். அவனின் நினைவுகளைச் சுமந்து கொண்டு ஓர் இளம் பெண் இந்த உலகிலே தனித்துப் போவதை நினைக்க நினைக்க வேதனை நெஞ்சை அடைத்தது. பால்யமிருந்தே தொடர்ந்த நட்பிழந்து தவித்தாள் தமிழினி.

அண்ணனுக்கு இதற்கான தண்டனை கிடைப்பதெப்போது? அல்லது தீங்கும் துரோகமும் இழைத்த அண்ணனின் வாழ்வு வசந்தமாகி, ஜானுவின் வாழ்வு பாலைவனமாகிப் போவதுதான் இறைவனின் தீர்ப்பா? வாழ்வியல் நியதியா...? புரியவில்லை அவளுக்கு. இந்த உலகமெனும் நாடகமேடையை வெறுத்தாள் தமிழினி. நேரம் பார்த்தாள் – ஜானு



# ஏமாற்றம்

ஜானு காலையில் சொன்ன வார்த்தைகளை தமிழினி மீட்டுப்பார்த்தாள். ''தமிழி இன்னும் நான் ஏமாறத்தயாரில்ல. ஐயாம் வெரி சொறி.... சஜீவன் விழித்துக் கொள்ளும் ஓர் காலம் வரும். ஆனால் நான் அப்போது இங்கிருக்கப் போவதில்லை.

இந்த ஏமாற்றத்திலும் வேதனையிலும் இருந்து நான் மீள சில காலமாகலாம். அதற்காக நான் வாழும் சூழலை மாற்றிக் கொள்ளப் போறேண். நான் இன்று 'நைற்' மாலைதீவு போறன். விட்டுவந்த ஆங்கில ஆசிரியைத் தொழிலை திரும்பவும் செய்யப்போறன். போய்வாறன் தமிழி... பை'' ஜானு தொலைபேசியை வைத்தபோது தமிழி கலங்கிப்போனாள். விழிநீர் சொரிந்து நின்றாள், செய்வதறியாது.

ஜானு எத்தனை எதிர்பார்ப்போடு இருந்தாள். பெற்றாரை உறவினரை எதிர்த்து தன் காதலில் உறுதியாக இருந்தாள். தான் ஏமாந்து அவமானப்பட்டு தனித்துப்போனதான உணர்வோடு இவ்வேளை எங்கோ வெகுதொலைவுக்கு பறந்து போயிருப்பாள். 'என் கோழை அண்ணன் உனக்கு வேண்டாம் ஜானு' அழுதாள். அண்ணன் தன் தேவதையை சந்திக்கப் புறப்படுவது தெரிந்தது. மனதின் வலி – சினமாகியது. சே.... இவனால் எப்படி நிம்மதியாக வாழமுடியும்? ஆயுள் வரைக்குமே தன்னால் வஞ்சிக்கப்பட்ட ஏமாற்றப்பட்ட பெண்ணின் நினைவு இவனுக்கு வாராதா? அல்லது பணம், வசதி, உணர்வுகள் அத்தனையும் இணைந்து இவனை பழையவைகளை மறக்க வைக்க முயலுமா.... தான் ஆணென்னும் கர்வத்தோடே.

ஜானுவிடமே கரோலினின் போட்டோவைக்காட்டி 'யூ சீ... மை ஏஞ்சல்...' என்றானே – ஓர் ராட்சசனுக்கு சகோதரியாய் பிறந்ததாய் உணர்ந்தாள் தமிழி.

''அண்ணை கோல்பேஸில் என்னை இறக்கி விடுறீங்களா போகும்வழியில்''

''இல்ல நான் கரோலின் வீட்டுக்கு போறன்''

''சரி நானும் கூடவந்து போகிறேன்''

''நீ ஏன் அங்க''

''தேவதை தரிசனம்''

மனதில் வக்கிரத்தோடு தமிழினி சொல்ல சஜீவன் பெருமிதமாய் சிரித்தான்.

பிரமாண்டமான கரோலினின் வீட்டின் வெளிக்கேற் இலகுவாக திறந்திருந்தது. நேர்த்தியாக வெட்டப்பட்ட சிறு கன்றுகள், பூச்செடிகள். வீட்டினுள் இருந்து பலத்த குரல்கள். அழைப்பு மணியில் கைவைக்கப் போய் – பின்வாங்கினான் சஜீவன் .

தாயும் மகளும் வாதாடுகிறார்கள். அண்ணனின் தேவதை காட்டுக்கத்தல் கத்தியது.

''பொத்தடி வாயை – நாங்க சொல்றவனைத்தான் நீ கட்டவேணும்''

''அம்மா உங்களுக்கு தேவையெண்டால் அவனை நீங்கள் கட்டிக்கொள்ளுங்கள்'' சஜீவன் அதிர்ந்து போனான்.

''அம்மா நான் ரவியைத்தான் விரும்புறன், அவரைத்தான் செய்யப்போறன் என்னைப்போல் அவர் படிச்சியிருக்கிறார், பாங்கில வேலை செய்கிறார், இப்படவும் சாதி அது இதுவெண்டு கொண்டு நிக்கிறியளே! சே... சொல்லிப் போட்டன், என்னை மீறி – சஜீவனைத்தான் கட்டவேணுமெண்டு வலுக்கட்டாயப்படுத்தினால்... மருந்து குடிப்பன் இல்லாட்டில் ஓடிப் போவன் ரவியோட. அப்படி கட்டி வைச்சாலும் கூட என்ர மனசில சஜீவனுக்கு இடமில்லை. பெயருக்கு புருஷனாய் இருப்பான் அவன்''

சஜீவன் ஸ்தம்பித்தான். தமிழினி மனதில் இனம் புரியாத உணர்வு. இவ்வளவு சீக்கிரமாய் தீர்ப்பு எழுதப்படுமா? தமிழினி சஜீவனைப் பார்த்தாள். ஜானு பறந்து போனாள். கரோலின் இதயத்தில் ஒருவனை அமர்ந்திருக்கிறாள். சஜீவன் இனி?

# புஷ்ஷை ஏமாற்றிய பறவைகள்

அமெரிக்க ஜனாதிபதி மாளிகைப் பகுதிக்குள் மர்ம விமானம் ஒன்று ஊடுருவியதாக எழுந்த வதந்தியைத் தொடர்ந்து ஜனாதிபதி புஷ் பாதாள அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி தீவிரவாதிகள் விமானங்களைக் கடத்திச்சென்று நியூயோக்கில் உள்ள வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரம் மீது மோதி அதனைத் தகர்த்தனர்.

அதைத்தொடர்ந்து வாஷிங்டனில் வெள்ளைமாளிகை இருக்கும் பகுதி மீது விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் தடைசெய்யப்பட்ட பகுதியில் மர்ம விமானம் ஒன்று ஊடுருவி இருப்பதாகவும், அது வெள்ளை மாளிகையைத் தாக்கலாம் என்றும் வெள்ளை மாளிகைப் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து புஷ் அவசர அவசரமாக பாதாளச் சுரங்க அறைக்கு அழைத்துச் சென்று



தங்க வைக்கப்பட்டார்.


அபாயம் ஏதும் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

ஹெலிக்கொப்டர்கள் வரவழைக்கப்பட்டன. மர்ம விமானம் ஏதும் ஊடுருவி இருக்கிறதா என்பதை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிறகு தான் விமான[illegible]ததல் பற்றி கிடைத்த [illegible] வெறும் [illegible]ந்தி என்பது தெரிய[illegible]

[illegible]டைசெய்[illegible]ட்ட பகுதிக்குள் கூட்டமாகப் பற[illegible]ள் பறந்தன. இது ரடார் திரையில் [illegible]றான எச்சரிக்கையை கொடுத்துவிட்டது. இதை வைத்து விமானம் தான் ஊடுருவிவிட்டது என்ற தவறான முடிவுக்கு அதிகாரிகள் வந்து விட்டனர்.

# கணினித்துறையின் புதிய பார்வை

உலக அளவில் தகவல் தொழில்நுட்பத் துறை அலுவலகங்களின் கனவு மையமாகவும், முதுகெலும்பாகவும் அனைவரும் மைக்ரோசாஃப்ட் கார்ப்பரேஷன் நிறுவனத்தையே பார்க்கின்றனர். அந்நிறுவனத்தின் செயல் பாடுகளை பொறுத்தே வருமான ஏற்ற விகிதங்கள், புதிய பொருளாதார வரவுகள், மென்பொருள் ஏற்றுமதி ஆகியன மாறுபடுவது மட்டுமின்றி அவர்களின் தேவைகளுக்கேற்ற படி வேலை வாய்ப்புகளும் பெருகி வருகின்றன. மைக்ரோசாஃப்டின் புதியமென் பொருள் தயாரிப்பு வடிவமைப்புக்கேற்றபடி வேலை வாய்ப்புகளும் பெருகுவதால் இளைஞர்கள் அடுத்து என்ன படிப்பது என்ற கனவுடன் உள்ளனர்.



35 நாடுகளில் சுமார் 55,000 ஊழியர்களுடன் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு ஜீன் மாதம் வரை இந்நிறுவனத்தின் நிகரலாபம் 36.84 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். அந் நிறுவனத்தின் நிறுவனர் பில்கேட்ஸை உலகமே அறியும். ஆனால் அவர் 13 வயதிலேயே பள்ளிப்படிப்பை தவறியவர் என்பது பலருக்குத் தெரியாத ஒன்று. மேலும், அவர் அவ்வயதிலேயே கம்யூட்டரைப் பயன்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1973ஆம் ஆண்டு மீண்டும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் விருப்ப மாணவராக சேர்ந்து கல்லூரி படிப்பை முடிந்தார். பள்ளிச் சூழலில் கல்வியை தவறியதால் என்னமோ, அனைவரும் கல்வியைப் பெற வேண்டும் என்பதில் பில்கேட்ஸ் தற்போது ஆர்வத்துடன் இறங்கியுள்ளார்.


அமெரிக்காவில் மூன்றில் ஒரு பங்கு இளைஞர்களே கல்லூரி படிப்புகளை எட்டுகின்றனர். மீதமுள்ள இரண்டு பங்கு மாணவர்களின் கல்வி பள்ளிப்படிப்பிலேயே முடிந்து விடுகிறது. இந்நிலையை மாற்றிட பில்கேட்ஸ் சபதம் ஏற்றுள்ளார். பில்கேட்ஸின் கேட்ஸ் பவுண்டேஷன் மையம் இதற்கென ஒரு பில்லியன் டொலரை முதலீடு செய்துள்ளது.

அனைத்து குழந்தைகளும் கல்லூரி படிப்பைத் தொடர வேண்டுமென்பதே இவரின் தற்போதைய நோக்கமாகும். இதற்கென அமெரிக்க அரசின்கல்வித் திட்டத்தை வடிவமைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கக்கோரி அனைத்து கவர்னர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க நாட்டு மொழிகளில் மென்பொருள் தயாரிப்புகளுடன் இண்டர்நெட், ஈமெயில் போன்ற தகவல் தொடர்பு திட்டங்களும் முழு வீச்சுடன் செயல்படுத்தப்படுன்றன. கிராமம் நகரம் வரை தகவல் தொழில்நுட்பம் சென்றடைய, இதுவே சரியான வழி என கருதுகின்றனர். அமெரிக்க கல்வித் திட்டத்தை சீரமைத்து, மறுவடிவம் கோரி பல்வேறு வகையான பணியை பில்கேட்ஸ் முடுக்கிவிட்டுள்ளார். இக்கல்விப் பணிகள் அவரின் சொந்த திட்டமாக இருந்தாலும் நாம் எதிர்நோக்க வேண்டியதென்ன என்று பார்ப்போம்?

கோப்புகளை கையாளுதல், பதிவுமுறை, இணையதள பயன்பாடுகள் போன்றவற்றுக்கு மைக்ரோசாஃப்ட் நிறுவனம் பல மேம்பாட்டுத் திட்டங்களை செய்து வருகிறது. மைக்ரோசாஃப்டின் பெரும்பான்மையான நோக்கம் உலக மொழிகளை சார்ந்து அதன் வளர்ச்சியை பெருக்க திட்டமிட்டுள்ளதாகும். கம்ப்யூட்டர் மற்றும் கம்யூனிகேஷன் தொடர்புகளின் தாய்மொழி சேவைகளும் வடிவமைப்பு முறைகளும் வளரும் என்ஜினியர்களுக்கு பல வகைகளில் வேலை வாய்ப்பு பெருக உள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. இதை பல மனிதவள மேம்பாட்டு மையங்கள் கணித்து வைத்துள்ளன.





தற்போது எக்ஸ்.எம்.எல். (XML) மென்பொருள் பணிக்குபெரிய வாய்ப்பு பெருகியுள்ளது. கணிப்பொறியாக்கங்கள் பெரும்பாலும் மருத்துவ மற்றும் நிதித்துறை வாய்ப்புகளுக்கே செயல்படுத்தப்படுகின்றன. இச்செயல்பாடுகள் அனைத்தும் மைக்ரோசாஃப்ட் ஆபீஸ் சிஸ்டத்தின் உறுதுணையுடன், எக்ஸ்.எம்.எல் தேவை நிலை பெருகியுள்ளதென கூறலாம்.

கடந்த பெப்ரவரி மாதம் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் 'ஆபிஸ் சிஸ்டம் டெவலப்மெண்ட்' மாநாட்டினை நடத்தியுள்ளது. எக்ஸ்.எம்.எல் பயன்பாட்டை வலியுறுத்தி செயல்பட்ட இம்மாநாட்டில் 800 மென்பொருள் புரோகிராமிங் என்ஜினியர்களும், 3, 00, 000 மென்பொருள் வடிவமைப்பாளர்களும் கலந்துகொண்டனர். அலுவலக பயன்பாட்டின் அனைத்து தேவைகளிலும் எக்ஸ்.எம்.எல் – க்கான தேவை வலியுறுத்தப்பட்டு புதிய திட்டங்களும் பரிமாறப்பட்டுள்ளது. இந்த எக்ஸ்.எம்.எல் தேவைக்கான அறிகுறி தேவையென்பதால் உலகளவில் இளைஞர்களின் கவனம் எக்ஸ்.எம்.எல். பக்கம் தற்போது திரும்பியுள்ளது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 159

சொற்சிலம்பம் 159போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் மே14 ஆம் திகதி ஆகும். விடைகள் மே 22 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 29ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.157க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 1..ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
35,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 159

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| | ■ | 7 | | | | | |
| 8 | 9 | | | ■ | 10 | | ■ |
| 11 | | | ■ | 12 | | ■ | 13 |
| ■ | | ■ | 14 | | ■ | 15 | |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.157

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | 2 மு | 3 க | ன் | ■ | 4 ம | 5 த | 6 கு |
| 7 ச | க | ம் | ■ | 8 ஓ | த | ன | ம் |
| ■ | 9 த | பு | 10 தா | ர | ன் | ■ | பி |
| 11 கு | லை | ■ | 12 மி | க | ■ | 13 க | ட |
| ந் | ■ | 14 சோ | ர | ம் | 15 போ | த | ல் |
| 16 தி | 17 யா | க | ம் | ■ | 18 த | ம் | ■ |
| 19 தே | ச | ம் | ■ | 20 ந | க | ■ | 21 உ |
| 22 வி | னை | ■ | 23 வ | ர | ன் | மு | றை |

## சொற்சிலம்பம் போட்டி இல.159

### இடமிருந்து வலம்

1. உழைத்துப் பெறு.
4. அலுப்பால் வருவது.
7. செல்வந்தன்.
8. பத்துப் பாடல்களைக் கொண்டது.
10. தங்களது, தமது என்பதைக் குறிக்கும்.
11. உயர்வானது/ மேன்மையானது/ உறுதியானது என்பதைக் குறிக்கும்.
12. நெஞ்சுப் பகுதி.
14. இது ஓய்வதில்லை.
15. மந்தி.
16. உயர்வானது. 'பைசா', 'ஈபிள்' எல்லாம் இதனுள் அடக்கம்.
18. நஞ்சு.
19. சாப்பிடும் உணவு உடலில் சேர்வது இதன்மூலம்
21. நடுப்புள்ளி / மத்திய புள்ளி.
22. சேதமுற்ற பின் எஞ்சுவது.

### மேலிருந்து கீழ்

1. கணவன் – மனைவி.
2. சாதகமானது அல்ல.
3. நாள்.
4. நிலுவை அளவை.
5. ரூபாயில் நூறு.
6. சாப்பிடு
9. சாவி.
12. காலைக்குப் பின் வருவது / சரம்.
13. தாய் – தகப்பன் – பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து உருவாவது.
14. அடுப்படியில் காணப்படும் கருவி.
15. நடந்து செல்லுமாறு விடுக்கப்படும் பணிப்பு.
16. இந்த மாவில்தான் இப்போது இங்கு வாழ்க்கை.
17. சோறுக்கு சுவையூட்டுவது. தனித்தும் குடிக்கலாம்.
18. தங்குமிடம்.
20. ஈரலிப்பான இடத்தில் வளரும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 155

1. ப.கனகசிங்கம்
   'அரிய வாசா''
   24, 4ஆம் குறுக்குத் தெரு,
   யாழ்ப்பாணம்.
2. கே.அரசேஸ்வரன்
   கலைமகள் வீதி,
   நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
3. திருமதி இ.பிரதீபா
   சூட்டிவீதி, முதலாம் வட்டாராம்
   புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

### பாராட்டுப் பெறுவோர்

1. திருமதி ராஜினி புண்ணியமூர்த்தி
   36 புகையிரத நிலைய வீதி,
   மட்டக்களப்பு.
2. திருமதி ஆர்.எம்.தயானந்தா
   15ஆம் கட்டையடி,
   உடுப்பிட்டி.
3. ஏ.ஆர்.அலெக்ஸாண்டர்
   18 சௌமியபுரம்,
   கொட்டகலை.
4. திருமதி த.தனலட்சுமி
   40 ரெயில்வே கிழக்கு ஒழுங்கை,
   கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
5. சே.இந்திராணியம்மா
   தாமரைக்குளத்தடி
   துன்னாலை,
   கரவெட்டி.
6. செல்வி வேலு ராஜேஸ்
   2 ஆம் குறுக்கு ,
   கல்லடி வேலூர்,
   மட்டக்களப்பு.
7. எஸ்.ஷஞ்ஜித்
   34,லவண்டர் வீதி,
   திருகோணமலை.
8. பா.ஏஞ்சலின்
   58, கொழும்புத்துறை வீதி,
   சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
9. பா.சுகேசினி,
   வேதாரணியம் வளவு,
   உடுவில் கிழக்கு,
   சுன்னாகம், யாழ்ப்பாணம்.
10. பு.நேரிந்தன்
    697, யோகபுரம் மத்தி,
    மல்லாவி.

# கிரிக்கெட்டிலிருந்து கில்கிறிஸ்ட் குழந்தைகளுக்காக ஓய்வு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கில்கிறிஸ்ட் 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியோடு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற இருக்கிறாராம். இதை அவரே அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.


கில்கிறிஸ்ட்

கிரிக்கெட்டிற்கு விரைவிலேயே விடை சொல்லிவிட்டு தனது குழந்தைகளோடு அதிக நேரத்தைச் செலவிட இவர் விரும்புகிறாராம்.

''நான் கிரிக்கெட்டிலிந்து ஓய்வு பெறும் வரை அடுத்த சிலவருடங்கள் இந்த வியைாட்டில் தாக்குப்பிடிப்பதற்கான போராட்டத்தில் உடல் ரீதியிலான சவால்களை விட மனரீதியான சவால்களையே அதிகம் சந்திக்க வேண்டியிருக்கும். எப்போது உன் குடும்பத்துடன் அதிகநேரம் செலவிடப் போகிறாய் என்று என் மனது அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருக்கும்.

''என் குழந்தைகள் பக்கத்திலிருந்து அவர்களை வழிநடத்த வேண்டிய நேரமிது. இந்த நேரத்தில் அவர்களுடன் நான் இல்லாமல் இருந்தால் அவர்கள் என்னை மறந்தே விடுவார்கள்.'' –என்கிறார் கில்கிறிஸ்ட்.

உலகின் சிறந்த விக்கெட் காப்பாளரான கில்கிறிஸ்ட் இதுவரை டெஸ்ட் ஆட்டத்தில் 260 'கட்ச்'களையும் 27 'ஸ்டம்ப்'களையும் செய்திருக்கிறார். ஒருநாள் ஆட்டங்களில் அதிரடியாக விளையாடி 7000 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார்.

# கிரிக்கெட் பயிற்றுனராக வெங்கடேஷ் பிரசாத்

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறும் அல்லது விலக்கப்படும் கிரிக்கெட் வீரர்கள் அடுத்து குறிவைப்பது வர்ணனையாளர் பணிதான். ஆனால் இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் 19 வயதிற்குட்பட்டோர் பங்குபற்றும் இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஒரு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருப்பது என்னை குதூகலிக்க வைக்கிறது என அவர் மிகுந்த சந்தோஷத்துடன் கூறியுள்ளார்.

''ஒரு பயிற்சியாளராக இருப்பது எளிதான வேலையில்லை. இந்தப் பணியில் ஒரு வித்தியாசத்தைக் கடைப்பிடிக்க விரும்புகிறேன். பயிற்சியாளர் பணிக்கு முதலில் வீரர்களின் மனிநிலைகளை புரிந்து கொள்ளும் திறமை வேண்டும். 'சீனியர்' அணிக்கு பயிற்சி கொடுப்பதை விட 'ஜூனியர்' அணிக்கு பயிற்சி கொடுப்பது கடினமான காரியம். காரணம் 'ஜுனியர்' அணியின் பயிற்சியாளருக்கு உதவி செய்ய போதுமான அலுவலர்கள் இருக்க மாட்டார்கள்.


இந்த அணி வீரர்களை நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களைப்போல் உள்ள ஆடுகளத்திற்கு அழைத்து சென்று பயிற்சி அளிக்க விரும்புகிறேன்.'' – என்கிறார் பிரசாத்.


வெங்கடேஷ் பிரசாத்

# ஐ.சி.சி. தரவரிசையில் பிரைன் லாரா முதலிடம்

ஐ.சி.சி.யின் டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் பிரைன் லாரா முதலிடம் பிடித்தார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் 176 ஓட்டங்கள் அடித்ததன் மூலம் இரண்டு இடங்களைத் தாண்டி அவர் முதலிடத்திற்கு முன்னேறினார்.


பிரைன் லாரா

முன்னதாக முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்க வீரர் கலிஸ் 2ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். 2ஆவது இடத்திலிருந்த இந்திய அணியின் உபதலைவர் ராகுல் டிராவிட் 3ஆவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டார்.

பிரைன் லாரா தற்போது 886 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார். 4புள்ளிகள் குறைவாகப் பெற்றுள்ள கலிஸ் 2ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறார்.

872 புள்ளிகளைப் பெற்றுள்ள டிராவிட் மூன்றாவது இடத்திலிருக்கிறார். 2004ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு மேற்கிந்திய வீரர் ஒருவர் முதன்முறையாக முதலிடத்தைப் பிடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வீரர்கள் எவரும் முதல் 10 இடங்களுக்குள் இல்லை.

பந்துவீச்சைப் பொறுத்தவரை மெக்ராத் 897 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். இலங்கை வீரர் முரளிதரன் 834புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்க வீரர்களான பொலக், நித்தினி முறையே 2, 3ஆம் இடங்களைப் பிடித்துள்ளனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள வோர்ன் 6ஆவது இடத்திலேயே உள்ளார்.

# அமெரிக்கப் பயிற்றுநர்களிடம் சீனத் தடகள வீரர்கள் பயிற்சி

அமெரிக்காவின் பிரபலமான பயிற்சியாளர்களிடம் சீனாவைச் சேர்ந்த தடகள வீரர்கள் தீவிர பயிற்சி எடுத்து வருகின்றனர்.

இந்த முயற்சிக்கு அவர்களுக்கு நல்ல பலனும் கிடைத்திருக்கிறது. திறமையான பயிற்சியாளர்களிடம் பயிற்சி பெறறோம் என்ற திருப்தி சீனர்களுக்கும், அருமையான வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்தோம் என்ற திருப்தி பயிற்றுநர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

கிளைட் ஹார்ட் என்ற பிரபல அமெரிக்கப் பயிற்சியாளர் அவர்களுக்குப் பயிற்சி வழங்குகிறார்.

ஜியாங் போ, யாங் யாவ், ஜாவ் ஜியாமின், ஹூ செங்ஜியாங் என்ற 4 சீன வீரர்கள் அவரிடம் பயிற்சி பெறுகின்றனர்.

இவர்களில் ஜியாங் மட்டும் ஊஹான் என்ற சீன மாநிலத்தைச் சேர்ந்தவர். மற்றவர்கள் ஷாங்காய் நகரைச் சேர்ந்தவர்கள்.

மைக்கல் ஜோன்சன் என்ற பிரபல அமெரிக்க ஒலிம்பிக் வீரர் வாகோ என்ற இடத்தில் உள்ள இந்த மையத்தில்தான் பயிற்சி மேற்கொண்டு ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கங்களைக் குவித்தார். அவருக்கு பேய்லர் ஹார்ட் என்ற பயிற்சியாளர் பயிற்சி அளித்தார். அதே மாதிரியான பயிற்சி இப்போது சீனர்களுக்கும் வழங்கப்படுகிறது.

மைக்கல் ஜோன்சன் மட்டுமல்ல ஜெரிமி வாரினர் என்ற அமெரிக்கரும் இங்கு பயிற்சி பெற்றே ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கங்கள் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்கம் அசிங்கமானது ஏன்?

இந்தியக் கிரிக்கெட் அணியின் அணித்தலைவராக இருக்கும் சௌரவ் கங்குலி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். பெங்கால் டைகர் என்றும் கல்கத்தா பிறின்ஸ் என்றும் அழைக்கப்படுபவர். சமீப காலமாக இவரது ஆட்டம் மிக மோசமாக உள்ளது. இதனால் பலரது விமர்சனங்களுக்கு கங்குலி உள்ளாகி வருகிறார். ஒரு வீரர் நன்றாக ஆடினால் தலையில் தூக்கி வைத்துகொண்டாடுவதும், மோசமாக ஆடினால் படங்களை எரித்தும், செருப்பு மாலை போட்டும் அசிங்கப்படுத்துவதும் இந்தியக் கிரிக்கெட் ரசிகர்களின் வழக்கம். அதை கவிதையாக ரசிகர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

கல்கத்தா இளவரசனே!

கொள்கைகள் பல உடையவனே

சச்சினுடன் நீ ஆடிய ஆட்டம்

இப்போ எங்கே போனது

சிக்ஸர்கள் பல அடித்தவனே

சிக்கலில் இப்போ சிக்கிக் கொண்டாயே

டைகர் என்று அழைக்கப்பட்ட சிங்கமே

உனக்கு இப்போது ஏற்பட்டது அசிங்கமே

நீ பந்துகளை பவுண்டரிக்கு வெளியேற்றிய காலம் போய்

இப்போது பந்து உன்னை வெளியேற்றுகிறதே

உன் முன்னாள் காதலியோ தாதாவின் கூட்டத்தில்

நீயோ எழவேண்டிய கட்டத்தில்

தலைவர்களோ உன்னைத் தூக்கும் திட்டத்தில்

விளம்பரத்தில் பிரமாதம் – ஆனால் விளையாட்டில் அபராதம்

உனக்கு ஏன் இந்த விபரீதம்

எழுந்து கொள் தலைவனே எழுந்து கொள்!



# விளையாட்டுச் செய்திகள்!

ஜெனிஃபர்



ஹொங்கொங்கில் 'குயின்ஸ் சில்வர் ஜூபிலி' என்ற கிண்ணத்துக்காக குதிரைப்பந்தயம் ஒன்று கடந்தவாரம் நடைபெற்றது. இப்போட்டியில் பல நாடுகளிலிருந்து சுமார் 250 வீரர்கள் கலந்துகொண்டனர். போட்டியின் ஒரு கட்டத்தில் வேகமாக குதிரையை செலுத்தி வந்த வீரர் ஒருவர் தடையில் மோதுண்டு தலைகீழாக தரையில் விழுவதைப் படத்தில் காண்க.

# பத்மா சோமகாந்தனுக்கு கௌரவமும் பாராட்டும்

அறிதல், ஆக்குதல், பகிர்தல் – உலகில் இன மொழி பாலினம் கடந்து மானிடம் பாடும் பெண் படைப்பாளிகளின் பெண்கள் இன்று கல்வியை பெற்றுக் கொண்டாலும் பூரணமான சுதந்திரம் அடைந்துவிட்டனரா என்பது கேள்விக் குறியே. இந்த ரீதியிலே பெண்களது பூரணத்துவம், ஆளுமை வளர்க்கப்படவேண்டுமென்ற கருத்துக்கள் சார்ந்த எழுத்துக்களை முன்னெடுக்கும் பத்மா சோமகாந்தன் போன்ற எழுத்தாளர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்'' என பிரபல எழுத்தாளர் திலகவதி ஐ.பி.எஸ்.கூறினார்.



சென்னையில் நடைபெற்ற 'திசைகள்' ஏற்பாடு செய்த இலக்கிய விழாவில் பங்கேற்ற பெண் படைப்பாளிகள் திலகவதி, பத்மா சோமகாந்தன், வைகைச் செல்வி திலகபாமா ஆகியோரையும் நாவலாசிரியர் பொன்னீலனையும் படத்தில் காண்க.

நாவலாசிரியர் செ.கணேசலிங்கம், 'தரிசனம்' நாவலுக்கான சாகித்தியப் பரிசு பெற்ற நாவலாசிரியர் பொன்னீலன், 'திசைகள்' இணையத் தளச் சஞ்சிகையின் ஆசிரியரும், சன் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிப் பொறுப்பாளரும் 'இந்தியா டுடேயின்' முன்னாள் ஆசிரியருமான மாலன் ஆகியோர் பெண் படைப்பாளிகளைப் பாராட்டிக் கௌரவித்தனர். பாரதி ஆய்வு அறிஞர் பெ.சு.மணி, பத்மா சோமகாந்தனுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார். அந்தனி ஜீவா தொகுத்த இலங்கை வாழ் எழுத்தாளர்களுடைய சிறுகதைத் தொகுதியான அம்மா என்ற நூலை எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் அறிமுகம் செய்து வெளியிட்டு வைத்தார்.

தமிழிச்சி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

எழுத்துக்களைவரவேற்றுக் கௌரவிக்கும் விழா சென்னை மைலாப்பூர் பாரதி வித்தியாபவன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் இலங்கையின் மூத்த எழுத்தாளர் பத்மா.சோமகாந்தன், தமிழ் நாட்டைச் சேர்ந்த வைகைச் செல்வி கவிஞர் திலகபாமா ஆகியோர் கௌரவமும் பாராட்டும் பெற்றனர்.

''இலக்கியம், சிறுசஞ்சிகைகள்என்பன ஒருவழிப்பாதையாக இருந்த நிலைமாறி இலங்கை எழுத்துக்களை மதிப்பதும் அவர்களின் ஆக்கங்களை வாங்கி வாசிப்பதுமல்லாமல் இப்படி அவர்களிலொருவரான என்னை பாராட்டிக் கௌரவிப்பதையுமிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்'' என பத்மா சோமகாந்தன் தனது உரையில் குறிப்பிட்டார்.

''பெண் கல்வியை வற்புறுத்திய பாரதி பெண்விடுதலை வேண்டி நின்றார். மாட்டை அடித்து வதக்கி தொழுவினில் மாட்டும் வழக்கத்தை வீட்டில் பெண்களிடமும் காட்டியதை அவர் வன்மையாக எதிர்த்தார்.




அறிஞர் பெ.சு.மணி விருதுக் கேடயத்தை பத்மா சோமகாந்தனுக்கு வழங்குவதையும், அருகில் திரு மாலன் நிற்பதையும் படத்தில் காண்க.

# நவீனத்துக்கான இலக்கிய நூல் சாந்தனால் எழுதி வெளியீடு

எழுத்தாளர் சாந்தன் எழுதிய ''இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு தலைமைதாங்கிய எஸ்.ராஜசிங்கம் அங்கு உரையாற்றுகையில். ''சாந்தன், தமிழ் – ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதும் ஆற்றல் படைத்தவர். அவருடைய இந்த நூல் ஒரு கலைக்களஞ்சியம் போலுள்ளது. இலக்கிய மாணவர்கட்கும், இலக்கிய வாதிகளுக்கும் பெரும் பயனுள்ள இந்நூலை எழுதிய சாந்தனும், அதைச் சிறப்பாக வெளியிட்ட பௌசரும் பாராட்டிற்குரியவர்கள்'' –என்று தெரிவித்தார்.

எஸ்.கே.விக்னேஸ்வரன் பேசுகையில், ''தரமுள்ள இலக்கியங்களைத் தேடி, பிரிவுகளுக்கு அப்பாற்பட்டு, உலகின் சிறந்த படைப்புக்கள் இந்நூலில் அறிமுகப் படுத்தப்படுகின்றன.'' – என்றார்.

கே.எஸ்.சிவகுமாரன் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ''உலக இலக்கியங்களை இவ்வாறு இதுவரை யாரும் தொகுத்து அறிமுகம் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இடதுசாரி சார்பான இலக்கியங்களுக்கும், போராட்டங்களைச் சித்திரிக்கும் படைப்புக்களுக்கும் அழுத்தம் கொடுத்தாலும், பிறவகையிலான எழுத்துக்களை அறிமுகம் செய்யவும் அவர் தயங்கவில்லை'' – என்று கூறினார்.

இந்நூலை வெளியீடு செய்த எம்.பௌஸர் கூறுகையில் ''வாசிப்பு, ஆரோக்கியமான படைப்பாளியை உருவாக்குவதில் எந்தளவு பங்காற்றுகிறது என்பதற்கு சாந்தன் நல்ல உதாரணமாகிறார். தேடல், தீவிரவாசிப்பு, ஆழ்ந்த ஈடுபடு ஆகியவற்றின் அறுவடையே இந்நூல்'' – என்று சொன்னார்.

இந்நூலை எழுதிய ஆசிரியர் சாந்தன் ஏற்புரை நிகழ்த்துகையில் கூறியதாவது:–

''என் எழுத்துக்கள் யாவுமே என் அனுபவங்களைப் பகிரும் முயற்சிகளே.



பிரெஞ்சு எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான கலாநிதி ஜெராட் றொபுச்சோவின் உரையை கே.எஸ். சிவகுமாரன் மொழிபெயர்க்கிறார். எஸ்.கே.விக்னேஸ்வரன் அருகில் உள்ளார்.

இந்நூலிலும்என் வாசிப்பு அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இக்கட்டுரைகளை தொடராக வெளியிட்ட ''சஞ்சீவி''யும் இப்போது நூலுக்குரிய ''மூன்றாவது மனிதனும்'' என் எழுத்துக்களை வாசகர் முன் கொண்டு செல்ல



எஸ்.ராஜசிங்கம் தலைமை உரை நிகழ்த்துகிறார். அருகில் நூலாசிரியர் சாந்தன்.

உதவியிருக்கின்றன'' –என்றார்

இந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரெஞ்சு எழுத்தாளர் – மொழி பெயர்ப்பாளரான கலாநிதி ஜெராட் றொபுச்சோ, மற்றும் கவிஞர் மேமன்கவி, ஏ.இக்பால், க.சண்முகலிங்கம் மற்றும் முக்கியமான இலக்கியவாதிகள் பலரும் கலந்து கொண்டனர்.


கலை அமுதம்

# சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய தேர்திருவிழா சிறப்பிதழ் 2005

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வலராற்றுப் புகழ்வாய்ந்த ஆலயங்களில் ஒன்றே கதிரமலைச்சிவன்

வலராற்றுப் புகழ்வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது கதிரமலைச்சிவன். வரலாற்றுப்



இராஜகோபுர கும்பாபிஷேகத்தின்போது எடுக்கப்பட்ட படம்

புகழ்பெற்ற [illegible] ஆட்சிபுரிந்த கதிரமலை [illegible]லேயே மூர்த்தி, தல சிறப்புகளுடன் சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவாணேஸ்வரர் அருள்பாலிக்கின்றார்.

இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி சற்றுச் சிந்திப்போமெனில் இதற்கான ஒரு ஐதீக கதையுண்டு. வில்வமரத்தடியில் பசு ஒன்று சாணி போட்டதாகவும் அதிலிருந்து சிவலிங்கம் தோன்றியதாகவும் கூறப்பட்டு வருகிறது.

ஆயினும் கிட்டத்தட்ட 1834களில் முதலியாரால் இவ்வாலயம் கட்டுவிக்கப்பட்டது. 1960களின் பிற்பகுதியில் யோகர் சுவாமிகள் இங்கு வந்தமையும், மகேஸ்வர பூசை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று இவ்வாலயம் சிறப்புடன் விளங்க ஆலய அமைவிடம், கிரியை முறைகள், சிறப்பு வாய்ந்த குருக்கள்மார், ஊர்மக்களின் பற்று என்பனவே காரணமாகும்.

*செல்வி: யோகேஸ்வரி நடராஜா*
*(கலைப்பட்டதாரி)*
*சுன்னாகம்.*

## நன்றியுரை


இலங்கைத் தீவின் வடபகுதியிலேயே பழைமை வாய்ந்ததும், புகழ்வாய்ந்ததுமாக விளங்குவது சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோயில். இக்கோயிலுக்கு மிகப்பழைமையான வரலாறும் உண்டு. இக்கோயிலில் கோபுரம், அஷ்ட லக்ஷ்சுமி, ஈழமணித் திருநாட்டில் இரண்டாவதாக அமையப்பெற்ற அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட 63 நாயன்மார்களின் ஐம்பொன்னினாலான சிலைகள், கோயிலின் முகப்பில் அமைந்துள்ள கலியாண மண்டபம் ஆகியவை மேலும் இக்கோயிலுக்கு பெருமை சேர்க்கின்றன.

இங்குவாழ் மக்கள் சகல சௌபாக்கியங்களையும் பெற்று மிகச்சிறப்பாக வாழ அருள்பாலித்துக்கொண்டிருக்கின்ற ஸ்ரீ சொர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவான சுவாமிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும், இம்மலர் சிறப்புற எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

தருமலிங்கம் தினேஸ் (கணினி இயக்குநர்)
விமலதர்ம குன்றம்
சுன்னாகம்




ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சொர்ணாம்பிகை அம்பாள்

# ‘கிளப்’பில் ஏற்பட்ட தொடர்பும் பாலியல் நோய் அச்சமும்

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐமந்தமல்லிமொராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

**கேள்வி: ஆண். வயது 26. இன்னும் இரண்டு மாதத்தில் திருமணமாக உள்ளேன். கடந்த வாரம் நண்பர்களுடன் ஒரு ‘கிளப்’ சென்றிருந்தேன். எல்லோரும் மதுபானம் அருந்தியிருந்தோம். அப்பொழுது என் நண்பர்கள், ‘நீ இரண்டு மாதத்தில் திருமணமாக உள்ளாய் உனக்கு ஏதாவது முதல் அனுபவம் உள்ளதா? முதலிரவில் நீ பெயிலானால் – வாழ்க்கையே கெட்டுவிடும்’ என்று சொல்லி அந்த கிளப்பில் பணிபுரியும் பெண்ணோடு ‘அனுபவம்’ பெற வைத்து விட்டார்கள். மது அருந்தியிருந்ததால் அந்த நேரத்தில் சுயபுத்தி இல்லாமல் நானும் தவறிழைத்து விட்டேன். ஆணுறை கூட இல்லாமல் தொடர்பு கொண்டுவிட்டேன். இப்பொழுது எனக்கு – பால்வினை நோய்கள் தொற்றியிருக்குமா என்று பயப்படுகின்றேன். அப்படி தொற்றியிருந்தால் எப்படி அறிந்து கொள்வது? ஆலோசனை தரவும்.**

பதில்: நீங்கள் கூறும் சம்பவத்தை என்னால் முழுக்க நம்பமுடியாமல் உள்ளது. நண்பனை தவறான வழியில் செல்ல அறிவுரை கூறும் பேர்வழிகளை நண்பர்கள் என்று எப்படிச் சொல்வது? அது சரி ‘மோட்டார்கார் வாங்க முன்னர், அதை ஓடி பரீட்சித்து பார்ப்பது போல் – தாம்பத்திய வாழ்க்கையையும் ஒரு வியாபாரம் ஆக்கிவிட்டீர்களே என்று எனக்கு கவலையாக இருக்கின்றது. இது போல் உங்களை திருமணம் செய்ய உள்ள பெண்ணும் திருமணத்திற்கு முன் ஒரு TRIAL - பரீட்சை செய்து உங்களிடம் வந்தால் ஏற்றுக் கொள்ளும் மனஉறுதி உங்களுக்கு இருக்குமா? இது மருத்துவ கேள்விக்குரிய பதிலாக இல்லாவிடினும் உங்களைப் போல தெரிந்தோ தெரியாமலோ, வழிதவறும் மற்றைய இளைஞர்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும் என்பதால் உங்கள் கேள்வியை முழுமையாக வெளியிட்டுள்ளேன். இனி மருத்துவ ரீதியில் உங்கள் வினாவுக்கு



விடையளிக்கின்றேன். இதில் MORAL IS-SUE என்கின்ற ஒழுக்க விஷயத்தை மறந்துவிட்டு பதிலை படியுங்கள்.

இன்று இலங்கையில் பால்வினை நோய்கள் அதிகளவில் பரவியிருக்கின்றன. நகரமயமாதல் என்ற போர்வையில் கிராமத்து இளைய சமுதாயம் – கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் கல்வி, தொழில் தேடி வருவதால், உணர்வுகளுக்கு அடிமையாகி – மது, மாது, போதைவஸ்துகளுக்கு வாழ்க்கைப்பட்டுவிடுகின்றார்கள்.



கிளப்புகளிலும், காஸினா என்கின்ற சூதாட்டக் கிளப்புகளிலும் மதுவும், மாதுவும் தேவையான அளவில் கிடைக்கின்றன. இந்த அளவில் மனிதன் தவறு விடுவது சில வேளை தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

ஆனால் நாம் மருத்துவர்கள் ஒழுக்க போதர்களாக பணிபுரிவதில்லை. தீங்குகளை சொல்லுகின்றோம், அவற்றினின்று பாதுகாக்கும் வழிமுறைகளை பகிர்கின்றோம். விலைமாதர்களை தவிருங்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கைமுறையை பின்பற்றி பால்வினை நோய்களின்று தப்புங்கள் என்று அறிவுரை வழங்குகின்றோம். அதேவேளையில், விலைமாதர்கள், அறிமுகமில்லாதவர்களுடன் உடலுறவு கொள்ளும் போது ஆணுறை உபயோகியுங்கள் என்று தவறிழைப்பவர்களுக்கும் அறிவுரை தருகின்றோம்.

ஆணுறை உபயோகிப்பது – நூறு வீதம் பால்வினை நோய்களினின்றும் உங்களை காப்பாற்றும். உங்கள் விஷயத்தில் நீங்கள் இமாலயத் தவறு ஒன்று இழைத்து விட்டீர்கள். அதுதான் முன் பின் தெரியாத பெண்ணோடு ஆணுறை உபயோகிக்காமல் உடலுறவு கொண்டுவிட்டீர்கள். இப்படியான உறவினால் ஒரு வேளை பால்வினை நோய்கள் ஏற்படுமானால் – கொனொரியா, சிபிலிஸ் போன்ற பால்வினை நோய்களை மூன்று தொடக்கம் ஒருவாரத்தினுள் அறிந்துவிடலாம். ஆனால் எச்.ஐ.வி., எய்ட்ஸ் போன்ற நோய்களை இரத்தப்பரிசோதனை மூலம் கண்டு பிடிப்பதற்கு 3மாதகாலம் தொட்டு 6 மாதகாலம் வரையாகும். கொனொரியா, சிபிலிஸ் நோய்களை குணமாக்க மருந்துகள் உண்டு. எச்.ஐ.வி. எய்ட்ஸ் நோய்களை தீர்க்க மருந்துகளைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

**கேள்வி: வயது 28. முரசிலிருந்து இரத்தமும் சீழும் வருகின்றன. இதற்கு காரணம் என்ன? பரிகாரம் கூறவும்.**

பதில்: முரசுக்கும் பற்களுக்கும் இடையில் TARTAR என்கின்ற படிவுகள் உருவாகி காலம் செல்ல செல்ல, இவை பற்களின் நிறத்தை காவி நிறம் படியச் செய்கின்றன. அத்தோடு இந்தப்படிவுகள் பற்களிலிருந்து முரசை விலகச்செய்து பற்களின் வேர்களை வெளியே தெரியச் செய்கின்றன. இதனால் பற்கள் – குளிர்நீரோ, இனிப்பு வகைகளோ, உண்ணும் போது கூசுகின்றன. இது தவிர இந்த பற்களுக்கும் முரசுக்கும் உள்ள இடைவெளியில் இந்த படிவுகள் படிந்திருப்பதால் – உணவுத்துணிக்கைகள் இந்த இடைவெளிகளில் அகப்பட்டு, தொற்றுகள் வளர இடம் அளிக்கின்றன. இந்த தொற்றுகளால் நான் பாதிக்கப்பட்டு, பல் துலக்கும் போது – அல்லது கடினமான உணவு, பழவகைகளை கடித்து உண்ணும் போது – இரத்தமும் சீழும் வருகின்றது. இதனை ‘பயோரியா’ நோய்என்று கூறுவர். தகுந்த பல் வைத்தியரிடம் காட்டி SCALING என்கின்ற – இருந்த படிவுகளை சுரண்டி அகற்றும் சிகிச்சையை செய்து – மருந்துகளும் எடுத்தால் உங்கள் நோய் குணமாகும்.

**கேள்வி: பெண். திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. இரண்டாவது குழந்தைக்கு பின் கருத்தடை ஊசி எடுத்து வந்தேன். கருத்தடை ஊசி எடுத்த போது மாதவிலக்கு தடைப்பட்டுவிட்டது. அதனால் 6 மாதத்தின் பின்னர் கருத்தடை ஊசியை நிறுத்தி விட்டேன். ஆனால் இன்னும் மாதவிலக்கு வரவில்லை. எனக்கு இன்னொரு குழந்தை பெறவிரும்பம். இது சாத்தியப்படுமா?**

பதில்: கருத்தடை ஊசி உபயோகிப்பவர்களுக்கு மாதவிலக்கு தடைப்படுவதுண்டு. கருத்தடை ஊசி போடுவதை நிறுத்தி 3 மாத காலந்தொட்டு ஒரு வருட காலம் வரை மாதவிலக்கு வராது இருந்தவர்களை எனது அனுபவத்தில் கண்டதுண்டு. இதற்கு காரணம் கருத்தடை ஊசி மருந்து உடலில் சேமிக்கப்பட்டு சிறிது சிறிதாக அதன் ஹார்மோன்கள் வெளியேறி – குறைந்தது மூன்று மாத காலங்களுக்கு ஒரு தடவை கருத்தடை ஊசியை தொடர்ந்து போடும் போது ஹார்மோன் வட்டம் செயலிழந்து தொடர்ந்து மாதவிலக்கு வராமல் போவதுண்டு. இது தற்காலிகமானதும் – அபாயகரமற்றதுமான விளைவு. உடலில் கருத்தடை மருந்தின் சக்தி இருக்குமட்டும் மாதவிலக்கு தள்ளிப்போடப்படலாம். மூன்று மாதம் தொட்டு ஒரு வருட இடைவெளிக்குள் உங்கள் சாதாரண மாதவிலக்கு வட்டம் ஆரம்பமாகிவிடும். எனவே பயப்படத்தேவையில்லை. உங்களுக்கு கருத்தரிக்க ஏதும் தடையில்லை.

**கேள்வி: ஆண். வயது 21. ஆண் உறுப்பின் தோல் விரிவடைவதில் உள்ள கஷ்டத்தின் காரணமாக – எனக்கு PHI-MOSIS ஏற்பட்டதாக டாக்டர் கூறி சத்திர சிகிச்சை செய்யப்பட்டு இருவருட காலமாகிவிட்டது. ஆண் உறுப்பின் முன் பகுதி சிவந்திருந்து இப்போழுது ஏனைய பகுதியின் நிறத்திற்கு மாறிவிட்டது. சீக்கிரத்தில் விவாகம் செய்யவுள்ளேன். எனது உடல் உறவுக்கு இந்த சத்திர சிகிச்சையால் பாதிப்பு ஏற்படுமா? உடலுறவின் போது முழுமையான இன்பமும் திருப்தியும் கிடைக்குமா?**

பதில்: சில ஆண்களுக்கு ஆண் உறுப்பின் தோல் உறுப்பின் மேல் முன்னாலும் பின்னாலும் இழுபடுவதற்கு இறுக்கமாக இருக்கும். இதனால் சிலவேளைகளில் ஆண் உறுப்பில் சுரக்கப்படும் SMEGMA என்ற சுரப்பு தோலுக்கும் – உறுப்புக்கும் இடையில் தங்கிநின்று தொற்றுகளை ஏற்படுத்தும். சிலருக்கு இந்த தோல் ஆண் உறுப்பு உடலுறவுக்கு தயாராகும் நேரத்தில் விரிவடையாமல் இறுக்கத் தொடங்கும். இதனை PHI-MOSIS என்று மருத்துவர் கூறுவர். இதற்கு முன் தோலை சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிடுவர். இதனை CIRCUMCISSION என்று அழைப்பர். தமிழில் விருத்தசேதனம் அல்லது மதத்தியில் 'சுன்னத்' என்றும் வேறு பெயர்களில் அழைப்பதுண்டு. இந்த சத்திர சிகிச்சை எந்த விதத்திலும் தாம்பத்திய உறவை பாதிக்காது. ஒருசிலர் – ஆண் குறியின் தோல் அகற்றப்பட்ட முன்பகுதி, நேரடியாகவே உடலுறவின் போது உராயப்படுவதால் தாம்பத்திய உறவின் போது ஆண்களுக்க அதிக இன்பம் காணப்படுகிறது என்று அபிப்பிராயப்படுகின்றார்கள்.

## போலித் திருமணம் செய்துவைத்து ரூ 5 கோடி சுருட்டிய பெண்

இங்கிலாந்தில் நிரந்தர வதிவிட விசா உள்ள இந்தியப் பெண்களை இந்தியாவுக்கு அழைத்துவந்து இந்தியாவில் அவர்களுக்குப் போலித் திருமணங்களை நடத்தி வைத்து 5 கோடி ரூபா சுருட்டிய இந்தியப் பெண்ணொருவருக்கு லண்டன் நீதிமன்றம் ஒன்று பத்து ஆண்டுச் சிறைத்தண்டனை விதித்தது. இப்பெண்ணின் கணவர் ஆறு ஆண்டு சிறைத்தண்டனை பெற்றார்.

இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு குடிபெயர விரும்பும் இந்தியர்கள், இங்கிலாந்தில் நிரந்தர வதிவிட விசா உள்ளவர்களைத் திருமணம் செய்வது மூலம் இங்கிலாந்து செல்ல முடியும். இது எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு நடைமுறை.

இதனைப் பயன்படுத்தியே இந்த மோசடி இடம் பெற்றுள்ளது. கில் என்ற 42 வயதுப் பெண்ணே இந்த மோசடியில் சம்பந்தப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

மேற்கு லண்டனில் அவரது வீடு இருக்கிறது. தனது திட்டத்துக்குப் பயன்படுத்துவதற்காக, குடிபோதைக்கு அடிமையான பெண்களை – கடன் தொல்லைக்கு உள்ளான பெண்களை – கில் தேர்ந்து எடுப்பார்.

அந்த பெண்களை அவர் அணுகி "உங்களுக்கு இந்தியாவில் அதிக வருமானம் தரக்கூடிய 'மொடலிங்' தொழில் காத்திருக்கிறது. திருமணம் நடப்பது போன்ற போட்டோக்களுக்கு போஸ் கொடுப்பதுதான் உங்களது வேலை" என்று ஆசை வார்த்தை காட்டுவார்.

அந்தப் பெண்களை தனது வீட்டுக்கு கில் அழைத்துச் சென்று அவர்களுக்கு உணவு, பணம், டெலிபோன் கார்ட் ஆகியவைகளை கொடுப்பார். இந்தியாவில் அவர்களுக்கு சினிமாவில் நடிக்க வாய்ப்பு வாங்கி தருவதாக கில் உறுதி கூறுவார்.

கில்லின் பேச்சை நம்பிய இளம்பெண்கள் இந்தியாவுக்கு போக சம்மதம் தெரிவிப்பார்கள். அங்கு போட்டோக்களுக்கு போஸ் கொடுப்பதுதான் தங்களது வேலை என்று நம்பினார்கள்.

இந்தியா சென்ற ஒரு பெண் திருமணம் செய்வது போன்று ஒரு மணமகனுடன் அமர்ந்து போட்டோ எடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார். இதற்காக (இந்தியப் பணம்) 9 லட்சத்து 80 ஆயிரம் ரூபா தருவதாக அந்தப் பெண்ணிடம் கூறப்பட்டது. இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த அந்தப் பெண் போலித் திருமணம் செய்ய மறுத்தாள்.

இதனால் அந்தப் பெண்ணை மிரட்டி போலித்திருமணத்துக்கு சம்மதிக்கும்படி கூறினார்கள். இல்லை என்றால் வாலிபர்கள் உன்னை கடத்திச் சிதைத்துவிடுவார்கள் என்றும் மிரட்டினார்கள்.

இந்த போலித்திருமண விவகாரம் பற்றி கேள்விப்பட்ட பிரிட்டிஷ் பொலிஸார் கில்லை கைது செய்து விசாரணை செய்தார்கள். 2 ஆயிரமாவது ஆண்டில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை 15 போலித் திருமணங்களை கில் நடத்தி இருப்பது தெரியவந்தது. இதற்காக பயன்படுத்தப்பட்ட சில பெண்களுக்கு அவர் பணம் கொடுக்காமல் ஏமாற்றி இருப்பதும் தெரியவந்தது.

போலித்திருமணம் மூலம் ரூ5 கோடி வரை கில் சுருட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட கில் லஞ்சம் கொடுத்தும், மணப் பெண்ணாக நடித்த பெண்கள் தொடுத்த வழக்கை வாபஸ் பெற வைத்தும் தப்பிக்க முயன்றார். ஆனால் அவரது முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை.

போலித் திருமணம் மூலம் கோடிக்கணக்கில் பணம் திரட்டிய கில்லும் அவரது கணவர் தர்ஷனும் மேற்கு லண்டன் பகுதியில் உள்ள ஹில்லிங்டன் என்ற இடத்தில் 2 வீடுகள், விலை உயர்ந்த 2 கார்கள் வாங்கி ஆடம்பரமாக வாழ்ந்து வந்தார்கள். இந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கில்லும் அவரது கணவரும் அவர்களுக்கு உதவியாக இருந்த மேலும் 3 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி சாம் கூக்குடா, போலித்திருமணம் நடத்தி வைத்த கில்லுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். நீதிபதியின் தீர்ப்பை கேட்டு, தலை குனிந்தபடி கில் அழுதார். கில்லின் கணவர் தர்ஷன் மற்றும் 3 பேருக்கு தலா 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு கூறினார்.

# சிறார்களின் கைவண்ணம்










# போன வருஷம் ஏன் திட்டினாய்?

ஓர் ஆட்டு மந்தையில் சொல்லுக் கேட்காத ஆடு ஒன்று இருந்தது. அது பெரியவர்களை மதிக்காது. தனது தாயாரின் சொல்லையும் கேட்காது. எப்படியாவது ஊரைச் சுற்றிப்பார்க்க ஆசைபட்டது. ஒருநாள் மந்தையை விட்டு வெளியே ஓடியது.

பல இடங்களில் அலைந்து திரிந்த ஆட்டுக்குட்டி தாகம் அதிகமாகிவிடவே கண்களுக்குத் தெரிந்த ஓர் நீர் ஓடையை நெருங்கி நீர் அருந்தச் சென்றது. அப்போது அந்தப் பக்கமாக ஓர் ஓநாய் வந்தது. கொழுத்த ஆட்டுக்குட்டியைக் கண்டதும் அதை அடித்துத் தின்றுவிட ஓநாய் எண்ணம் கொண்டது.

"ஏய் ஆட்டுக்குட்டி!" என்று ஓநாய் அதட்டல் போட்டது.

ஆட்டுக்குட்டி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தது.

"நான் குடிக்க இருக்கும் தண்ணீரை நீ கலக்குகிறாய் என்ன தைரியம் உனக்கு?" என ஓநாய் உறுமியது.

'ஆஹா... நம்முடைய எதிரி என்று அம்மா சொல்வாங்களே... இவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என ஆட்டுக்குட்டி நினைத்தது.

"ஐயா! தங்கள் பங்கமிருந்து தான் நான் இருக்குமிடத்திற்கு தண்ணீர் வருகின்றது. அப்படி இருக்க தண்ணீரை நான் எவ்வாறு கலக்க முடியும்?" என்று ஆட்டுக்குட்டி நடுங்கிக் கொண்டே கேட்டது.

"அது இருக்கட்டும்! இந்தப் பக்கம் இருக்கும் புல்லை எல்லாம் நீ ஏன் மேய்ந்தாய்?" என்று கேட்டது ஓநாய்.

"நான் இன்னும் புல் மேயவே தொடங்கவில்லையே?" என்று கூறியது ஆட்டுக்குட்டி.

"புல் விவகாரத்தை அப்புறம் கவனிப்போம். சற்று முன் நீ ஏன் என்னைத் திட்டினாய்?" என வினவியது ஓநாய்.

"இப்போதுதானே உன்னை நான் பார்க்கிறேன். சற்று முன் நான் எவ்வாறு திட்டியிருக்க முடியும்?" என்று ஆட்டுக்குட்டி பதிலளித்தது.

"இப்போது நீ என்னை திட்டாமல் இருக்கலாம், ஆனால், நீ சென்ற ஆண்டு என்னை திட்டியது உண்மை!" என்று சொன்னது ஓநாய்.

"சென்ற ஆண்டு நான் பிறக்கவே இல்லையே?" என பரிதாபமாகக் கூறியது ஆட்டுக்குட்டி.

"என்ன நீ இவ்வளவு குட்டியாக இருந்து கொண்டு எதிர்த்து, எதிர்த்து பேசுகிறாய்... உன்னை சும்மா விடக் கூடாது" என்று கூறியவாறு ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்று விட்டது ஓநாய்.

பிள்ளைகளே.... எதற்கெடுத்தாலும் ஓநாய் மாதிரி விதண்டாவாதம் பேசும் ஜனங்கள் பலர் உலகத்தில் இருக்கின்றனர். அவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளாதீர்கள். ஒதுங்கி இருப்பதே நலம்!



## அறிந்து கொள்வோம்

1. மனிதனின் கழுத்தில் ஏழு எழும்புகள் இருப்பதுபோல் ஒட்டகச் சிவிங்கியின் கழுத்திலும் ஏழு எழும்புகள்.
2. மிகப் பெரிய முட்டை இடும் பறவை தீக்கோழி.
3. உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா.
4. வெடி மருந்தை முதன் முதல் பயன்படுத்திய நாடு சீனா.
5. உலகில் மிகப் பெரிய நதி நைல். எகிப்து நாட்டிலிருந்து தொடங்குகின்றது.

ஆர்.கிட்ணன் புஸ்பராஜ், இறக்குவானையூர்.



# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 09—05—2005 முதல் 15—05—2005வரை
பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 11ல் இருப்பது விசேஷம். மேலும் தன் சொந்த நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். (9,12) உரிய குரு 6இல் இருக்காது. அதிஸ்டம் இருக்காது. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். (3,6) உரிய புதன் ராசியில் சூரியனோடு இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் செய்யாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 12இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தராது. நாலுக்குரிய சூரியன் 12 இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய செவ்வாய் 10இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. தகப்பனுக்கும் நல்ல பலன் இல்லை. ராசியைக் குரு பார்ப்பதால் சகல தோசமும் நிவர்தியாகும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 11இல் இருப்பது நல்லது. மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். வாகன சுகம் உண்டு. தாய் நலம், பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டாம் இடம் சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (5,12) உரிய சுக்கிரன் 12இல் இருப்பதால் சயன சுகம் உண்டு. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,11) உரிய செவ்வாய் 9இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மூத்த சகோதரத்திற்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு 4இல் கேதுவோடு இருப்பது தோசம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் சனி இருப்பதும் கூடாது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் இடபம் முதல் கடகம் வரை சஞ்சரிப்பதால் வார ஆரம்பமும் இறுதியும் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாணவாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 10இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 11 இல் இருப்பது நல்லது. வாகன சுகம் இருக்கும். தாய் நலம். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய செவ்வாய் 8 இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (7,8) உரிய சனி 12இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் ஒன்பதில் சிறப்பு இல்லை. இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். பிரயாண வாய்ப்பு உண்டு. அதிஸ்டம் இருக்கும். (2,11) உரிய புதன் ஒன்பதில் இருப்பதில் நன்மை இல்லை. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நன்மை இல்லை. நண்பர்களுக்கும் கூடாது. (3,10) உரிய சுக்கிரன் 10இல் ஆட்சியாக இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோசம். பெற்றோருக்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 11இல் இருப்பது நல்லது, திருமண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. பகை நட்பாகலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 8இல் இருப்பது நல்லதல்ல, இருப்பினும் சூரியனோடு இணைவது சிறப்பு. மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும். (2,9) உரிய 9இல் ஆட்சியாக இருப்பது நல்லது கையில் பணம் இருக்கும். (4,7) உரிய குரு ராசியில் கேதுவோடு சேர்ந்தது தோசம். வாகன சுகம் இருக்காது. தாய்கும் கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது.(5,6) உரிய சனி 10 இல் இருப்பது ஓர் அளவுக்கு நல்லது என்று சொல்லலாம். பகை விலகும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 8இல் ஆட்சியாக இருப்பது நல்லது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது கூடாது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். மன அமைதி இருக்கும். பிரயாண வாய்ப்பு குறைவு. (2,7) உரிய செவ்வாய் 5இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 9இல் இருப்பது நன்மை இல்லை. சில நன்மைகள் செய்லாம். வாகன சுகம் மத்திமம். தாய்க்கும் மத்திம பலன். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். தொழில் ஸ்தானமான பத்தாம் இடம் சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். (9,12) உரிய புதன் 7இல் இருப்பது கூடாது. பிதாவுக்கு நன்மை இல்லை. சயன சுகம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் நாலில் இருப்பது தோசம். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளின் தொல்லை இருக்கும். (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 7இல் ஆட்சியாக இருப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. சயன சுகம் குறையலாம். 10க்குரிய சூரியன் 6இல் இருப்பது தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**தனு: மூலம், பூராட்டம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவுடன் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2,3) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,11) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (7,10) உரிய புதன் 5இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. 7இல் சனி இருப்பது கூடாது.

**மகரம்: உத்தரடாம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். கையில் பணம் இருக்கும். மன அமைதி இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 9இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்லது. (4,11) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது மேலும் தோஷம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாது. நண்பர்கள் விசுவாசமாக இருக்க மாட்டார்கள் மூத்த சகோதரத்துக்கு கூடாது. (5,10) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். ராசியை குரு பார்ப்பது நல்லது.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். சயன சுகம் இருக்காது. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2,11) உரிய குரு 8இல் இருப்பதுகூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் பிரச்சினை ஏற்பட இடம் உண்டு. மூத்த சகோதரத்துக்கு கூடாது. (3,10) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. பெற்றோருக்கு நல்ல பலன் உண்டு. 7க்குரிய சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும்.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | சூரியன் புதன் | சுக் | சனி |
| செவ் | சூரியன் கார்த்திகை சூரியன்<br>சுக்கிரன் கார்த்திகை சூரியன்<br>செவ்வாய் அவிட்டம் செவ்வாய் | | |
| | புதன் பரணி சுக்கிரன்<br>குரு அத்தம் சந்<br>சனி புனர்பூசம் குரு | | |
| | | | குரு கேது |

சித்திரை 26 முதல் வைகாசி 1 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில் துறை முன்னேறும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய செவ்வாய் 12இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்லது. வாகன சுகம் உண்டு. தாய்க்கும் நல்ல பலன் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. 6க்குரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (11,12) உரிய சனி நாலில் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு நல்லதில்லை. நண்பர்களுக்கும் கூடாது. ராசியில் ராகு இருப்பதும் சனி பார்ப்பதும் கூடாது.

# கருத்துலகமும்.....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனவரங்கில் ஒரு பொய்யான, போலியான சிந்தனையுலகைச் சிருஷ்டித்து, கருத்தாதிக்கம் மூலம் தமது ஆட்சியை வலுப்படுத்தி நிலைப்படுத்த முனைகின்றன. இந்த வகையில், கருத்துருவாக்கமானது மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் அடக்குமுறை வடிவமாகும்.

சமூகச்சிந்தனை உலகை மாற்றியமைக்கும் வகையில் கருத்துருவாக்கம் செய்வது ஒரு கலை. மிகவும் நுட்பமான ஒரு கலை. மெய்மையைத் திரிவுபடுத்தி, பொய்மையை மெய்மையாகக் காட்டும் ஒரு சூட்சுமமான கலை. படித்தவர்களும் சரி, பாமர மக்களும் சரி, இந்தக் கண்கட்டு வித்தையை இலகுவில் கண்டுகொள்ள முடியாது. இன்றைய உலகில் இந்தக் கருத்துருவாக்கக் கலை ஒரு பெரும் வர்த்தகமாக வளர்ந்து வருகிறது. இந்தக் கருத்துருவாக்கக் கலையில், அதன் வர்த்தக ரீதியான வளர்ச்சியில் அமெரிக்க ஊடகங்கள் உலகில் முன்னணி வகிக்கின்றன. அமெரிக்க ஊடக உரிமையாளர்கள் பெரும் முதலாளித்துவ முதலைகள். பெரும் செல்வந்தர்கள். இந்த ஊடகச் சொந்தக்காரர்களான வர்த்தகர்களுக்கும் அதிகார ஆதிக்கம் பெற்ற அரசியல்வாதிகளுக்குமத்தியில் ஒரு நெருங்கிய உறவுண்டு. இந்த உறவின் அடிப்படையில், பரஸ்பர நலன் பேணும் நோக்கில், ஊடகங்கள் ஆட்சியதிகாரத்திற்கு முண்டுகொடுத்து நிற்கின்றன. ஆட்சியாளரின் அநீதிகளை நியாயப்படுத்திவருகின்றன.

சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அடிப்படையான மனித சுதந்திரம், ஜனநாயக சுதந்திரம் என்ற ரீதியில் சுதந்திர விழுமியத்தின் உன்னதத்தை உலகிற்குப் போதித்துவருகிறது அமெரிக்கா. சுதந்திரம் என்ற இக் கருத்துருவத்தின் தோற்றப்பாட்டிற்கு அப்பால், அந்தப் பொய்யான முகமூடிக்கு அப்பால், காலம் காலமாக அமெரிக்க அரசு புரிந்து வந்த அநீதிகளையும், அதனை நியாயப்படுத்த அமெரிக்க ஊடகங்கள் கையாண்ட யுக்திகளையும் தகுந்த ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திய பெருமை அமெரிக்கப் பேரறிஞரான நோம் சொம்ஸ்கியைச் சாரும். அமெரிக்காவின் ஜனநாயக முகமூடியைக் கிழித்தெறிகிறார் சொம்ஸி. சுதந்திரம் என்றும் மனித உரிமை என்றும் அமெரிக்க அரசியலுலகில் பேசப்படுவது எல்லாமே அர்த்தமற்ற சொல்லாடல்கள். நடைமுறை நிதர்சனத்திற்கு மாறான வார்த்தைப் பிரயோகங்கள். 'சுதந்திர உலகம்' என்ற ஒரு போலியான கருத்துருவத்திரைக்குப் பின்னால் மறைந்துநின்று, மற்றைய நாடுகளதும் சமூகங்களதும் சுதந்திரங்களை நசுக்கி வருவதாக அமெரிக்கா மீது குற்றம் சுமத்துகிறார் சொம்ஸ்கி. சுதந்திர நாடுகள் மீது படையெடுப்பது, ஆக்கிரமிப்பது, மக்களின் ஆதரவுடைய ஆட்சியைக் கவிழ்ப்பது, ஆட்சி மாற்றங்களை அரங்கேற்றுவது, சர்வாதிகார ஆட்சிகளைக் முண்டுகொடுப்பது, பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பது, இனவாத அரசுகளுக்கு ஆயுதஉதவி வழங்குவது, மனிதஇனத்தை அழிக்கவல்ல அணுவாயுதங்களை உற்பத்தி செய்து குவிப்பது - இவ்விதமான அட்டூழியங்களை அமெரிக்க அரசு புரிந்து வர அதனையெல்லாம் சுதந்திரத்தின் பெயரால் நியாயப்படுத்தி வருகின்றன அமெரிக்க கருத்துருவாக்க நிறுவனங்களான ஊடகங்கள். இப்படியாக, அமெரிக்க அரசின் அசிங்கமான உண்மை முகத்தை அம்பலப்படுத்துகிறார் சொம்ஸ்கி. எந்தவொரு காலத்திலும், எந்தவொரு சமூகத்திலும் அதிகார மேலாண்மையும் கருத்துநிலை மேலாதிக்கமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக, ஒன்றுக்கொன்று முண்டுகொடுத்து நிற்கின்றன.

அன்றொரு காலம், காலனித்துவப் பேரரசுகள் இந்தப் பூமியில் தமது வல்லாதிக்கத்தை விரிவுபடுத்தியபோது ஆயுத வன்முறையை மட்டும் அவை பாவிக்கவில்லை. கருத்து ஆதிக்கத்தையும் ஒரு அடக்குமுறைக் கருவியாக அவர்கள் பிரயோகிக்கத் தவறவில்லை. முதலில் தமது மொழியைத் திணித்தார்கள். தமது மொழியைப் பயின்றவர்களுக்கு காலனித்துவ நிர்வாகத்தில் வேலை வாய்ப்பு அளித்தார்கள். அடுத்ததாக, தமது மதத்தைப் பரப்பினார்கள். தமது மொழியைப் பயின்று, தமது மதத்தையும் தழுவிக்கொண்ட சுதேசிய மக்களுக்கு எல்லாச் சலுகைகளையும் வழங்கினார்கள். பின்னர் தமது அரசியல் ஆட்சிமுறைக் கோட்பாடுகளைத் திணித்தார்கள். இறுதியாக, மேற்கத்தைய தார்மீக தத்துவங்களைப் பரப்பினார்கள். மேற்கத்தைய தார்மீக விழுமியங்களின் மகத்துவத்தைப் போதித்தார்கள். இப்படியாக மேற்குலக காலனித்துவவாதிகளின் மத, மொழி, அரசியல், தார்மீகம் என்ற ரீதியில் அந்நியப் பண்பாட்டுக் கருத்துருவங்கள் சுதேசிய மக்கள் மீது திணிக்கப்பட்டன. காலனித்துவமானது தான் ஆக்கிரமித்த நாடுகளின் நிலத்தையும், அதன் வளங்களையும் சுரண்டுவதுடன் நின்றுவிடவில்லை கருத்தாதிக்கத்தைத் திணித்து சுதேசிய மக்களின் மனவுலகத்தையும் அது ஆக்கிரமிக்க முயன்றது.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களைச் சிறைகொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை யுக்தி. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்தக் கருத்தாதிக்க யுக்தியையே கடைப்பிடிக்கின்றார்கள். மனிதர்களை விழித்தெழச் செய்யாது அவர்களை அறியாமை உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்தக் கருத்துப் போதையையே பாவித்துவருகின்றனர். அடிமைகொண்ட மக்களின் கிளர்ச்சியை நசுக்க, புரட்சியை முறியடிக்க, விடுதலை உணர்வைக் கொன்றுவிட கருத்தாதிக்கமானது ஒரு கனரக ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது.

கருத்துலகமானது எமது சமூகவாழ்வை ஊடுருவி நிற்கிறது. சமூக உறவுகளோடு பின்னிப் பிணைந்து நிற்கிறது. எமது சிந்தனையையும் செயற்பாட்டையும் நிர்ணயித்து வருகிறது. காலையில் எழுந்து பத்திரிகைகளை வாசிப்பதிலிருந்து அல்லது வானொலிச் செய்திகளைக் கேட்பதிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை, நாளாந்தம் பல்வகைப்பட்ட உறவுநிலைகளில் மற்றவர்களது எண்ணங்களை, கருத்துக்களை, அபிப்பிராயங்களை, பார்வைகளை நாம் எதிர்கொண்டு வருகிறோம். எமது மனவரங்கில் தொடர்ச்சியாக, முடிவில்லாது கொட்டப்படும் எண்ணங்களின் இயல்புகளை, கருத்துக்களின் தன்மைகளை, பார்வைகளின் அந்தரங்க நோக்குகளை நாம் விழிப்புணர்வுடன் விசாரணை செய்து பார்க்கத் தவறினால் கருத்தாதிக்கச் சிறையிலிருந்து நாம் விடுதலை பெறுவது சாத்தியமல்ல.

*(அடுத்த வாரம் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி பற்றி...)*

# மது அருந்தும் கணவரை மாற்றி அமையுங்கள்

ஒரு கணவன் குடிக்கத் தொடங்கும் போதே அவரிடம், இது உடம்புக்கு நல்லதல்ல இதற்கு பதிலாக சத்தான உணவு வகைகளை சாப்பிடலாம் என்று வலியுறுத்தலாம். மது அருந்திவிட்டு வரும் கணவருடன் சண்டை போடுவதை விட்டு, விட்டு அவர் எதற்காக குடிக்கிறார் என்பதை அறிய வேண்டும்.

சில கணவர்கள் அலுவலகம், தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினை காரணமாகவும் மது அருந்துவண்டு. அப்போது நீங்கள் அவர் பிரச்சினை என்ன என்பதை கேட்டறிந்து ஆறுதல் கூறலாம்.



இதைவிட்டு விட்டு அந்த நேரத்தில் உங்கள் பிரச்சினைகளை மட்டும் கூறிக் கொண்டிருந்தால் மோதல்தான் வெடிக்கும். பெரும்பாலும் நண்பர்களால்தான் கணவர் மதுபழக்கத்துக்கு அடிமை ஆகிறார்.

அதனால் அவரது நட்பு வட்டத்தை கண்காணிப்பது அவசியம். நல்லவர் – கெட்டவர் யார் என்பதை அறிந்து கெட்டவர்களுடன் நட்பு வைத்திருப்பதை தவிர்க்க வலியுறுத்த வேண்டும்.

உங்கள் கணவருடன் திறந்த மனதுடன் பழகுங்கள். அவர் திருந்துவதற்கு போதுமான கால அவகாசம் கொடுங்கள், பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் அணுகுங்கள்.

நீங்கள் எவ்வளவுதான் சொல்லிப் பார்த்தும் மனுஷன் மதுப்பழக்கத்தை கைவிடவில்லையா? மருத்துவர்களிடம், அழைத்துச் செல்லுங்கள். உங்கள் கணவரின் போதைப் பழக்கத்துக்கான காரணத்தை அறிந்து, அதை மறப்பதற்கு மனரீதியான பயிற்சி அளிப்பார்கள். இந்த பயிற்சி பெற்றால் எவ்வகையான குடிகாரரும் திருந்திவிடுவதை காண முடிகிறது.

எந்நேரமும் போதையில் மிதக்கும் கணவர்களை அடிக்கடி கோவில்களுக்கு அழைத்துச் செல்லலாம். யோகா, தியானம் போன்றவற்றில் ஈடுபத்துவதும் நல்ல பலனைத் தரும்.

சிலர் போதை, ஊசி, போதை மாத்திரை, கஞ்சா... போன்றவற்றை பயன்படுத்துகிறார்கள்.

இவர்கள் பெரும்பாலும் மன நோயாளிகளாகவே மாறிவிடுகிறார்கள். இவர்களை மன ரீதியான பயிற்சியாலும், முறையான மருத்துவ சிகிச்சை மூலமும் குணப்படுத்த முடியும்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி உலகம் முழுவதிலும் போதைக்கு அடிமையாகி வரும் ஆண்களின் எண்ணிக்கை பெருகி இருக்கிறது. இதற்கு காரணம் திருமணம், பிறந்தநாள் விழா, பண்டிகை கொண்டாட்டம்... என்று பல்வேறு விசேஷ நிகழ்ச்சிகளிலும் மதுபானம் அருந்துவது ஒரு பேஷனாக மாறி இருப்பது தான். இந்த நிலை மாறினால் குடிகாரர்கள் பெருகுவது குறைய வாய்ப்புள்ளது.



# இல்லறம் இனிக்க.....

''ஒரு பெண் தனது காதலியாக இருக்கும் போது தரும் முக்கியத்துவத்தை அவள் மனைவியான பிறகு ஆண் தருவதில்லை'' இது ஆண்கள் மீதான குற்றச்சாட்டு. இதுவே குடும்பத்தில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பிரதான காரணமாகும். முற்போக்கான ஆண்கள் கூட தமக்கு வரும் மனைவி அழகானவளாக, அடக்கமானவளாக, படித்தவளாக, சம்பாதிப்பவளாக தம் கட்டளைக்கு கட்டுப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களே தவிர தானும் அப்படி எல்லாம் இருக்க வேண்டும் என எண்ணுவதில்லை நாம் அடிப்படையில் எவ்வளவு பலவீனமானவனாக இருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்ப்பதில்லை. தன்னைப் பற்றி உணரத் தொடங்கிவிட்டால் எந்தக் கணவனும் தம் மனைவியை அடக்கி ஆள நினைக்கமாட்டான்.

குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் யார் பெரியவர் என்ற அகந்தையும், ஆணவமும்தான். குடும்பம் என்று வந்துவிட்டால் அன்பும் பணிவும் காதலும் கருணையும்தான் அங்கு மேலோங்கி நிற்கவேண்டும்.

இழப்புகளை, சிரமங்களை சகித்துக் கொள்வதும், தனக்கானதைக் கூட பிறர்க்கென விட்டுக் கொடுப்பதும்தான் மனிதத் தன்மை.

அடிப்படையில் ஆண் பெண்ணைக் காட்டிலும் சற்றே பலமானவன் என்பது உடற்கூறுகளின்படி உண்மை என்றாலும் பெண் ஒன்றும் குறைந்தவளில்லை. உடல் வலிமையை வைத்து ஒருவரின் தகுதியை மதிப்பீடு செய்ய முடியாது. மன உறுதியையும், அறிவுத் தெளிவையும், ஒழுக்கத்தையும் கொண்டே ஒருவரை எடைபோட வேண்டும். உடற்கூறின்படி தான் எவரையும் மதிப்பீடு செய்ய வேண்டுமென்றால் மனிதனை விட குறிப்பாக ஆண்களை விட யானையும் காண்டா மிருகமும்தான் உயர்ந்தன.

பொதுவாக பெண்கள் ஒரு விஷயத்தை புரிந்துகொள்ள வேண்டும். ஆணும், பெண்ணும் எப்படி சமம் என்பதை சரியாகப் புரிந்து கொள்ளாவிடில் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள்தான் மிஞ்சும்.

ஆண், பெண் என்பது பிறவி. இதன் படி இருவரும் சமமானவரே! ஆனால் கணவன் – மனைவி என்பது பிறவி அல்ல, பதவி. பதவிகள் என்பது ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டதே. ஆனால் அது ஒரு நல்ல நோக்கத்திற்கான முன்னோடியாக இருக்க வேண்டும். கணவன் என்பவன் குடும்பவியல் மேலதிகாரியாக இருக்கிறான். கணவனுக்கு கட்டுப்படுவதும், ஆலோசனை வழங்குவதும் குடும்பத்தை நல்வழியில் நடத்திச் செல்வதும் மனைவி என்கிற தளபதி. இதுமனைவிக்குமரியாதையை பெற்றுத்தருகிறது. சுருக்கமாக குடும்ப நிர்வாகத்தில் கணவன் ஒரு பதவியிலும் மனைவி வேறு பதவியிலும் இருக்கின்றனர். சூழலுக்கேற்ப மனைவியின் பதவிக்கு கணவனும், கணவனின் பதவிக்கு மனைவியும் மாற்றப்படலாம். அதை அன்பும், காலமும் தீர்மானிக்கும். அவரவர் பதவிக்கேற்ற தகுதிக்கேற்ற பணியை கடமையை அவரவர் செய்து வந்தால் குடும்பத்தில் குழப்பம் இருக்காது

# இளமையாக...

முடிகொட்டாமல் இருக்கவும், பொடுகில் இருந்து தலையைப் பாதுகாக்கவும்:-

புளித்த தயிரில் மருதாணி இலை, செம்பருத்திப்பூ ஆகியவற்றை அரைத்து க்லக்கி தலையில் பூசி 2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு சிகைக்காய் தூள் போட்டு குளிர்ந்த நீரில் குளித்து வந்தால் முடிகொட்டாது. பொடுகும் வராது. கூந்தல் பட்டுப்போல் காட்சியளிக்கும்.

கண்ணில் கருவளையம் மறைய...

சில பெண்களுக்கு கண்களைச் சுற்றி கறுப்பு வளையம் இருக்கும். இதை நீக்க வெள்ளரி, உருளைக்கிழங்கு இரண்டையும் நன்றாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு துணியை பன்னீரில் நனைத்து கண்ணின் மீது வைத்து படுத்து தூங்க வேண்டும். இவ்வாறு 5 நாட்கள் செய்தாலே போதுமானது கருவளையம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.



முகத்தைப் பாதுகாக்கும் முறை:-

ஒவ்வொருவருக்கும் 2 வகையான சருமம் உள்ளது. ஒன்று உலர்ந்த சருமம். எல்லாவகையான சருமத்தையும் இந்த கோடை வெயிலில் இருந்து பாதுகாக்க வேண்டும். உலர்ந்த சருமத்திற்கு கரட்டை நன்றாக அரைத்து ஒரு கரண்டி தேன் கலந்து 20 நிமிடம் உடலில் பூசி பின் குளிர்ந்த நீரில் கழுவிவிட வேண்டும். இதேபோல் எண்ணெய் வழியும் சருமத்திற்கு மருந்துக் கடைகளில் இருந்து மூலிகை கலந்த பவுடரை வாங்கி பூசிக்கொள்ளலாம். இதன் மூலம் புத்தொளிபெறும்.

உதட்டில் வெடிப்பு ஏற்பட்டு சிலருக்கு இரத்தம் கசியும். உதடு கறுத்துவிடும் இதற்கு காரணம் உடலில் உஷ்ணம் இருப்பதுதான். இதைப்போக்க வெந்தயததை 1 கரண்டி இரவில் ஊற வைத்து காலை எழுந்ததும்ஒரு டம்ளர் மோரில் அந்த வெந்தயத்தை போட்டு குடித்துவிடவேண்டும். இரவில் வெண்ணையை சிறிதளவும் உதட்டில் தடவவும். இப்படிச் செய்து வந்தால் உதடு பழைய பொலிவுக்கு வந்துவிடும்.

கழுத்தில் உள்ள கருவளையம் மறைய:-

சிலருக்கு நகைகள் அணிவதால் கழுத்தில் கருவளையம் ஏற்படலாம். இதைப்போக்க கோதுமை மாவில் வெண்ணையைக் கலந்து கழுத்தைச் சுற்றி பூசவும். 20 நிமிடங்கள் கழித்துக் குளிக்கவும். இப்படி தினசரி செய்து வந்தால் கழுத்தில் உள்ள கருவளையம் அகன்றுவிடும்.

இடுப்பில் காம்ப்புத் தழும்பு அகல:-

இடுப்பில் இறுக்கமான ஆடை அணிந்து வருவதால் சிலருக்கு இடுப்பைச் சுற்றி கறுப்புத்தழும்பு ஏற்பட்டுவிடும். இதைப்போக்க இரவில் இறுக்கமான ஆடையைத் தவிர்த்து தளர்வான ஆடையை அணிந்து கொள்ளவேண்டும். தேங்காய் எண்ணையை இடுப்பைச் சுற்றி தேய்த்து சிறிது மசாஜ் செய்துவந்தால் போதும். மெதுவாக கறுப்புத் தழும்பு மறைந்துவிடும்.



காது அழகை பராமரிப்பது எப்படி?

பெண்களின் அழகை ஜொலிக்க வைப்பதில் காதுகளுக்கும் பங்கு உண்டு. ஆனால், நம்மில் பலர் முகத்தைத்தான் அடிக்கடி கழுவி பராமரிக்கிறோமே தவிர காதுகளை கண்டு கொள்வதே கிடையாது. இதனால் முகம் பளபளப்பாக இருந்தாலும்... காதுகள் இரண்டும் முக அழகுக்கு வேட்டு வைத்துவிடும். காதுகள் அழுக்கடைந்து பார்ப்பதற்கு அகோரமாக காட்சி அளிக்கும்.



ஆகவே பெண்மணிகளே காதை மிளிர வைப்பது எப்படி?

உங்களது காது மடல்கள் மீது பேலி லோஷன் தடவவும். 15 நிமிடம் கழித்து காதுகளை அழுத்தமாக துடைக்கவும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால் நாளடைவில் கறுப்பு வளையம் மாயமாகவிடும். முகத்திற்கு பூசும் பேஸ் – பேக்குகளை காதுகளிலும் பூசலாம். இப்படிச் செய்தால் காது மட்டும் கறுப்பாக தெரியாது.






## சீரகக் குழம்பு

தேவையானவை:

| | |
|---|---|
| புளி | – சிறிய எலுமிச்சம் பழ அளவு |
| உப்பு | – போதுமான அளவு |
| சாம்பார் பொடி | – 1 கரண்டி |
| கடுகு | – சிறிதளவு |
| சீரகம் | – 1/2 கரண்டி |
| மிளகாய் வற்றல் | – 4 |
| பெருங்காயம் | – 1 துண்டு |
| உளுத்தம் பருப்பு | – 1/2 கரண்டி |
| துவரம் பருப்பு | – 1 கரண்டி |
| கருவேப்பிலை | – சிறிதளவு |
| நல்லெண்ணை | – சிறிதளவு |



புளியைத் தண்ணீரில் நன்றாக ஊற வைக்கவும். புளி நன்கு ஊறியவுடன் புளிச்சத்து தீரும் வரை நன்றாகப் பிசைந்து கொஞ்சம் புளித் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும். பிறகு அதில் உப்பு, சாம்பார் பொடி, கருவேப்பிலை ஆகியவற்றை சேர்க்க வேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தில் சிறிது நல்லெண்ணெய் ஊற்றிக் காய்ந்தவுடன் அதில் கடுகு, இரண்டாகக் கிள்ளிய மிளகாய், சீரகம், பெருங்காயம் ஆகியவற்றை போட்டு, கடுகு வெடித்தவுடன் உளுத்தம்பருப்பு, துவரம் பருப்பு போட்டு அவை நன்கு சிவந்தவுடன் மீதி வைத்திருக்கும் புளித் தண்ணீரை அதில் ஊற்ற வேண்டும். குழம்பு சுமார் 10 நிமிடங்கள் கொதித்தவுடன் (புளி வாசனை போனவுடன்) அரிசி மாவைக் கரைத்து ஊற்றி ஒரு கொதி வந்தவுடன் இறக்கி வைக்கவும்.

டேஸ்ட் கடை தணிகாசலம்

# உண்டியலில் போடாமல் கணக்கில் போட்டிருந்தால் எப்படி?

''ஒருபடியாக மேதினக்கலாட்டக்கள் எல்லாம் ஓய்ந்துவிட்டன. இப்பொழுது சந்தாத்திருவிழா ஆரம்பித்துவிட்டது. இந்த னங்கள் எப்பொழுது தான் திருந்தப் போகிறார்களோ தெரியவில்லை.'' என்று கூறிக்கொண்டே தணிகாசலம் அண்ணன் ற்பணி மன்றத்தில் இருந்து வீட்டுக்குக் ளம்பிக்கொண்டிருந்தார்.

அப்போது சில இளைஞர், யுவதிகள் கைகளில் நோட்டீஸ் கட்டுகளுடன் வந்து காண்டிருந்தனர். தணிகாசலம் அண்ண னைக் கண்டதும் மரியாதையாக ஒதுங்கி நின்று வணக்கம் செலுத்தினர்.

''வணக்கம், வணக்கம்; என்ன தம்பி ங்கைகள்! எல்லோரும் எங்கே கிளம்பி பிட்டீர்கள்?''

''அண்ணே அடுத்த மாதம் ஜூன்மாதம் இல்லீங்களோ?''

''என்ன தம்பி மே மாதத்துக்கு அடுத்து ஜூன் மாதம் தானே! அதில் என்ன சந் தேகம்?''

''சந்தேகம் ஒன்றும் இல்லைங்க அண்ணே! வ்வொரு வருடத்திலும் டிசம்பர் அல்லது னவரி மற்றும் ஜூன் ஆகிய இரண்டு மாதங் ளிலும் தான் இந்த தொழிற்சங்கவாதிக க்கு தோட்டத் தொழிலாளர்கள் மீது பாசம் பாத்துக்கொண்டுவரும்''

''அடடா! நான் அதை மறந்தே போனேன். ந்த மாதத்தில தானே தங்கள் தங்கள் ட்சிகளுக்கு உண்டியல் சேர்ப்பதற்கான ந்தா போம்களை கொடுத்து ஆள்பிடிக்கும் வலை மும்முரமாக நடக்கும்''

''உண்மை தாங்க அண்ணே! இந்த ஆள்பிடிக்கும் தலைவர்மார் தமக்கென சில ஜண்டுகளை நியமித்து கள்ளு, சாராயம் ன்று ஊற்றி அடிதடியிலும் இறங்கி டுவார்கள்.''

''அது சரி தம்பி; அந்த தொழிற்சங்க யாபாரிகள் தான் அடுத்த மாதம் கோதாவில் திக்கப்போகின்றார்கள் என்றால் நீங்கள் ன் இப்போதே நோட்டீஸூம் கையுமா ளம்பிட்டீங்க?''


''அண்ணே! வெள்ளம் போனபின் ணை கட்டுவதில் எந்த பிரயோசனமும் ல்லை. அதனால் தான் வெள்ளம் வருமுன் ணைகட்டத்தயாராகிவிட்டோம்''

''அடே அப்பா! நம்ப பசங்களும் விவரம் தரிந்தவர்கள் தான். ரொம்ப சந்தோசமா இருக்கு. அதுசரி இது என்ன இந்த நோட்டீஸ் கட்டு எல்லாம்''

''அதுங்களா அண்ணே! நம்ப அப்பா அம்மா, சகோதர சகோதரிகளுக்கு ஒரு கேள்விப்பத்திரம் தயாரித்துள்ளோம். அதனை எல்லாம் அவுங்ககிட்ட கொடுத்து விளங்கப்படுத்தப் போறம்''

''என்ன தம்பி? சோதனை வைக்கப் போறீங்களா?''

''ஆமாங்க அண்ணே! இந்த அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல வாழ்க்கையின் சத்திய சோதனையில் இருந்து விடுபடுவதற்கான ஒரு பரீட்சை தான்''



''அப்படி என்ன தம்பி கேள்வி கேடடு இருக்கீங்க?''

''அதுங்களா! அண்ணே; டேய் நடராஜ் அந்த நோட்டீஸை இப்படிக் கொடு'' என்று வாங்கி பெலமாக வாசித்தான் சிவராம்.

* நீங்கள் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கம் எது?

* எத்தனை வருடம் அங்கத்தவராக இருக் கீங்க?

* மாதாந்தம் சந்தா எவ்வளவு?

* இத்தனை வருடத்திலும் நீங்கள் செலுத்திஉள்ள தொகை?

* உங்கள் குடும்பத்தில் மொத்தம் எத் தனை பேர் சந்தா செலுத்துகினறீர்கள்?

* எல்லோருமாக செலுத்திவந்துள்ள மொத்த தொகை எவ்வளவு?

* இந்த தொழிற்சங்கம் உங்களுக்கு அளித்த வாக்குறுதிகள் என்ன?

* இந்த வாக்குறுதிகளை அவை நிறை வேற்றி உள்ளனவா?

* உங்கள் குடும்பத்தில் படித்தவர்கள் எத் தனை பேர்?

* படித்துவிட்டு தொழில் இன்றி இருப்ப வர்கள் எத்தனைபேர்?

* எத்தனை பேருக்கு உங்கள் தலைவர் கள் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்?

* உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட மரணம், திருமணம், விபத்து, வைத்தியச் செலவு என்பனவற்றுக்கு உங்கள் தொழிற்சங்க சந்தாவில் இருந்து ஏதாவது நிதி உதவி களைப் பெற்றுள்ளீர்களா?

* அப்படியானால் காலம் காலமாக நீங் கள் செலுதிதி வந்த சந்தா என்ன ஆனது? அதன் மூலம் கிடைத்த வட்டிக்கு என்ன ஆனது?

* இப்பணத்தை தனிப்பட்ட முறையில் உங்கள் வங்கிக் கணக்கில் மாதாமாதம் போட்டு வைத்திருந்தால் ஒரு நியாயமான தொகை சேர்ந்திருக்கும் அல்லவா?

* உங்களுடைய தொழிற்சங்கத் தலை வர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்?

* இதுவரை எத்தனை அரசியல் கட்சி களில் இருந்து பல்டி அடித்துள்ளார்?

* உங்களிடம் எந்தச் சின்னத்தைக் காட்டி வாக்குக் கேட்டார்?

* இப்போது எந்தச் சின்னத்தின் கட்சி யில் பதவி வகிக்கின்றார்?

* இந்த பல்டிகளினால் உங்களுக்கு கிடைத்த நன்மைகள் என்ன?

* பொதுத்தேர்தல் முடிந்தவுடன் நீங்கள் எத்தனை முறை தாக்கப்பட்டுள்ளீர்கள்?

* உங்கள் வீடுகளும் உடமைகளும் எத்தனைமுறை சூறையாடப்பட்டுள்ளன?

*இப்படி சூறையாடியவர்களுடன், உங் கள் தலைவர்கள் கூட்டாளிகளாகிப் பதவி களைப் பெற்றுக் கொண்டு சுகபோகம் அனுபவிப்பதை நீங்கள், வரவேற்கின்றீர் களா?

இவற்றை எல்லாம் விலக்கி உங்கள் மனச்சாட்சிப்படி உறுதியான நேர்மையான தலைவர்கள் யார்?

உங்களுக்குத் தலைமை தாங்கும் தகுதி யாருக்கு உண்டு? இவற்றை நீங்களே தீர் மானியுங்கள்.

சிவராமன் நோட்டீஸை வாசித்து முடித் தான்.

''தம்பி அருமையான ஐடியா. அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று கட் டிப்பிடித்துக் கொண்டிராமல் தமக்கு சேவை செய்யக் கூடியவர்களை தாமே சுயமாகத் தெரிவு செய்யும் நிலைமையை உருவாக்க வேண்டும். உங்களுடைய இந்த சேவை பாராட்டத்தக்கது. என்னுடைய ஆதரவு என் றும் உண்டு'' என விடை பெற்றார் தணிகா சலம் அண்ணன்.

---

மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# ஜனாதிபதியின் சமையலுக்கு கறிவேப்பிலையாகிய அவலம்

ஜனாதிபதியின் சமையலுக்கு வாசனை யும் ருசியையும் ஊட்டும் கறிவேப் லையின் கதிக்கு தள்ளப்பட்டுவிட்டது ங்கை தொழிலாளர் காங்கிரஸ்.

காங்கிரஸ்காரர்களின் இராஜினாமா டகம், அரசுக்கான ஆதரவை விலக்கிக் ள்ளப் போகிறோம் என்ற மிரட்டல் எது ம ஜனாதிபதியிடம் பலிக்கவில்லை.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு சமூக விருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கத் கு வெளியில்தான் நம்பிக்கை இல்லை றால், அமைச்சரவையிலும் அவர் செல் க்காசாக்கப்பட்டுவிட்டார் என்பது தும் வேதனை அளிக்கிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 14 ரிக்கைகளை முன்வைத்து அரசுடன் டிக்கொண்டது. தள்ளாடிக் கொண்டிருந்த சுக்கு முட்டுக்கொடுத்தது. இது மலை மக்களின் நன்மைக்காகத்தான் என்று அது யபோது சற்று ஆறுதலாக இருந்தது.

ஆனால், எதிர்பார்ப்புகள் எதுவும் றவேறவில்லை.

ஜப்பானிய அரசின் உதவியுடன் தலவாக் ல பிரதேசத்தில் ஐந்து நீர்வீழ்ச்சிகளை ளடக்கிய நீர்மின் திட்டம் உருவாக்கப் டது. இ.தொ.காவின் கடும் எதிர்ப்பால் திட்டம் கைவிடப்பட்டது. தனது மிரட்ட ல் மேல்கொத்மலைத்திட்டம் கைவிடப் டுவிட்டது என்று தம்பட்டம் அடித்துக் ண்டது இ.தொ.கா.

ஆனால், அமைச்சுப் பதவிஒன்றை பெற் கொண்டு ஒரு நீர்வீழ்ச்சியை மட்டும் ளடக்கிய நீர்மின் உற்பத்தித்திட்டத் துக்கு ஆதரவளிப்பதாக அறிக்கை விட்டது.

இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட பாது, ''எங்களுடைய எதிர்ப்பைக் காட்டி அரசின் பழைய மேல் கொத்மலை திட் டத்தை நிறுத்திவிட்டோம். இப்போது ங்கீகரித்திருப்பது முற்றிலும் புதிய ஒரு ட்டம்'' என்று வியாக்கியானம் கொடுத்தது.

எனினும் நடந்தது என்ன? பல ஆயிரம் கோடிருபாய்களைக் கொட்டித் தயாரிக்கப் பட்ட பழைய நீர்மின் திட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும். புதிதாக எந்தத் திட்டத்தையும் தயாரிக்க முடியாது.

இதற்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் மேல் கொத்மலைத் திட்டத்துக்கான நிதி உதவிகள் அனைத்தையும் நிறுத்த போவ தாக ஜப்பானிய அரசு கண்டிப்பாகக் கூறி விட்டதோடு இறுதி முடிவு உடன் வேண் டும் எனவும் நச்சரிக்க ஆரம்பித்துவிட்டது.

இலங்கை அரசு ஜப்பானிய அரசைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. 'இ.தொ.கா. தலைவர் ஆறுமுகனையும், இ.தொ.காவையும் நான் சமாளித்துக் கொள்கிறேன். அவர்களைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். எதைப் போட்டு எப்படி வளைக்கலாம் என்ற மந்திரம் என்னிடம் உண்டு எனக் கூறியதோடு, ஜப்பானிய அரசின் பழைய மேல் கொத்மலைத் திட்டத் துக்கு ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டி விட்டார். அங்கே பூர்வாங்க வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

இ.தொ.காவுக்கு ஏற்கனவே வழங்கப் பட்ட உறுதிமொழிகளையும் உத்தரவாதங் களையும் அரசாங்கம் உதாசீனப்படுத்தி விட்டது என்பதை சுட்டிக்காட்டி அமைச்சர் முத்து சிவலிங்கம் அமைச்சரவைக்கு சமர்ப் பித்த குற்றப் பத்திரிகையும் அமைச்சரவை யில் உதாசீனப் படுத்தப்பட்டது என்பது பிந்திய செய்தி.

அதேபோன்று பெருந்தோட்டத்துறை இளைஞர், யுவதிகளுக்கான ஆசிரியர் மற்றும் அரச துறை நியமனங்களும் இழுத் தடிக்கப்படுகின்றன. இது இ.தொ.காவை மட்டுமல்ல முழு மலையகத்தையுமே அவமானப்படுத்தும் ஒரு செயலாகவே அமைந்துள்ளது.

இந்த நிலையில் இ.தொ.காவின் உறுதி யான நிலைப்பாடு என்ன என்பது தான் கேள்வி. உறுதியான தீர்க்கமான என்ற வார்த்தைகளுக்கும் இ.தொ.காவுக்கும் சம்பந்தமே இல்லை என்பது உலகறிந்த ஒரு விடயமாகிவிட்டது.

முதல் வாரம் அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொள்கிறோம் என்றனர்.

இரண்டாவது வாரம் அரசு எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டது, ஓர் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் என்றனர்.

மூன்றாவது வாரம் அரசாங்கம், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட் டது. எமது அமைச்சர் பதவிகளை இராஜி னாமாச் செய்து விட்டோம் என்று அறிக்கை விட்டனர்.

நான்காம் வாரம் ஜனாதிபதியை சந்தித் துப் பேசிவிட்டு இராஜினாமாக் கடிதங் களையே வாபஸ் பெற்றுக் கொண்டோம் என்று கூறினர். அதோடு மேலும் ஒரு அமைச்சர் பதவி கிடைக்கப் போகிறது. இத் தனையாம் திகதி பதவிப் பிரமாணம் செய் யப்போகிறோம் என்ற செய்தியை கசிய விட்டனர்.

ஐந்தாம் வாரம் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல் இராஜி னாமா, அரசுக்கான ஆதரவை வெட்டிக்கொள் ளப் போகிறோம் என பம்மாத்துக் காட்ட ஆரம்பித்துவிட்டனர்.

இ.தொ.கா. அரசுடன் இணைந்து இன் னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை அதற் குள் எத்தனை பல்டி அடித்துவிட்டனர். இவை இ.தொ.காவின் கோமாளித்தனத்தை முத்திரை குத்தி உறுதிப்படுத்திக் கொண்ட செயல்களாகவே அமைந்து விட்டன.

இ.தொ.கா. மலையகத்துக்காகவும் அங்கு வாழும் மக்களுக்காகவும் சேவை செய்கின்றதா? அல்லது சுயநல நோக்குடன் அமைச்சர் பதவிகளுக்காக காவடி எடுக் கின்றதா?

இ.தொ.காவின் இந்த கோமாளித் தனத்தையும் உறுதியற்ற தன்மையையும் ஜனாதிபதி நன்கு புரிந்து வைத்துள்ளார். இதனால் தன்னுடைய தேவைகளுக்கு தலையாட்டும் பொம்மைகள் என்று கணித்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் வாய் வார்த்தகளை நம்பி தம்பட்டம் அடித்த இ.தொ.காவின் கணக்கு தப்புக்கணக்காகிவிட்டது.

''நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவே நான் போட்டியிடுகி றேன். நான் வெற்றி பெற்றவுடன் நிறை வேற்று ஜனாதிபதி முறையை ஒழித்துவிடு வேன்'' எனத் திகதி குறித்து ஜே.வி.பி.யின ருக்கு எழுத்துமூலம் உறுதிமொழி கொடுத் தார் சந்திரிகா. ஆனால், நடந்தது என்ன? இன்னும் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக வர சட்டத்தையே மாற்ற முனைகின்றார்.

அத்தோடு நின்றுவிடவில்லை. நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நாடாளு மன்றத்தைக் கலைக்கமாட்டேன் என சபா நாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்த ஜனாதிபதி, அந்த மை காய்வதற்குள் நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையாக இருந்த ரணிலின் அரசாங்கத்தையே கலைத்துவிட்டார்.

இப்படி அதிஉயர்மட்டத்தில் எழுத்து மூலம் கொடுத்த உறுதி மொழிகளையே ஜனாதிபதி துச்சமாக தூக்கி எறிந்துவிட் டார்.

பாவம் இந்த இ.தொ.காவினருக்கு வாய் மூலம் அளித்த உறுதி மொழிகள் எம்மாத்திரம்? ஜனாதிபதி தனது தேவை களுக்காக இ.தொ.கா.வினரை அரவணைத் தார். இதே வேகத்தில் உதறியும் விட்டார்.

உண்மை நிலை என்னவென்றால் ஜனாதிபதி சமையலுக்கு சுவை ஊட்டும் நம்பவை, கறிவேப்பிலை போன்று இ.தொ.காவை பயன்படுத்திக் கொண்டார். சாப்பாட்டு மேசையில் அவற்றை தூக்கி எறிந்து விட்டார். இதுதான் உண்மை நிலை.

இனிமேலாவது இ.தொ.கா உறுதியான ஒரு நிலைப்பாட்டை கடைப்பிடிக்குமா? மீண்டும் மக்களின் நம்பிக்கையை பெறுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

சுடர் ஒளியில்
வாராந்தம்



கல்விச் சுடர்

5ஆம் தர
புலமைப் பரிசில் பரீட்சை
மாதிரி வினாத்தாள்கள்
தேர்ச்சி பெற்ற
பரீட்சகர்களால்
தயாரிக்கப்பட்டவை.

வாராந்தம்
புதன்கிழமைகளில்
தவறாமல் பிரசுரமாகும்.

உங்கள் பிரதிக்கு
முந்துங்கள்!


# ஜாக்சன் வீட்டில் சிக்கிய ஆபாசப் புத்தகங்கள்



அமெரிக்காவின் பிரபலபொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் மீது சிறுவன் ஒருவனுடன் செக்ஸ் உறவு கொண்டதாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சாண்டா மரியா நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இந்த விசாரணையின்போது, பிரஸ்தாப சிறுவன், அவனது தாய், ஜாக்சனின் முன்னாள் மனைவி உட்பட பலர் சாட்சியம் அளித்தார்கள்.

இந்த வழக்கில் மற்றொரு புதிய திருப்பமாக அரசு தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் இரண்டு ஆபாசப் புத்தகங்களைத் தாக்கல் செய்தனர். இந்த ஆபாசப் புத்தகங்கள் ஜாக்சனின் பண்ணை வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டவை என்றும் அவர்கள் தெரிவித்தனர். அதில் சிறுவர்கள் நிர்வாண கோலத்தில் படுக்கையில் கிடப்பது போலவும், நீச்சல் குளத்தில் விளையாடுவது போலவும் படங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றை நீதிபதிகள் பார்வையிட்டனர்.

மேலும் மைக்கேல் ஜாக்சனுக்கு எதிராக 3 சாட்சிகளை சேர்க்க அரசு தரப்பு வழக்கறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். அனேகமாக வழக்கு விசாரணை இன்னும் ஒரு வாரத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இப்பொழுது வெள்ளவத்தையில்



தமிழ் பேசும் மக்களின்
தன்மான பத்திரிகைகளான
உதயன்
சுடர் ஒளி
THE SUDAR OLI
கிளைப் பணிமனை
379 முதலாம் மாடி,
காலி வீதி,
கொழும்பு-06.
தொ.பே:- 011 4528699, 0714 15030
(ஹோட்டல் சப்பயருக்கு சமீபமாக)



திருகோணமலையில்...
சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





யாழ். நகரில் குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லாத் தரங்கள்!

நாளைய நாகரிகத்தை
இன்றே அறிமுகப்படுத்துகின்றோம்
நாம் விஜயம் செய்து பாருங்கள்
ஒரு முறை உண்மை புரியும்.

அழகிய புடவைத் திணுசுகளின்
குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்
கிறீன் பலஸ்
எம்போறியம்



பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.



மீண்டும் புதுப் பொலிவுடன்......
உங்களின் இக்காலத் தெரிவுக்கு....



குமரகுரு



புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

KUMARAKURU
TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi.
Tel: 021 228 5971

குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி



இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, மே. 08 ஆம் திகதி வெளியிடப்பட்